# ஹிந்துஸ்தான் கோ-ஆபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிட்.,

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

●

இந்தியாவிலுள்ள முதலில் ஆரம்பிக்கப்பட்ட, இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் தலைசிறந்தது.

2548

●

முன்னேற்றத்தின் ஒளி

| | |
|---|---|
| 1947 ல் புதிய தொழில் | ரூ 12,31,83,760 |
| நடப்பிலுள்ள இன்ஷ்யூரன்ஸ்கள் | 55,63,45,466 |
| ஆயுள் நிதி | 10,63,86,218 |
| 1947 ல் கொடுக்கப்பட்ட க்ளெயிம்கள் | 53,72,172 |
| மொத்த ஆஸ்திகள் | 11,64,90,020 |

●

ஏஜண்டுகள் இல்லாத பிரதேசங்களிலிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறோம். விபரங்களுக்கு எழுத வேண்டுகிறோம்.

டிவிஷனல் மானேஜர்

ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்

தபால் பெட்டி நம்பர் 223,

சென்னை 1.

# உயர்தர
# லீவர் கைக் கடிகாரங்கள்

ஸ்விட்சர்லாந்தில் செய்யப்பட்டு
ஒழுங்காக ஓடக்கூடியவை.
5 வருடங்கள் உத்தரவாதம்.
ஜுவல்களுடன் கூடியவை.



| | | | | |
|---|---|---|---|---|
| 1. ரவுண்ட் அல்லது ஸ்கொயர் க்ரோமியம் கேஸ் | ரூ | 18 | 8 | 0 |
| ,, ,, உயர்தரம் | ரூ | 20 | 8 | 0 |
| ப்ளாட் 4 அல்லது 5 ஜுவல்களுடன் க்ரோமியம் கேஸ் | ரூ | 24 | 8 | 0 |
| 5 அல்லது 7 ஜுவல்கள் ரோல்ட் கோல்ட் 10 வருடங்கள் உத்தரவாதம் | ரூ | 50 | 0 | 0 |
| 15 ஜுவல்கள் க்ரோமியம் உயர்ந்தது | ரூ | 38 | 0 | 0 |
| 15 ஜுவல்கள் ரோல்ட்கோல்ட் 10 வருஷங்கள் உத்தரவாதம் | ரூ | 75 | 0 | 0 |
| 2-ம் 3-ம் ரெக்டாங்கில் அல்லது டோனு. நம்பர் 4 கர்வ் ஷேப் ப்ரகாசமான க்ரோமியம் கேஸ் 4 அல்லது 5 ஜுவல்கள் | ரூ | 40 | 0 | 0 |
| ரோல்ட்கோல்ட் 10 வருடங்கள் உத்தரவாதம் | ரூ | 55 | 0 | 0 |
| 15 ஜுவல்கள் ரோல்ட்கோல்ட் | ரூ | 85 | 0 | 0 |
| இதில் உயர்ந்தது | ரூ | 90 | 0 | 0 |

தபால் செலவு தனி. இரண்டு கடிகாரங்களுக்கு ஒரே சமயத்தில் ஆர்டர் கொடுத்தால் தபால் செலவு இனும்.

## பாரகான் வாட்ச் கம்பெனி

தபால் பெட்டி நம்பர் 11419,
கல்கத்தா 6. (S)



# இந்தியாவின் புகழ்




# லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

## கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திரா ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள்:

## சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர், செகந்திரபாத்,
பெஜவாடா, மதுரை.

# பொருள் அடக்கம்

**மலர் 15 : இதழ் 5**

○


| | | |
|---|---|---|
| ஒரு வருஷ சுதந்திரத்தில் ... | தலையங்கம் | 1 |
| எனது இந்தியா ... | மகாத்மா காந்தி | 5 |
| புதிய சங்கற்பம் ... | ஜவாஹர்லால் நேரு | 7 |
| படங்கள் ... | ... | 9—10 |
| காந்தி ... | ரஜனி பாமி தத் | 11 |
| சுதந்திரமும் விஞ்ஞானமும் ... | ஐன்ஸ்டைன் | 16 |
| தீவிரவாதியும் மிதவாதியும் ... | மாஜினி | 18 |
| சுதந்திரம் ... | ஜே. பி. எஸ். ஹால்டேன் | 21 |
| சிறை வாசம் ... | சுப்பிரமணிய சிவம் | 27 |
| கம்யூனிஸ்ட் சமூகம் ... | ஸ்டாலின் | 31 |
| கஜாரு ... | ப. ஸ்ரீநிவாசன் | 33 |
| சுதந்திர இந்தியாவின்... ... | காலக்கோலன் | 37 |
| ஆந்திரர் படை யெடுப்பு ... | தி. நா. சுப்பிரமணியன் | 44 |
| பண்பாட்டுக்கு சில ஆபத்துக்கள் ... | சி. இ. எம். ஜோட் | 49 |
| படங்கள் ... | ... | 51—58 |
| பொது உடைமை சாத்தியமே ... | ச. ராஜகோபாலாச்சாரியார் | 59 |
| கட்ட பொம்மு ... | ரகுநாதன் | 61 |
| இருட்டு ... | புதுமைப்பித்தன் | 67 |
| குட்டிக் கதைகள் ... | ... | 68 |
| அர்த்த சாஸ்திரத்தில்... ... | கௌடில்யன் | 72 |
| வைரங்கள் ... | சி. வி. ராமன் | 75 |
| தலைச்சன், இடைச்சன்... ... | சி. ந. வைத்தீஸ்வரன் | 81 |
| பெண்டாட்டி தாசர்கள் ... | 'ஆண் மகன்' | 86 |
| வருகிறார்கள் போகிறார்கள் ... | ல. சண்முகசுந்தரம் | 87 |
| தண்ணீர்ப்பாம்பு, நல்லபாம்பு... ... | 'நவநக்கீரன்' | 91 |
| படங்கள் ... | ... | 99—100 |
| அசோகன் ... | கு. அழகிரிசாமி | 101 |


அட்டைப்படம் : என். ராமகிருஷ்ணா, மாயவரம்

*

சர்வதாரி ஆவணி

உங்களுக்கு அறிமுகமான

## மதருஸ் பென்ஸில் பாக்டரி

(சிறந்த பென்ஸில் தயாரிப்பவர்கள்)

★

## ஹோ & கம்பெனி

(அச்சுத் தொழிலில் வெகு காலமாக பெயரும் புகழும் படைத்தவர்கள்)

★

## வி. பெருமாள் செட்டி & ஸன்ஸ்

(உயர்தர ஸ்டேஷனரி & புத்தக வியாபாரிகள்)

5, ஸ்டிரிங்கர்ஸ் தெரு,
மதருஸ் 1.

ADS.

சர்வதாரி
மலர் 15

# சக்தி

ஆவணி
இதழ் 5

மெய்ப் பொருள் காண்பது அறிவு

•

## ஒரு வருஷ சுதந்திரத்தில்

மற்றொரு ஆகஸ்டு, 15 வந்துவிட்டது. நம் நாடு அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, அரசியல் சுதந்திரம் பெற்று இன்றோடு ஒரு வருஷ மாகிறது. இந்த ஒரு வருஷ காலத்தில், இந்தப் பரந்த நாட்டில் எத்தனையோ சம்பவங்கள் நடைபெற்றுவிட்டன. அதிலும் இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆதிக்கம் நிலை பெற்றிருந்த சமயத்தில், பல வருஷங்களில் நடக்கக் கூடிய காரியங்கள், சென்ற ஒரே வருஷத்தில் நடைபெற்றன. சுருக்கமாகச் சொன்னால் அநேகமாக தினந்தோறும் தேசத்தில் ஏதாவது ஒரு புதுச் சம்பவம் நடைபெற்று வந்ததாகவே சொல்லவேண்டும். இந்தச் சுதந்திர தினத்திலே, சென்ற, வருஷத்தில் நாம் கண்ணாரக் கண்டு, கேட்டு, அனுபவிக்கவும் செய்த பல இன்ப துன்ப அனுபவங்களை ஞாபகப்படுத்திப் பார்ப்பது அவசியம். அதே நேரத்தில் ஒவ்வொரு விஷயத்தையும் சமாளித்து, நம் எதிர்கால வாழ்வுக்கு ஆக்கம் தேடும் முறையில் நாம் என்னென்ன செய்தோம், என்னென்ன செய்திருக்கவேண்டும், இனிச் செய்ய வேண்டிய காரியங்கள் யாவை என்பனவற்றையும் சிந்திப்பது சுதந்திர இந்தியன் ஒவ்வொருவனுடைய கடமையுமாகும்.

சென்ற வருஷம் இதே ஆகஸ்டு 15-ம் தேதியில் தேசத்தைத் துண்டாடிப் பிரிப்பதற்கு வழி செய்தன ஒரு கூட்டத்தாரின் வகுப்புவாத அரசியலும், அதற்கு வித்தும் போட்டு தூபமும் போட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சியும். இந்தப் பிரிவினையினால் இந்திய மக்களுக்கு மன வேதனையும் ஏற்பட்டது; சரீர வேதனையும் ஏற்பட்டது. இந்தப் பிரிவினையின் காரணமாக இந்தியாவுக்கு நன்மை எதுவும் ஏற்படாததுடன், பிரிவினைக்காகப் போராடிய பாகிஸ்தான் பக்தர்களுக்கும் நன்மை எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அது ஒரு பக்கம் இருக்கட்டும்.

சென்ற வருஷம் ஆகஸ்டு 15-க்குப்பின் திடீரென்று வங்காளத்திலும் பஞ்சாப்பிலும் வகுப்புக் கலகங்கள் ஏற்பட்டன. சில வகுப்பு வாத வெறியர்களின் தூண்டுதலால், லக்ஷக்கணக்கான பொது மக்கள் போராடிச் செத்தார்கள். இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கும் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கும் லக்ஷக் கணக்கான அகதிகள் இடம் கஷ்டப்படுகிறார்கள். ஹைதராபாத்தின் கொட்டத்தை அடக்க,

பெயர்ந்து போகவேண்டிய நிலை ஏற்பட்டது. இது வரைக்கும் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்த அகதிகளின் தொகை சுமார் 55 லட்சம். இத்தனை பேருக்கும் ஸ்திரமான குடியிருப்புக்கும், ஜீவனத்துக்கும் வழிசெய்து கொடுக்கவேண்டிய மிகப் பெரிய பொறுப்பை இந்தியா ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் ஏற்படும் பணச் செலவு கொஞ்ச நஞ்சமல்ல. இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிட்டால், பண்டிதநேரு சென்ற வருஷம் கூறியதுபோல, 'எதிர் கால சரித்திரத்தில், ஒரு அரசாங்கத்தின், சமூக அமைப்பின், அஸ்திவாரத்தையே தகர்த்து விடத்தக்க ஒரு ராக்ஷஸப் பிரச்னையை இந்திய மக்கள் தைரியமாக நின்று, கடைசியாகத் தேச நன்மைக்குகந்த வகையில் தீர்த்துவிட்டார்கள் என்று கூறப்படும்.'

பிரிட்டிஷ் அரசாங்கம் போகும்போது சமஸ்தானங்களை சுதந்திர அரசுகள் என்று பிரகடனம் செய்துவிட்டது. இந்திய யூனியனின் மொத்த விஸ்தீரணம் 12 லட்சத்து 20 ஆயிரத்து 99 சதுர மைல்; அதில் சமஸ்தானங்களின் விஸ்தீரணம் மட்டும் 5 லட்சத்து 87 ஆயிரத்து 888 சதுர மைல். இந்திய யூனியனின் ஜனத்தொகை 31 கோடி 89 லட்சத்து 12 ஆயிரத்து 506 பேர்; அதில் சமஸ்தானங்களின் ஜனத்தொகைமட்டும் 8 கோடி 88 லட்சத்து 8 ஆயிரத்து 434 பேர். ஆகவே, மொத்த விஸ்தீரணத்தில் 48 சதவிகிதம் சமஸ்தானப் பகுதிகளாகவும், மொத்த ஜனத்தொகையில் சமஸ்தான ஜனத்தொகை 27 சதவிகித மாகவும் இருப்பதைக் காண்கிறோம். இவற்றில் ஹைதராபாத் சமஸ்தானத்தைத் தவிர பிற சமஸ்தானங்கள் யாவும் இந்திய யூனியனில் சேர்ந்து விட்டன. காஷ்மீர சமஸ்தானத்தைத் தானே அபகரித்துக் கொள்ள வேண்டும் என்று கருதி பாகிஸ்தான் ஆசைப்பட்டதன் விளைவே கடந்த பத்து மாத காலமாக விடாமல் நடைபெற்று வரும் காஷ்மீர யுத்தம். 22-10-47 அன்று மலை ஜாதியினர் காஷ்மீரத்தைத் தாக்கினர். பாகிஸ்தான் அரசாங்கத் துருப்புகளே கடந்த சில மாத காலமாக போராடுகின்றன. பிரகடனம் செய்யப்படாத ஒரு யுத்தம் பத்து மாத காலமாக நடந்து வருகிறது. இதனால் காஷ்மீரத்துக்கும் இந்தியாவுக்கும் எண்ணற்ற கஷ்டங்கள் ஏற்பட்டுக்கொண் டிருக்கின்றன. இப்போது இரண்டு சாராரையும் மத்தியஸ்தம் செய்துவைக்க ஐ. நா. வின் கமிஷன் ஒன்று வந்திருக்கிறது. இதன் முடிவு இந்திய யூனியனுக்கு சாதகமாக இருந்தாலும் பாதகமாக இருந்தாலும், காஷ்மீர நாட்டுப் பொது ஜனங்கள் எந்தக் காலத்திலும் பாகிஸ்தானுக்கு அடிபணியப் போவதில்லை. என்பது திண்ணம்.

அடுத்தபடியாக இந்திய யூனியனுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய தொல்லை ஹைதராபாத். 24-11-47 ஹைதராபாத்துடன் தற்காலிக ஒப்பந்தம் செய்து கொண்டது இந்திய யூனியன். இந்த ஒப்பந்தத்தின் பாதுகாப்பிலே ஹைதராபாத் பாஸிஸத்தைக் கடைப் பிடித்து கையாளவும் தொடங்கி விட்டது. ரஸாக்கர் கூட்டத்தின் அட்டூழியத்தால், சமஸ்தான மக்களும் அடுத்துள்ள இந்திய யூனியன் மக்களும் தினமும் கஷ்டப்படுகிறார்கள். ஹைதராபாத்தின் கொட்டத்தை அடக்க,

பலவிதமான முற்றுகைகள் போடப்பட்டுள்ளன. சிட்னி காட்டன் என்ற ஒரு ஆஸ்திரேலிய விமானி இந்திய யூனியனின் முற்றுகையையும் மீறி ஹைதராபாத்துக்கு வந்து போய்விட்டான். இதற்கு ஹைதராபாத் உடந்தையாக இருக்கவில்லை என்று சொல்ல முடியாது. இப்படிப்பட்ட அவமானத்தை இனியும் சகித்துக்கொண் டிருக்க முடியாது. முற்றுகைகளுடன் நின்று விடாமல் இந்திய யூனியன் இன்னும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்தும், ஹைதராபாத் பொது மக்களுக்கு ஆதரவளித்தும், அவர்களைப் போராடத் தூண்டியும் வரவேண்டியது அவசியம். ஹைதராபாத்தில் மன்னர் ஆட்சியைப் பரிபூரணமாக ஒழித்துவிட வேண்டும். ஹைதராபாத்தில் முடியாட்சி நீடிக்கும் வரையில் பொது மக்களுக்கு சுபிட்சம் ஏற்படுவது என்பது சிரம சாத்தியமான காரியமாகும். பாகிஸ்தானுக்கும் ஹைதராபாத்துக்கும் ஐந்தாம் படை வேலை செய்பவர்களைக் கடுமையான நடவடிக்கை எடுத்து ஒழிக்க வேண்டியதும் இன்றைய அவசரமான கடமையாக இருக்கிறது.

இந்தியா சுதந்திரம் பெற்றதும், தேசத்தின் பல பகுதிகளில் முக்கியமாகச் சென்னை மாகாணத்தில் உணவுப் பொருளுக்குப் பஞ்சம் ஏற்பட்டது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. கள்ள மார்க்கெட், பருவ மழை பெய்யாதது, வெளி யிடத்திலிருந்து வந்து இறக்குமதி யாகும் தான்யம் குறைந்தது முதலியவையே உணவுப் பஞ்சத்துக்கு முக்கியமான காரணங்கள். சென்ற வருஷத்தில், அதற்கு முந்திய வருஷத்தை விட 10 லட்சம் டன் உணவுத் தானியம் அதிகமாக உற்பத்தியானதாக அறிகிறோம். 110 கோடி ரூபாய்க்கு வெளி நாடுகளி லிருந்தும் உணவுப் பொருள்கள் வாங்கப்பட்டுள்ளன. அப்படி யிருந்தும் உணவுக் கஷ்டம் குறையாமல், அதே நேரத்தில் விலைவாசிகளும் அதிகமாகிக் கொண்டுபோவதற்கு முக்கியமான காரணம் கள்ள மார்க்கெட் என்றே தோன்றுகிறது. ரேஷன் இருந்தபோதும், இல்லாதபோதும் பதுக்கல்காரர்கள் தானியத்தை வெளியில் விடாமல் கொள்ளை லாபத்துக்கு விற்று தேச மக்களின் உயிரைக் கொண்டு சுகபோகம் அனுபவித்தார்கள். 'கள்ள மார்க்கெட்காரர்களைத் தூக்கில் போடவேண்டும்' என்று பண்டித நேரு சொன்னதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடுமையான நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், பதுக்கல்காரர்கள் எளிதில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அவர்களிடம் நயமும், பயமும் பலித்ததாகக் கூற முடியாது. கள்ளமார்க்கெட்டை ஒழிப்பதில் அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் போதாது என்றே எண்ணத் தோன்றுகிறது. இனி தேச மக்களின் சுபிட்சத்துக்காக பதுக்கல்காரர்களின் சாக்குகளைப் பறித்து, நாடெங்கும் சரச விலை உணவுத் தான்யக் கடைகளைத் திறப்பது ஜீவாதாரமான காரியமாகிறது. துணி விஷயத்திலும் அரசாங்கம் போதிய நடவடிக்கைகள் எடுக்கும் என்றே எதிர் பார்க்கிறோம்.

பஞ்சாப் கலவரம், காஷ்மீரப் படை எடுப்பு, உணவுத் தான்யங்கள் வாங்கியது, மேலேறிக் கொண்டு போகும் விலைவாசிகள் இவற்றால் அரசாங்கம் சென்ற வருஷத்தில் ஏராளமான பணத்

தைச் செலவிட நேர்ந்தது. பொருளாதார நெருக்கடி எற்பட்டுவிடுமோ என்று சந்தேகப்பட்டபொழுது, "நாம் நம் வசதிகளுக்கு மீறிய வகையில் வாழ்க்கை நடத்திவிடவில்லை அல்லது நாம் 'பாப்ப'ராகப் போவதில்லை" என்றும், "திர்மானமான, பரிபூரணமான, முயற்சியால் 1949-50 வருஷ வரவு செலவு திட்டத்தை சரிக்கட்டிவிட முடியும்" என்றும் நிதிமந்திரி சென்ற வருஷம் நவம்பரில் கூறினார். பொருளாதார நெருக்கடியைச் சரிக்கட்ட முயன்றுகொண்டிருக்கும் இந்த நெருக்கடியான நிலையில், ஜமீன், இனாம்களுக்கு கோடிக் கணக்கான பணத்தை நஷ்ட ஈடாகக் கொடுக்க முயலுவது தவறான காரியம் என்று இங்கே குறிப்பிடவிரும்புகிறோம்.

மேற் கூறிய கஷ்டங்களுடன் முதல் சுதந்திர வருஷத்தில் நடைபெற்ற பெரிய துக்ககரமான சம்பவம் தேசத்தின் தந்தை மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்டது. தேசத்துக்கு நேர்ந்த இந்த நஷ்டத்தை நினைக்கவே மனம் கூசுகிறது ஒவ்வொரு கஷ்டமான சந்தர்ப்பத்திலும வழி காட்டிக்கொண்டிருந்த மகானை வகுப்புவாத வெறி, காணாமல் போக்கடித்துவிட்டது. இந்தப் படிப்பினையைக் கொண்டேனும் மக்கள் வகுப்புவாத வெறியர்களை நிர்மூலமாக்கி, சகோதரத்துவத்தையும, அன்பையும் தங்கள் நடைமுறை வாழ்க்கையில் கைக்கொள்ளுவார்களாக! வகுப்புவாத அபாயத்தை ஒழிக்க அரசாங்கமும் இனி கொஞ்ச காலத்துக்கு கண்விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகிறது.

மேற் கண்ட கஷ்டங்களைத் தாங்கிக்கொண்டு தேச நலனுக்குகந்த பல காரியங்களை அரசாங்கம் செய்து வரவேண்டியிருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் பலனாக சகல அம்சங்களிலும் பிற்போக்கான நிலையில் இந்தியா இருந்தது. சுதந்திரம் பெற்றதிலிருந்து விஞ்ஞான ஆராய்ச்சிகள், யந்திர தொழில்கள், விவசாய அபிவிருத்தி போக்குவரத்து மார்க்கங்களை எற்படுத்துதல் தபால், தந்தி இலாக்காக்களை அபிவிருத்தி செய்தல், துறைமுக அபிவிருத்திகள், பெண்களுக்கு சொத்துரிமை வழங்கி ஒருதார விவாக முறையை எற்படுத்துதல், அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைத்தல், கல்வி முறையில் பல புதிய மாறுதல்களைச் செய்தல் முதலிய அநேக காரியங்களையும் அரசாங்கம் தொடங்கி நடத்த முனைந்துள்ளது. ஒரு கமிட்டியினர் கூடித் திருத்தி அமைத்த புதிய அரசியலைப்பற்றி வேறோர் இடத்தில் விரிவான ஒரு கட்டுரையை வெளியிட்டிருக்கிறோம்.

கடைசியாக ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டிய விஷயம்: நாம் அரசியல் சுதந்திரம் பெற்றிருந்தாலும். பொருளாதார சுதந்திரம் பெற்று விடவில்லை. இந்தச் சுதந்திரம் கிட்டவேண்டுமானால், சமூகத்தில் உற்பத்தி சக்திகள் பெருகி, நாச சக்திகள் ஒழியவேண்டும். பொது மக்களின் எழ்மை நிலையைப் போக்கி, பொருளாதார சமத்துவத்தை நிலைநாட்டவேண்டும். பாரதியார் கூறியபடி எழை என்றும் அடிமை என்றும் இல்லாத எவனும் இந்தியாவை சிருஷ்டிக்க வேண்டும். இதற்குரிய ஆக்க முயற்சிகளில் அரசாங்கமும் பொது மக்களும் ஈடுபட்டு உழைப்பதுதான் இனி ஆற்றக்கூடிய தேசபக்திப் பணி என்பதைக் கூற விரும்புகிறோம்.



# எனது இந்தியா

மகாத்மா காந்தி

இந்தியா கர்ம பூமியாகவே இருக்கும்; போக பூமியாக இருக்க முடியாது. எந்த இந்தியாவில் பஞ்சைப் பாமரர்களின் சொல் அம்பலம் ஏறுமோ, எந்த இந்தியாவை அவர்கள் தமது என்று உணர்வார்களோ, அந்த இந்தியாவுக்காகவே நான் உழைப்பேன். உயர்வு தாழ்வற்ற ஜன சமுதாயத்தைக் கொள்ளும் இந்தியாவுக்காக உழைப்பேன்; எல்லா ஜாதியினரும் ஒற்றுமைப் பட்டு இங்கிதமாயிருக்கும் இந்தியாவுக்காகவே உழைப்பேன். அந்த இந்தியாவில் தீண்டாமையின் சாபத் தீட்டுக்கும் போதைப் பொருள்களுக்கும் இடம் கிடையாது. நாம் உலகத்து மக்களைச் சுரண்டாமலும், சுரண்டவிடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டுமானால், நம்மிடம் சின்னஞ் சிறு படையே இருக்க வேண்டும்; என்னைப் பொறுத்த வரையில் சுதேசம் விதேசம் என்ற பாகுபாட்டை வெறுக்கிறேன். இதுவே இந்தியாவைப் பற்றிய என் கனவு. வேறு எதுவும் என்னைத் திருப்திப்படுத்த முடியாது.

விடுதலையும் வலுவும் இந்தியா பெற வேண்டும் என எண்ணுகிறேன்; ஏனெனில் அப்போது தான் இந்தியா உலகத்தின் முன்னேற்றத்துக்காக, மன சாரத் தன் புனிதமான தியாக சேவையைச் செய்ய முடியும். இந்தியாவின் விடுதலை சமாதானத்தின் மீதும், யுத்தத்தின் மீதும் உலகம் கொண்டுள்ள கண்ணோட்டத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்க வேண்டும். இந்தியாவின் சக்தியற்ற நிலை மனித குலத்தையே பாதிக்கிறது. ஐரோப்பாவின் காலடியிலே சரணாகதி யடையும் இந்திய மனித குலத்துக்கு நம்பிக்கை ஊட்ட முடியாது. இந்தியா மட்டும் முழு மூச்சோடு எய்ப்புஇளைப்பின்றி, இந்திய நாகரிகத்தை அதீதமான முறையில் அழிக்கவரும் சூழ்ச்சிகளை எதிர்த்து, தியாகவேள்வித் தீயில் பாய்ந்தால், அது இதுவரையிலும் நிலைத்து வந்த நாகரிகத்தை இனியும் நிலை நிறுத்தி, உலகத்தின் முன்னேற்றத்துக்கும் சமாதானத்துக்கும் சிறந்த சேவை செய்ததாகும்.




எனது நாடு விடுதலை யடைய

வேண்டும்; ஏனெனில் எனது நாட்டிலிருந்து உலகம் ஏதேனும் கற்றுக்கொள்ளக் கூடும். எனது நாட்டின் செல்வங்கள் உலக நலனுக்காகப் பயன் படக் கூடும். குடும்ப நலனுக்காகத் தனிமனிதன் சாக வேண்டும். கிராம நலனுக்காகக் குடும்பம் சாகவேண்டும். ஜில்லா நலனுக்காகக் கிராமம் சாகும்; மாகாண நலனுக்காக ஜில்லா சாகும். நாட்டின் நலனுக்காக மாகாணம் சாகும் என்று சுதந்திர லட்சியம் கற்றுக் கொடுப்பது போல், உலகின் நலனுக்காக, அவசியம் நேர்ந்தால், ஒரு நாடே சாகவும் தயாராயிருக்கவேண்டும்.

இந்தியா உயர வேண்டும் என்றால் உலகம் அதன்மூலம் பயன்பெற வேண்டும் என்றுதான் அதன் அர்த்தம். மற்ற தேசங்களின் அழிவிலே, இந்தியா மேலோங்கக் கூடாது. என்னுடைய ஆசை சுதந்திரத்துக்கும் மேலானது. இந்திய விடுதலையின் மூலம் மேற்கத்திய சுரண்டல் முறையின் இருப்புப் பாதங்களுக்கிடையே நசுங்கும் பாமர மக்களையும் விடுபெறச் செய்யவேண்டும் என்பதே என் நோக்கம்.

இந்தியா பிற நாடுகளைச் சுரண்டி வாழ்ந்தால் (யந்திரமயமாகும் போது அப்படி நேரக் கூடும்)—அது பிறநாடுகளுக்கு ஒரு சாபத்தீடு; உலகுக்கு ஒரு சிம்ம சொப்பனம்.

தேசிய சர்க்கார் எந்த மாதிரியான கொள்கையைக் கடைப் பிடிக்கும் என்பதை என்னால் கூற முடியாது. நான் விரும்பும் அளவுக்கு நான் அதைக் காண முடியாது. அப்படிச் செய்தால், கூடுமானவரையிலும் அஹிம்சா பூர்வமான பாதையிலே செல்லும்படியே ஆலோசனை கூறுவேன். அதுவே உலக சமாதானத்துக்கும், புதிய சமுதாய அமைப்பு முறைக்கும் இந்தியா செய்யக் கூடிய சிறந்த சேவையாகும். இந்தியாவில் எத்தனை வித மக்கட் பிரிவினை இருந்தாலும் சுதந்திர இந்தியாவில் அவர்கள் எல்லோரும் ஒன்றுபட்ட குரல் படைத்தவர்களாயிருப்பார்கள் என்றே நான் எதிர்பார்க்கிறேன்.

*

**சுதந்திரம் என்பது…**

……அடுத்தபடியாக, சுதந்திரமாக இருப்பது நமக்குக்கிடைத்த ஒரு சந்தர்ப்பம்தான் என்றும், பொது வாழ்வில் அது ஒரு யோக்கியதைதான் என்றும், இழந்த சந்தர்ப்பத்துக்கு ஈடு கட்டி நம் நாட்டின் பெருமையைப் புலப்படுத்துவதற்காக நிர்மாண வேலையில் ஈடு பட்டு உழைக்கவேண்டிய உழைப்பு என்றும் உணரவேண்டும். —சி. ராஜகோபாலச்சாரியார்

**அது முகஸ்துதிதான்**

தனி மனிதர்களின் தினசரி செயல்முறையிலிருந்தும் அரசாங்கத்தின் செயல் முறையிருந்தும் அவருடைய (மகாத்மாவினுடைய) போதனையைப் பிரித்து ஒதுக்கிவைத்து, அவர் விரும்பிய முறையில் அவருடைய வார்த்தைகளை நம் காரியாம்சங்களுக்கு வழிகாட்டும்படி செய்து கொள்ளாமல், அவருடைய நினைவுக்கும் வார்த்தைகளுக்கும் நாம் பக்தியும், வணக்கமும் செலுத்திக்கொண் டிருந்தால், அரசியலுக்கும் அவர் பிரசாரம் செய்துவந்த நற்குணங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் நடுவே ஒரு சுவரை எழுப்பினோமென்றால், நம்முடைய வணக்கம் வெறும் முகஸ்துதியாகப் போய்விடும். —சி. ராஜகோபாலாச்சாரியார்



# புதிய சங்கற்பம்

ஜவாஹர்லால் நேரு

✻

இந்தச் சுதந்திர தினத்தன்று பிரதம மந்திரி பண்டித நேரு விடுத்துள்ள செய்தி இது: 'நாம் செய்தவற்றை அதிகமாக நினைத்துப் பாராமல், நாம் செய்யாமல் விட்டு விட்டதையும் தப்பிதமாகச் செய்து விட்டதையுமே நினைத்துப் பார்க்கவேண்டும்.'

★

ஆகஸ்டு 15-ம் தேதி வந்தது. பிரிவினையினால், வேதனை ஏற்பட்டிருந்தும் கூட நம்முடைய சாதனையைக்குறித்து நாம் பெருமகிழ்ச்சி கொண்டோம். சுதந்திர சூரியனையும், சுதந்திரம் அளிக்கக்கூடிய சந்தர்ப்பத்தையும் எதிர்நோக்கினோம். ஆனால் சூரியன் உதயமாய் விட்டது என்றாலும், அது கருமேகங்களால் மறைக்கப்பட்டிருந்தது. அதனால் அந்தச் சமயம் நமக்கு (மங்கலான ஒளி நிலவும்) சந்தியா காலம் போலவே இருந்தது. அந்தச் சந்தியா காலம் மிகவும் அதிகமாக நீடித்துவிட்டது. பகல் போதின் பிரகாசம் இனிமேல்தான் தோன்ற வேண்டியிருக்கிறது. ஏனென்றால் சுதந்திரம் என்பது அரசியல் ரீதியில் செய்துகொள்ளும் தீர்மானமல்ல; அல்லது புது அரசியல் முறையை ஏற்படுத்திக் கொள்ளுவதும் அல்ல; அத்துடன் மிகவும் முக்கியமான விஷயமாகிய பொருளாதாரக் கொள்கையை நிர்ணயிக்கும் விஷயமும் கூட அல்ல. சுதந்திரம் அறிவையும், உள்ளத்தையும் பொறுத்த விஷயம். அறிவு குறுகி, இருளடைந்து போய், உள்ளத்திலும் கசப்பு வெறுப்பு ஆகியவை நிறைந்துவிட்டால் அப்புறம் சுதந்திரம் என்பது இல்லாமல் போய்விடும்.

மற்றொரு ஆகஸ்டு 15-ம் தேதி வந்திருக்கிறது. எத்தனையோ விஷயங்கள் நடைபெற்றிருக்கின்றன என்றபோதிலும் கூட இது நமக்கு ஒரு புனித தினமாகவே இருக்கிறது. சென்ற வருஷத்தில் பெருமைப்படத்தக்க அநேக காரியங்கள் சாதிக்கப்பெற்றிருக்கின்றன. நாமும் நம் நீண்ட பிரயாணத்தில் சிறிது தூரம் முன்னேறி வந்துவிட்டோம். ஆனால் சென்ற வருஷம் துக்கத்தாலும் அவமானத்தாலும் நிரம்பியிருக்கிறது. இந்தியாவின் எதிர்காலத்தை ரக்ஷிக்கும் அம்சமாக விளங்கிய மகாசக்திக்குத் துரோகம் இழைக்கப்பட்டது. சென்ற வருஷத்தில் தேசத்தின் தந்தை

கொலை செய்யப்பட்டார். அந்தக் கொலையில் அடங்கியிருந்த பாவகரமான நீசத்தனத்தின் வெற்றியை, சென்ற வருஷமானது கண்ணாரக் கண்டது. நம்மில் யாருக்குமே இதைவிட வேறு என்ன அவமானமும், துக்கமும் இருக்க முடியும்?

நாம் எப்படிக் கொண்டாட வேண்டுமோ அப்படி இந்தப் புனித தினத்தைக் கொண்டாடுவோம். நம்கொண்டாட்டம்வீண் ஆடம்பரமாகவோ, சம்பிரதாய பூர்வமாகவோ இருக்கக்கூடாது. அது இதயத்தைப் பரிசோதனை செய்வதாகவும், நம் லட்சியத்துக்கு நம்மைப் புதிதாக அர்ப்பணம் செய்துகொள்ளுவதாகவும் இருக்க வேண்டும். நாம் செய்தவற்றை அதிகமாக நினைத்துப் பாராமல் நாம் செய்யாமல் விட்டுவிட்டதையும், தப்பிதமாகச் செய்து விட்டதையுமே நினைத்துப் பார்க்க வேண்டும். தங்கள் உடைமைகளை எல்லாம் இழந்து, வீடுவாசலற்ற ஆண்டிகளாய் அலையும் லட்சக்கணக்கான அகதிகளைப்பற்றி நினைத்துப் பார்ப்போமாக. இன்னும் தொடர்ந்து துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் இந்தியாவின் பொதுமக்களைப் பற்றி நினைத்துப் பார்ப்போமாக. அவர்கள் நம்மை நம்பிக்கையுடன் எதிர் நோக்கினர்கள்; தங்கள் துயர வாழ்வு சீர்பெறு மென்று பொறுமையோடு காத்திருந்தார்கள். இந்தியாவின் ஏராளமான மூலப் பொருள்களைப் பற்றியும் நாம் நினைத்துப் பார்ப்போமாக. அவற்றை எடுத்து பொது நன்மைக்காகப் பயன்படுத்தினல் தற்போதைய நிலை மாறி, இந்தியா வளம் கொழிக்கும் பெரிய நாடாகிவிடும். இந்த மாபெரும் காரியத்தைச் சாதிக்க நம் முடைய சர்வ பலத்தையும் பிரயோகிப்போமாக. ஆனல் எல்லாவற்றையும் விட, மகாத்மா காந்தி நமக்குக் கற்றுத் தந்த பாடங்களையும், நமக்காக அவர் கையாண்ட கொள்கைகளையும் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளுவோமாக. இந்தப் பாடங்களையும், கொள்கைகளையும் நாம் மறந்து விட்டோமானல், நாம் நம் லட்சியத்துக்கும், நம் தேசத்துக்கும் துரோகம் செய்தவர்களாவோம்.

ஆகவே, இந்த வருஷாந்திர சுதந்திர தினத்தில் சுதந்திர இந்தியாவின் மகத்தான லட்சியத்துக்காகவும், இந்திய மக்களின் லட்சியத்துக்காகவும் நம்மை நாம் மறுபடியும் புதிதாக அர்ப்பணம் செய்து கொள்ளுகிறேம். அதற்கு நாம் தகுதியுடையவர்கள் என்பதை நிரூபிப்போமாக. ஜே ஹிந்த்!

*

### கட்டாய பாஷை

கட்டாயமாகத் திணிக்கப்பட்ட ஒரு பாஷையைக் கைக்கொள்ளுவதற்காகச் செய்த முயற்சிகள் யாவும் பலனற்றுப் போய்விட்டன.

—மகாத்மா காந்தி

### முரண்பாடு கிடையாது

தனிப்பட்ட கொள்கைக்கும் அரசியல் கொள்கைக்கும் முரண்பாடு என்பது கிடையாது.

—மகாத்மா காந்தி



படிமிசைக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குள்ளே முதன்மை உற்றாய்

—பாரதியார்



ரஜனி பாமி தத் உலகக் கம்யூனிஸ்டுத் தலைவர்களில் மிகவும் பிரக்கியாதி பெற்ற ஒருவர்; மேதை; இங்கிலாந்து வாசி; லேபர் மந்த்லி என்ற பத்திரிகையின் ஆசிரியர். இந்தக் கட்டுரை லேபர் மந்த்லி கம்யூனிஸ்டுப் பிரகடன நூற்றாண்டு மலரில் வெளிவந்ததின் சாரம்.

# காந்தி

★

**ரஜனி பாமி தத்**



காந்தி எப்படி இந்தியாவுக்காகவும் மனித சமுதாயத்துக்காகவும் போராடி வாழ்ந்தாரோ அப்படியே உயிரையும் நீத்தார். மனித விடுதலைக்காகப் போராடிய வீரர்களான ஆப்ரகாம் லிங்கனும், மாரட்டும், ஜாரஸும் எப்படி ஒரு கொலைபாதகனின் கையால், கெடுமதிக்காரர்களின் கைக் கூலியால் கொல்லப்பட்டார்களோ, அதுபோலவே காந்தியும் இறந்தார். அரை நூற்றாண்டுக்கு மேலாகத் தாம் வகித்து வந்த தலைமைப் பதவியை விட்டு விட்டுத் தமது 78-வது வயதில் அவர் ஓய்வுபெற்று அமைதியை நாடியிருக்கலாம். ஆனால், மற்றவர்கள் தடுமாறித் தத்தளித்துப் பின்வாங்கிய போதும், அவர் இந்தியாவைப் பிற்போக்குப் பாதையிலிருந்தும், அவர் ஏற்கெனவே எச்சரித்த ஆகஸ்டு ஒப்பந்தத்தின் அவசகுன விளைவுகளினால் ஏற்பட்ட வகுப்புத்துவேஷத்திலிருந்தும் காப்பதற்காகத் தம் உயிரையும் உதிரத்தையும் சிந்தினார்.

இறந்த பின் எல்லோரும் அவரை ஏத்துகிறார்கள். உயிரோடு இருக்கும்போது அவரைத் துன்பத்துக்காளாக்கிய சர்ச்சில்களும், அமெரிகளும் இப்போது அவருடைய சிதையின்மேல் புஷ்பாஞ்சலி செய்கிறார்கள். ஆனால், அவருடைய இறுதிப் போராட்டச் சரித்திரம், அவருடைய துர்மரணம் முதலியவை சம்பிரதாயமான அரசாங்க ஆடம்பரத்தினால் புதைபட்டுப் போகக்கூடாது. ஏனெனில், அந்தச் சரித்திரம் தான் இந்திய சுதந்திரத்தை நெரித்துக்கொல்ல விரும்பும்

எதிர்ப்பக்கத்தில்:

**நிர்மாணத் திட்டம்**

படம்: பி. ரங்கநாதன், சென்னை

கொடுமதிக்காரரைத் துள்ளுளாக்கும் அரசியல் குண்டாகும்; அவருடைய அஸ்தியிலிருந்து அப்போதுதான் இந்திய மக்களுக்குப் போராட்டம் நடத்தப் புதிய வலுவும் உயிரும் பிறக்கும். காந்தியின் கடைசி மூச்சுத்தான் அவருடைய வாழ்வின் உண்மைச் சிகரமாகும்.

அரசியல் ஆடம்பரங்களையும் கஷ்டப்பட்டு மீறிக்கொண்டு, காந்தி தமது உண்மையான சொரூபத்தைக் காட்டுகிறார். அவருடைய பக்தர்கள் அவரை யோகியாக்க விரும்புகிறார்கள். மனிதருக்குள் மனிதராய் வாழ்ந்த அசல் மனிதரே காந்தி. அவருடைய குற்றங் குறைகளையும் பலவீனங்களையும் லேசாக எடுத்துக் காட்டுபவர்கள் அவருடைய பெருமையை எடுத்துக் கூறத் தெரியாத தமது இயலாத் தனத்தைத்தான் காட்டிக்கொள்கிறார்கள்.

நூற்றாண்டுக் காலமாய் சொப்பன உலகிலும், சமூக, மதவிஷயப் பிற்போக்குத் தன்மையிலும் கட்டுப்பட்டுக் கிடந்த மக்கள் சமுதாயம் விழிப்புற்று சமுதாய மாறுதலுக்காக முன்னேற முயலும் வேளையிலே, தேசிய இயக்கம் இந்திய பூர்ஷுவாப் புரட்சிப் பாதையிலே பிரக்ஞையோடு சென்று கொண்டிருந்த வேளையிலே, காந்தி கால்நூற்றாண்டுக்கு மேலாகவே இந்திய சுதந்திர இயக்கத்தை நடத்திச் சென்றார். தேசிய இயக்கத்தின் பூர்ஷுவாப் பாதைக்கும், விழிப்புற்றும் பூரணப் பிரக்ஞை பிறக்காத மக்களுக்கும் இடைவிழுந்த இடைவெளியை காந்தியைத் தவிர வேறு எந்தத் தலைவனும் இணைத்திருக்க முடியாது.

"எளிய வாழ்க்கை" யைப் போதித்த அந்த ஞான பரிசேயர் கொள்ளை கொள்ளையாய்ப் பணம் திரட்டும், இந்தியாவை ஆளும் பணதிபதியின் மாளிகையிலே இறந்து பட்டார்.

"அஹிம்சை போதம்" செய்த தேவமகன் கடைசியில் கொலை வழியினால், துஷ்டர்களின் பலாத்காரத்தால், கொல்லப்பட்டார். ஆனால் இந்த பலாத்காரம் ஏகாதிபத்தியமும் பிற்போக்கு சக்திகளும் தூபமிட்டு வளர்த்த வகுப்புத் துவேஷத்தால் ஏற்பட்ட வளர்ச்சி. அவர் தமது நம்பிக்கைகளின் சத்தியத்தை நிலை நாட்டிச் செத்தார்; கரும வீரனாகக் களத்திலே செத்தார்; தேச பக்தனாக, மனித குலத்தின் தியாக ரக்ஷகனாக, அவரைப் பின் தொடர்பவர்களுக்கு உணர்ச்சியூட்டும் தன்மையிலே செத்துவிட்டார்.

இந்திய தேசிய இயக்கத்தை அழிக்க முடியாதபடி கட்டி வளர்த்த அவருடைய வெற்றிக்கும், மனிதகுலத்தின் சாபல்யத்துக்காக அவர் நடத்திய போராட்டத்துக்கும் இங்கு அத்தாட்சி காட்ட வேண்டியதில்லை. அவர் ஏகாதிபத்தியச் சுமையை எதிர்த்து புரட்சித்தீயை நெஞ்சில் ஏற்றினார். அவர் தேசிய இயக்கத்தை மிதவாதப் பிற்போக்கு வழிச் சென்ற சிறு கும்பலிடமிருந்து மக்கள் சமுதாயத்தின் பாதைக்கு மாற்றினார். அவர் வகுப்புவாதத்தை மிஞ்சி வளரும் ஜன நாயக ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். அவருக்கு முன்னவரான டால்ஸ்டாயைப் போலவே, சமூகத்தின் நோக்காட்டுக்கு மருந்து தெரியாத போதுங்கூட, போலி நாகரிகத்

தைப் பொலபொலக்கச் செய்தார்.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்தபின் இந்தியாவில் இந்து முஸ்லிம்களின் ஒன்றுபட்ட கப்பற்படையின் வீரப்போராட்டத்தைக் குழப்பமாகக் கருதி ஏகாதிபத்திய மந்திரிசபை தூது கோஷ்டியை ராஜி பேச வரவழைத்தார். ஆனால் அந்த ராஜி விஷயம் மவுண்ட்பேட்டன் பரிசாக, இந்தியாவைத் துண்டாடும் பரிசாக, வகுப்புவாதத்தைத் தூண்டி வலதுசாரிப் பிற்போக்குக் கும்பலின் கையை வலுப்படுத்தும் பரிசாக, வந்து சேர்ந்தது. அப்போதும் காந்திதான் வரப்போகும் ஆபத்தை முன்னின்று எச்சரித்த முதல் தலைவர். சென்ற ஆண்டு ஜூலை மாசத்திலே இந்தியத் தலைவர்களெல்லாம் சுதந்திரப் பள்ளுப் பாடியாடிக்கொண்டிருந்த வேளையிலே, காந்திதான் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சண்டை மூளக்கூடும் என்ற விஷயத்தை எச்சரித்தார்.

ஆகவேதான் இந்தியாவும் இங்கிலாந்தும் சுதந்திர கீதம் பாடும் வேளையிலே காந்தி 1947 செப்டம்பரில் ஒரு அந்தரங்க நண்பருக்கு பின்வருமாறு எழுதினர்:

"எங்கள் நாட்டில் இப்படிப்பட்ட கோரமான செய்கைகள் எவ்விதம் நடக்கின்றன என்று எனக்குத் தெரியவில்லை. பல வருஷ காலமாக, காங்கிரஸ் போராடி வளர்ந்தோங்கி உயர்ந்தது; ஆனால் இன்றோ, லட்சிய முடிவை நெருங்கும்போது, எப்படியோ இவையெல்லாம் நேருகின்றன. காங்கிரஸால் இவற்றை திருத்த இயலவில்லை. நாங்கள் என்ன தவறு செய்தோம்? இல்லாவிடின், இவையெல்லாம்

> **நாஸ்திகர்கள்**
>
> நல்லொழுக்கமும் நீதியும் நாஸ்திகர்களுக்கும் அவசியமேயாகும். ஆதலால் எனது ராஜ்யத்தில் நாஸ்திகர்கள் எவரேனும் இருந்தால் அவர்களை எவரும் தொந்தரவு செய்யலாகாது. ஏனெனில் மனுஷ்யனுடைய மதமும் விசாரமும்வேறு வேருக இருந்தாலும் முடிவில் அவனுடைய உத்தேசம் ஒன்றினிடத்தே இருக்கும்.
>
> —அசோகன்

ஏன் நடைபெறவேண்டும்? நாங்கள்காங்கிரஸைக் கட்டிவளர்த்து வரும்போதே, அது உளுத்தும் வந்திருக்கிறது என்றே தோன்றுகிறது. இன்று அது உளுத்துப் போனது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில், இந்தியாவில் நடக்கும் அட்டூழியங்களை அடக்கும் சக்தி அதனிடமில்லாமல் போய்விட்டதல்லவா?"

ஆனால் காந்தி இதனால் இடிந்து போய்விடவில்லை. போரிட்டார். தமது இற்ற உடலையும் வலிய உள்ளத்தையும் போராட்டத்திலே ஈடுபடுத்தினர். அவருடைய வீரப் போராட்டக் காலத்திலே அவருக்குரிய நண்பர்கள் வலது சாரியிலில்லாமல், இடதுசாரியிலேயே இருப்பதையும் கண்ணாரக் காண ஆரம்பித்தார். கல்கத்தாவிலும் டில்லியிலும் அவர் போராடும் போது, கம்யூனிஸ்டுகளுடன் நெருங்கிய தோழமைகொண்டிருந்தார். கடைசியாக காந்தியும், புரட்சிகரமான பாட்டாளி வர்க்கமும் ஜனநாயக உரிமைப் போராட்ட விஷயத்தில் ஒரே முகாமிலிருப்பதாக உணர்ந்தார்கள். கம்யூனிஸ்டுகள் அவரை ஆதரித்தோடு, இயக்கத்தையும் பலப்படுத்தினர்கள். காந்தியின் மரணத்துக்குப் பின்னல் தடை செய்யப்பட்ட ராஷ்டிரிய சுயம்

சேவா சங்கம், ஹிந்து மகா சபை இவற்றின் மத வெறியையும் பிற்போக்குத் தன்மையையும் வெட்ட வெளிச்சமாக்கினார்கள். ஆனால் காந்தி முதலில் அதை நம்ப மறுத்தார். அவர் ஆர். எஸ். எஸ். தலைவர்களைச் சந்தித்தார்; அவர்கள் தாங்கள் அப்பாவிகள் என்று பறைசாற்றினார்கள். ஆனால் ஆதாரபூர்வமான புள்ளி விவரங்கள் காந்தியின் முன்படைக்கப் பட்டபோது காந்தி தெளிவு பெற்றார்.

காந்தி தெளிவு பெறுவதென்பது செயலில் இறங்குவதுதான். அவர் நவம்பரில் காங்கிரஸ் கமிட்டியினரிடம் தமது குற்றச்சாட்டை வெளியிட்டார். ஆர். எஸ். எஸ்., ஸைப் புறக்கணித்தார். ஹிந்து மகாசபையைக் கண்டித்தார்.

டாக்டர் சியாமப் பிரசாத் முகர்ஜியைப் பற்றிக் குறிப்பிடும்போது,

" இங்கு டாக்டர் சியாமப் பிரசாத் இருக்கிறாரா? அவர் இங்கு இல்லை. அவர் இங்கிருப்பதை நான் விரும்புகிறேன்—அவர் மகாசபையிலிருக்கிறார். மகா சபை காங்கிரஸின் விரோதி. ஆகவே அவருக்கு அரசாங்கத்தில் இடம் இருக்கக்கூடாது. அல்லது அவர் மகாசபையை விட்டு விலக வேண்டும்" என்று கூறினார்.

ஜனவரியில் காந்தி தமது இறுதி ஆயுதமான உபவாசத்தை மேற்கொண்டார். அப்போது (12-1-47) அவர் சொன்னதாவது:

" இந்தியா அழிவதைச் செயலற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதைவிட, சாவு எனக்கு மகத்தான விடுதலை அளிக்கும்"

அவர் வகுப்பு ஒற்றுமைக்காக மட்டும் உபவாசம் இருக்கவில்லை. தமது ஆந்திர நண்பர் ஒருவரின் கடிதத்தையும் சுட்டிக் காட்டி, " காங்கிரஸ் வட்டாரத்தினரின் சுய நலத்தையும், சட்ட சபை அங்கத்தினர்களின் பணம் சேர்க்கும் செயலையும், மந்திரிகளின் பலவீனத்தையும்" எதிர்த்தும் உபவாசம் இருந்தார்.

இதனால்தான் பிற்போக்கு வகுப்பு வாதக் கும்பலின் துண்டு பிரசுரங்களில் நேருவும் காந்தியும் கொல்லப் படவேண்டும் என்று வெளிப்படையாகவே எழுதப்பட்டன.

காந்தியின் மரணம் இந்தியாவை விழிப்புறச் செய்தது. மக்களின் குரல் ஆர். எஸ். எஸ்.ஸைத் தடை பண்ண வைத்தது. காந்தியின் மரணம் பயனற்றுப்போய் விடாதபடி இந்திய நாட்டின் ஜனநாயகச் சக்திகள் தமது போராட்டத்தை நடத்தி முன்னேறிச் செல்லும். அந்தப் போராட்டம் இந்தியாவின் உண்மையான விடுதலையையும் ஜனநாயக ஒற்றுமையையும் அடையும்.

காந்தி இறந்தாலும், இந்தியாவுடனும் உலகத்துடனும் அவர் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்.

*

### தனிச் சொத்துரிமை

தனி மனிதர்களுக்குச் சொத்துரிமை உண்டு என்ற தத்துவத்தை அஸ்திவாரமாகக் கொண்டே தற்போதைய ஜன சமூகவாழ்க்கை அமைந்திருக்கிறது. தனிமனிதர் சொத்துரிமை எண்ணம் நம் நாடிநரம்புகளில் ஊறிப் போயிருக்கிறது. இந்த எண்ணத்தை வேரோடு கல்லியெறியவேண்டும்

—சி. ராஜகோபாலாச்சாரியார்

சக்தி நேயர்களுக்கு!

இன்றைய நிலையில் தமிழ் மக்களுக்குப் பிரயோஜனகரமான படிப்பே தேவை. ஒரு கட்டுரையையோ, கதையையோ படித்தால் ஏதாவது ஒரு புது விஷயமாவது அவற்றின் மூலம் தெரிந்து கொள்ளக் கூடியவாறு இருக்கவேண்டும். இலக்கியம், விஞ்ஞானம், மருத்துவம், சரித்திரம், அரசியல், வாழ்க்கை வரலாறுகள் முதலியவை சம்பந்தமான விஷயங்கள் மேலை நாட்டுச் சஞ்சிகைகளில் ஏராளமாக வெளி வருகின்றன. அவற்றைப் படித்துக் கிராமத்திலுள்ளவர்களும்கூட உலகம் சகல துறைகளிலும் எவ்விதமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை அந்த நாடுகளில் தெரிந்துகொள்ளுகிறார்கள். வெறும் பொழுது போக்குச் சரக்குகளை மட்டும் படித்துக் காலத்தை வீண் போக்காமல், பயனுள்ள விஷயங்களைத் தமிழ் மக்களும் படித்து முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதுதான் சக்தியின் குறிக்கோள். அத்துடன் இடை இடையே சில நகைச் சுவை துணுக்குகளும் அவசியம் என்று அவற்றையும் வெளியிட்டு வருகிறோம்.

இப்பொழுது இலக்கியம், விஞ்ஞானம், அரசியல், வாழ்க்கை வரலாறுகள் முதலியன வெளியிட்டு வருவதுடன் வேறு பல புது விஷயங்களையும் சக்தியில் சேர்க்க விரும்புகிறோம். இந்த முயற்சியில் நேயர்களும் ஒத்துழைக்க வேண்டுகிறோம.

இன்று தமிழ் நாட்டின் கிராமிய இலக்கியம் போதிய அளவுக்கு அச்சேறி வெளிவராதது ஒரு பெருங் குறையாக இருக்கிறது. பிற நாடுகளில் இந்தக் காரியத்தைப் பாராட்டத்தக்க முறையில் செய்திருக்கிறார்கள். ஆகவே, கிராமியக் கதைகள், நாட்டுப் பாடல்கள், தாலாட்டு, ஒப்பாரி, நலுங்கு, அச்சில் வெளி வராத பழம் புலவர்களின் சிறந்த பாடல்கள், சிந்துகள், ஒயில்கும்மி, முளைப்பாரிக் கும்மி, மற்றும் பல கும்மிப் பாடல்கள், காமன் பண்டிகைப் பாடல்கள், அந்தந்தப் பிரதேசங்கள் சம்பந்தப் பட்ட சரித்திரக் கதைகள் முதலியவற்றை நேயர்கள் எழுதியனுப்பினால் சக்தியில் பிரசுரிக்க ஏற்பாடு செய்வோம். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் இலக்கிய வளத்தையும், கலாசார வளத்தையும் தமிழகம் முழுவதும் தெரிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் அல்லவா? நேயர்கள் இந்த ஏற்பாட்டை வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. நேயர்களின் ஆதரவை எதிர்பார்க்கிறோம்.

—ஆசிரியர், சக்தி

# சுதந்திரமும் விஞ்ஞானமும்

## ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

★

ஜெர்மன்காரரான ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் நோபல் பரிசு பெற்ற கணித, பௌதிக சாஸ்திர மேதை. உலகப் பெரியார்களான காந்திஜி, லெனின், ஷா, ரோலாந்து போன்றவர்களுடன் ஒப்பாக வைத்து எண்ணத்தக்கவர். இவருக்கு வயது 68. இன்று அமெரிக்காவில் கல்லூரிப் பேராசிரியராக இருக்கிறார். இவருடைய கட்டுரை ஒன்றின் சாரம் இது.

பொதுவாகப் பார்க்கிறவர்களுக்கு, மனித சாதியின் சுதந்திரத்திற்கும், விஞ்ஞான சாஸ்திரத்திற்கும் தொடர்பு இருக்கிறதாகவே தோன்றும். ஆனல் உண்மையில் மனிதன் விஞ்ஞானம் இல்லாமலேயே சுதந்திரத்தோடு வாழலாம். சுதந்திரமில்லாமல் விஞ்ஞானம் மட்டும் மனிதனுக்கு உபயோகப்படாது.

விஞ்ஞானிகள், அவ்வப்பொழுதுவெளியாகிற புதுப்புதுக் கருத்துக்களை ஊன்றிப் படித்து ஆராய்ந்து தமக்குத்தோன்றுகிற முடிவுக்கு வர சுதந்திரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். விஞ்ஞானிகளுக்கு இந்த எண்ணச் சுதந்திரம் அவசியம். அரசியல் சுதந்திரமும் அவர்களுக்கு அத்தியாவசியமானது. விஞ்ஞானிகளுக்குத் தேவையான புத்தகங்கள், அந்த அரசாங்கத்துக்கு விரோதமான கொள்கையுடையவர்களால் எழுதப்பட்டிருப்பதாலோ அல்லது அந்த அரசாங்கம் ஒப்புக் கொள்ள மறுக்கும் கொள்கைகள்நிறைந்ததாகவோ இருப்பின் அந்த அரசாங்கம் அந்தப் புத்தகங்களைத் தடை செய்யலாம். இந்தச் செய்கையினல் விஞ்ஞானிகள் அப்புத்தகங்களை வாசிக்கும் சுதந்திரத்தை இழந்துவிடுகின்றனர்.

தற்போது நிலவி வரும் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளைப் பார்க்கும்போது பரிபூரண சுதந்திரம் என்பது நிறைவேற்ற முடியாத ஒரு லட்சியக் கனவாகவே தோன்றுகிறது. அந்த லட்சிய சுதந்திரத்தைப் பெற மக்கள் அனைவரும் முயலவேண்டும்.

எல்லாராலும் ஒப்புக்கொள்ளப் படுகிற முடிவான சில விஷயங்களைப் பற்றித் தர்க்கம் செய்வதில் பயனில்லை. யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய இரண்டு விஷயங்களைக் கீழே கொடுக்கிறேன். அவற்றை அடைய நாம் என்ன செய்யவேண்டுமென்கிறதைப் பற்றித்தான் அபிப்பிராய பேதம் ஏற்பட முடியும்.

(1) மனித சாதியின் நல்வாழ்வுக்கு உபயோகப்படுகிற பொருள்களைக் குறைந்த தொழிற் செலவில் உற்பத்தி செய்யவேண்டும்.

(2) மனித நல்வாழ்வுக்கு இன்றியமையாதன தேக சுகங்கள்தாம். ஆனால் மனிதன் உண்பதற்காக மட்டுமே வாழவில்லை, மனிதன் அவனவனுடைய குண குணங்களுக்கும் அவனவனுடைய சாதனைத் திறனுக்கும் ஏற்றவாறு முயன்று தன்னுடைய அறிவுப பொக்கிஷத்தையும், கலைப் பண்பையும் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

முதலில் சொன்ன நோக்கம் கைகூட மனிதன் இயற்கையின் நுட்பங்களையும், அவற்றை மனித வாழ்க்கைக்குப் பயன்படும்படி செய்ய, விஞ்ஞான அறிவுப் பெருக்கமும் வேண்டும். உண்மையான சுதந்திரம் என்றால், மனிதன், தான் ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்த உண்மைகளைப்பிறருக்குஎடுத்துச் சொல்ல அவனுக்குச் சர்வ உரிமையும் வேண்டும. இதற்குப் பேச்சு, எழுத்துச் சுதந்திரம் அவசியம். இதச் சுதந்திரம், அரசாங்கம் சட்டங்கள் ஏற்படுத்துவதால் வந்துவிடும் என்று எண்ணக் கூடாது. சட்டபூர்வமான அனுமதி இருப்பினும், மக்களிடத்தில் சகிப்புத்தன்மையும் வேண்டும்.

இரண்டாவதாகச் சொன்ன ஆத்மார்த்த சுதந்திரம் பெற புற உலக உதவியும் வேண்டும். வாழ்க்கைத் தேவைகளைத் தேடுவதில் தன்னுடைய முழு நேரத்தையும் செலவழித்தால் அவனுக்குத் தன் அறிவில், கலை வளர்ச்சியில், சிரத்தை காட்ட எப்படி முடியும்? விஞ்ஞான முன்னேற்றத்தின் பயனாய் நாகரிக இயந்திர சாதனங்கள் மனித உழைப்பைக் குறைக்க உதவி செய்கிறது.

இந்த விஞ்ஞான முன்னேற்றதுக்கும் ஆத்மார்த்த வளர்ச்சிக்கும் சட்ட பூர்வமான சுதந்திரம் மட்டும் அல்லாமல் அகச் சுதந்திரமும் அவசியம். இந்த அகச் சுதந்திரம்தான், அடிமை மனப்பான்மையைப் போக்கி, மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் போராட, மனோ வலுவைத் தருகிறது. இந்த மனோ வலிமை ஒரு சிலருக்குத்தான் இயற்கையில் அமைகிறது. இந்தச் சுதந்திர உணர்ச்சியைப் பெருக்க சமூகம் வழி செய்யாவிட்டாலும், அதன் வளர்ச்சியைத் தடை செய்யாமல் இருந்தாலே பெரும் உதவி செய்ததாக ஆகும்.

மனிதனுக்கு அகச் சுதந்திரமும், புறச் சுதந்திரமும் வழங்கினால்தான், அவன் அக, புற வாழ்வில் பரிபூரணத்துடன் வாழ முடியும்.

✸

**தனிச் சொத்தின் அபாயம்**

இன்றைய தினம் தனி மனிதர்களுக்குச் சொத்துச் சுதந்திரம் இருக்கிறது. இதனால்தான் தகுதியற்ற மனிதர்களெல்லாம் கலியாணம் செய்து கொண்டு விடுகிறார்கள். நான் காக்கை வலிப்புக்காரனாக இருக்கலாம்; குஷ்ட நோயாளியாக இருக்கலாம். ஆனால் என்னிடம் நிறையப் பணம் இருந்தால் போதும்; துர்பாக்கியவதியான ஒரு பெண்ணைப் பலி கொண்டு விடலாம். தனி மனிதனுக்குச் சொத்து என்ற சங்கதியே இல்லாவிட்டால் ஒரு பெரும்வியாதிக்காரனை எந்தப் பெண் விவாகம் செய்து கொள்ளுவாள்?

—சி. ராஜகோபாலாச்சாரியார்

மாஜினி (1805-1872) இத்தாலிய தேசபக்தன், சிறைவாசம், தேசப்பிரஷ்டம் முதலிய கஷ்டங்களை அனுபவித்தவன். கரிபால்டியுடன் ஒத்துழைத்தவன். பிரெஞ்சியர் ரோமாபுரியைத் தாக்கும் போது, தீவிரமாய் எதிர்த்து நின்றவன். அவனுடைய மானிட ஜாதியின் சுதந்திரம் உலகப் பிரசித்தி பெற்ற நூல். இக் கட்டுரையில் அவன் தீவிர வாதத்துக்கும் மிதவாதத்துக்கும் தன் வழியில் கோடு கிழித்துக் காட்டுகிறான்.

# தீவிரவாதியும் மிதவாதியும்

●

மாஜினி



மாஜினி

சகல புரட்சிகளும் மக்களுக்காகவே ஏற்படுத்தப்பட வேண்டும். இதுவே நமது தாரகம்; இதுவே நமது கொள்கையின் சாரம்; நமது சாத்திரம்; நமது மதம்; நமது ஆசாபாசம். இதுவே நமது நினைப்பின், நெறியின் ரகசியம்; நமது கண்ணோட்டத்தின் பயன்; நமது கனவு.

தனி மனிதனுக்கும் லோகத்துக்கும், பிரிவினைக்கும் ஒற்றுமை முறைக்கும், உடைமைக்கும் ஜனங்களுக்கும் நடக்கும் போராட்டமே சகல புரட்சிகளுக்கும் ஜீவநாடி; சென்ற பதினெட்டு நூற்றாண்டுகளின் சரித்திரத்தினுடைய சூத்திரம்.

ஆண்டையும் அடிமையும், கடைச்சாதி மக்களும் கனதனவான்களும், பணத்தாட்சியுமுடைய சனங்களும், பிரபுத்துவமும் கத்தோலிஸிஸமும், கொடுங்கோன்மையும் சுதந்திரமும்—எல்லாம் ஒரு பெரும் போராட்டத்தின் இரு வேறு கட்சிகள் தான்; இருவேறு தத்துவங்களின் எதிர்ப்புக்கள் தான். அவையே கடமைக்கும் உரிமைக்கும் நடக்கும் நித்தியப் போர்.

ஆனால் இன்று உடைமை தனது அந்திம காலச் சிலேட்டுமத்தில் தத்தளிக்கிறது. தங்களுடைய குறிக்கோளைக் கண்டுகொண்ட மக்கள் விறுவிறுப்போடு முன்னேறிச் செல்லத் தொடங்கிய பின், அவர்கள் கர்த்தாவின் முன் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள்; சாட்சியமாய் நிற்கிறார்கள். மோஸஸைப் போல் தம் கடமைகளையும் உரிமைகளையும் 'கடவுள்' 'மக்கள்' என்ற இரண்டே வார்த்தைகளில் அடக்கிவிட்டார்கள்.

கடவுளும் மக்களும்—அதுவே எதிர்காலத் திட்டம்.

கடவுளும் மக்களும்—அதுவே நமது திட்டம். அந்தத் திட்டத்தை தளரா உறுதியோடும்



# அஞ்சலி தேவியின்
சருமம்
லக்ஸ் டாய்லட்
சோப்பை உபயோகப்
படுத்துவதால் மிருது
வாகவும்
மென்மையாகவும்
இருக்கிறது.

"லக்ஸ் டாய்லட் சோப் என்னுடைய தவருமல் அழகு படுத்தும் முறை" என்று அழகிய அஞ்சலி தேவி சொல்கிருர். "அதனுடைய வெண்ணிறம் கொண்ட நுரை என்னுடைய சருமத்தை மிருது வாகவும் தூய்மையாகவும் சுத்தம் செய்கின்றது. மென்மையான சருமத்தை விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் நான் செய்வது போல லக்ஸ் டாய்லட் சோப்பினுல் சுத்தம் செய்துகொள்ள வேண்டும்."




# லக்ஸ் டாய்லட் சோப்
*சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!*

LTS. 189-50 TM

# இந்தப் புத்தகம்தான்

★

வந்தவர்: ஐயா, காந்திஜியைப் பற்றிய ஏதாவது நல்ல புத்தகம் இருக்கிறதா? ஏதோ பாட்டு வடிவத்திலே ஒரு புத்தகம் வெளியாயிருக்கிறது, ரொம்ப நல்ல புத்தகம் என்று பக்கத்து வீட்டுக்காரர் சொன்னரே, அப்படி ஏதாவது வந்திருக்கிறதோ? காந்திஜி மறைந்த சமயத்தில்கூட ரேடியோவில் பாடினர்களே அந்தப் புத்தகம்தான் என்று நினைக்கிறேன்.

கடைக்காரர்: ஓ! காந்தி மகான் கதையைத்தானே கேட்கிறீர்கள்? கொத்தமங்கலம் சுப்பு பாடியது. ரொம்ப நல்ல புத்தகம். எல்லோரும் வாங்கிப் படிக்கிருர்கள். கிராமவாசிகள் பழைய காலப் பாட்டுக்களைப் போலப் படிப்பதற்காக, காந்தி மகான் கதையைத்தான் வாங்கிப் போகிருர்கள். இந்த அழகான பெரிய புத்தகத்திற்கு ஐந்தே ஐந்து ரூபாய்தான் விலை. சென்னை சக்தி காரியாலயத்தார்தான் வெளியிட்டது. ரொம்ப நல்ல புத்தகம். படித்துப் பாருங்கள். சிரிப்பீர்கள். உடனே கோபம் வரும். உடனே அழுகையும் வரும். இந்தியா சுதந்திரம் அடைந்த கதைதான் இது.

வந்தவர்: இந்தப் புத்தகம் தான். காந்தி மகான் கதை என்று பக்கத்து வீட்டுக்காரர் சொன்னர். ரொம்ப நல்ல புத்தகம்தான் போலிருக்கிறது. சரி, ஒரு மூன்று புத்தகம் பில் போடுங்கள். அட்டையிலுள்ள காந்திஜி படத்திற்கே ஐந்து ரூபாய் கொடுக்கலாம் போலிருக்கிறது.

★

தன்னம்பிக்கையோடும் நின்று நாம் நிறைவேற்றுவோமாக.

* * *

தீவிரவாதி (என் கருத்துப் படி) தனக்கென்று ஒரு கொள்கையும் அதில் நம்பிக்கையும் கொண்டவன். மிதவாதிக்கு எதுவுமே இடையாது. நெகிழ்ந்த சுபாவமும், உணர்ச்சியும் மிதவாதியின் பிறவிக்குணங்கள். ஆனல், ஏமாற்றங்களும், சக்திப் பறிமுதலும் அவனை வகுவில் மனம் மாறவும், திசை மாறவும் செய்துவிடும்; காலக் கிரமத்தில் அவனுடைய வாலிபத்தின் சூடும் சுரணையும் குளிர்ந்து உறைந்து போகும். தீவிரவாதிக்குத் தான் அனுபவக் கண்ணேட்டம் சமூகத்தின் ஊழலையும், துன்பத்தையும் எடுத்துக் காட்டியிருக்கிறது. அவனுக்குத்தான் அறிவு அந்தத் துயருக்கு மாற்றம் கற்றுக் கொடுத்தது; அவனுக்குத் தான் உலகத்து மானிட ஜாதியின் கடமையுணர்ச்சியால் ஒளி பெற்ற மனச் சாட்சியின் குரல் அவனை அந்த மாற்று வழியில், முழு மூச்சோடு ஈடுபட்டு, தீமையைத் தீய்த் தொழிக்க வேண்டிய கடமையையும் வெளிப்படுத்தியது.

மிதவாதி என்பவன் அநீதியை எதிர்த்துக் குழப்பம் செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி வசப்பட்டவன்; சமூகத்தில் தனக்குரிய ஸ்தானத்தை அடைய முடியாத 'ஏலாத்'தனத்தால் எரிச்சலும் புகைச்சலும் கொள்பவன். தன்னைப் போலக் கஷ்டப்படும் மற்றவர்களின் உதவியின் மூலமாகவே தனது நிலையை உயர்த்திக் கொள்ள நினைப்பவன்.

தீவிரவாதி அப்படியல்ல. அவன் தன்னுடைய சுய ஸ்தானம் எவ்விதமிருந்தாலும் சரி, தீமை நிலைத்திருக்கும் மட்டும் அதை எதிர்த்து முன்னேறுவான். மிதவாதியோ தன்னைப் பொறுத்தவரையில் அநீதத்தின் ஆட்சியிலிருந்து விடுபட்டுவிட்டால், உடனே தன் முயற்சிகளை நிறுத்திவிடுவான்; அல்லது தான் எதிர்த்துப் போராடிய சக்தி கவிழ்ந்து விட்டதாக, தனக்குத்தானே திருப்தி ஏற்பட்டாலும், அவனுடைய குழப்ப உணர்ச்சிகளை மட்டுப் படுத்திவிடுவான்.

தீவிரவாதி துன்ப நிவர்த்திக்குரிய மாற்று முறையில் தவறிவிடவும் கூடும். அவன் சமீபத்தில் வெற்றிகளில் அளவுக்கு மீறிய பலனை எதிர்பார்க்கவும், தனது சுய உணர்ச்சிகளை மக்கள் சமுதாயத்தின் பொது உணர்ச்சிகளோடு ஒத்துப் பார்க்கவும் கூடும். எனினும் அவன் சமூகத்தில் எந்தவிதமான மோச நிலையையும் உண்டாக்கிவிடமாட்டான். அவனுடைய அபிப்பிராயம் பூரண வளர்ச்சி பெருமல், எதிரொலி பெருமல் போய்விட்டால், போராட்டத்தில் தன்னந் தனியாக மாண்டொழிந்துபோவான். ஆனல், மிதவாதியோ இளைஞர்களின், பொது மக்களின் போருணர்ச்சியையும், துடியான ஆசாபாசங்களையும் நொண்டிவிடுவதில் சர்வ ஜாக்கிரதையாயிருப்பதுடன், பிரச்னைக்குரிய நிவர்த்தி மார்க்கத்தை நிச்சய தீர்க்கமாக்காமலும் விட்டுவிடுவான்; இதனல், ஒவ்வொரு மனிதனும் தன்தன் வழியில் செல்லுவதற்குச் சந்தர்ப்பமும் நம்பிக்கையும் தேடிக் கொடுப்பான். இதனல், தனது அறைகூவலுக்குச் சரியான ஆதரவும் தேடிக்கொள்வான்.

இவ்விருவரில் ஒருவனின் குறிக்கோள் புதுமை புதுமையாய்க் கண்டுபிடிப்பது; மற்றவன் குறிக்கோள் சங்காரம் பண்ணுவது. முதலாமவன் முற்போக்கானவன்; இரண்டாமவன் எதிர்ப்பு உருவானவன். முதலாமவன் ஒரு நியதியை விவாதித்து அதை அரங்கேற்ற முயல்கிறான்; இரண்டாமவன் ஒரு விஷயத்தை வைத்து விவாதித்து, அதிகாரம் பெற முயல்கிறான்.

முதலாமவனின் விஷயம் கொள்கை பூர்வமானது. அவன் விஷயத்தை வெளிப்படையாகச் சொல்வான்; நேராகச் சொல்வான்; ராஜ தந்திரம் என்பனவற்றை நிராகரிக்கிறான்; வெற்றியின் பல அம்சங்களைப் புறக்கணிக்கிறான்; சத்தியத்தின் சக்தி ஒன்றையே நம்புகிறான். ஆயிரம் சிறு பிழைகளுக்கு ஆளான போதிலும், பொதுப்பட்ட கொள்கைகளின் அனுபவ சாத்திய முறைகளில் அவற்றை களைந்தும்விடுகிறான்.

மிதவாதியோ எதற்கும் விவரணங்களே தேடுவான். கூறு கூறாக்கி அலசி ஆராயும் விஷயமே அவனுக்குப் பிடிக்கும். அவனுக்கோ ஒவ்வொரு பிரச்னையும் மனிதர்களைப் பற்றியது; ஒவ்வொரு யுத்தமும் வெறும் குழப்பம் தான். அவனுடைய பேச்சுச் சாதுரியம் உயிருள்ளது; தூய்மையுடையது; சமயங்களில் அற்புதமாகவும் இருந்துவிடும். தீவிரவாதி வறட்சியும், உப்புச் சப்பற்றதுமான பேச்சையுடையவன்; எப்போதும் தர்க்க ரீதியாகவே பேசுவான். அவன் தனது குறிக்கோளை அடையும் கருமத்தில் தவறி விடவும் கூடும்; ஆனால் ஒரு தடவை அடைந்துவிட்டால், அந்த வெற்றி நிரந்தர வெற்றியே. ஆனால் மிதவாதியின் வெற்றிகள் சமயங்களில் பிரமாதமானதாயிருந்தாலும் நிலையானதல்ல. முதலாமவன் கடமை உணர்ச்சியைத் தூண்டுகிறான்; இரண்டாமவன் நியாய உணர்ச்சியைத் தூண்டுகிறான். முதலாமவனுடைய தீவிரமான மத உணர்ச்சி சாதனைகளை உந்தித் தள்ளுகிறது; அறிவு பூர்வமான முரண்பாடுகள் ஏற்பட்ட போதிலும் தன் வழியிலேயே செல்வான். இரண்டாமவன் கடவுளின் பெயர் சொன்னாலும், லோகத்தை சென்றுகொண்டிருப்பவன். அவனுக்கு நிகழ்காலம் வெற்றி தரும். அவனுக்கு சத்திய வெற்றியை விட, லௌகிக ஆசைகள் தான் மேலோங்கி நிற்கும்.

முதலாவது வர்க்கத்தவர்கள் மனமுவந்து தியாகம் செய்வார்கள்; இன்றைய சமுதாயத்தை விட, இனி வரும் சமுதாயத்துக்காகவே பாடுபடுவார்கள். உலகினர்முன் அவர்கள் படைக்கும் கொள்கைகளுக்கு வெற்றி மெதுவாகக் கிடைத்தபோதிலும், நிச்சயமான வெற்றி, அசைக்க முடியாத வெற்றி கிட்டும். இரண்டாம் வர்க்கத்தவரோ இன்றைய சமுதாயத்தில் வெற்றி காண்பர்; ஆனால், வரப்போகும் அன்னார் பரம்பரை அதன் பலனை அனுபவிக்க முடியாது.

முதல் வர்க்கத்தவர்கள் மனித குலத்தின் தீர்க்கதரிசிகள்; இரண்டாமவர்கள் மனித குலத்தை வெறுமனே கிண்டிவிடுபவர்கள். எனினும் இவர்கள் தலை விதி மக்கள் கையிலேதான் அடங்கியிருக்கிறது.

# சுதந்திரம்

ஜே. பி. எஸ். ஹால்டேன்

ஒரு விஷயத்தை விஞ்ஞான ரீதியில் பரிசீலனை செய்யவேண்டுமானால் அதிலுள்ள குறைவு நிறைவுகளை ஆராயவேண்டும். மனித சாதியின் சுதந்திரத்தை அலசிப் பார்க்க வேண்டுமானால், 'க' என்பவனைக்காட்டிலும் 'ச' என்பவன் அதிகசுதந்திரத்தோடு வாழ்கிறானா என்கிற கேள்விக்குச் சரியான, தர்க்க ரீதியான விடை அளிக்கவேண்டும். முதலாமவன் நியூயார்க்கில் பஸ் டிரைவராக இருக்கலாம். இரண்டாமவன் இங்கிலாந்தில் பஸ் டிரைவராக இருக்கலாம். அல்லது இரண்டாமவன் ஒரு முனிசிபல் பிரசிடெண்டாகவோ, அல்லது ஒரு கவிஞனாகவோ இருக்கலாம். எப்படி இருந்தாலும் சரி. அந்தக் கேள்விக்கு விடை அளிப்பது சுலபமான காரியம் அல்ல. முதலாமவன் இரண்டாமவனைக் காட்டிலும் ஒரு சில விஷயங்களில் அதிக சுதந்திரத்தோடு வாழலாம். நினைத்தால் முதலாமவன் இலக்கியம் படிக்கலாம். மார்க்ஸ் எழுதிய புத்தகங்களைப் படிக்கலாம. தினம் தினம் சினிமாவுக்குப் போகலாம். இதே காரியங்களை 'ச' என்பவன் செய்யமுடியாத நிலையில் இருக்கலாம். ஆனால், 'ச' இரவுமுழுவதும் குடித்து விட்டுக் குஷாலாகக் காலம் கழிக்கலாம், அல்லது தன்னுடைய அழகான உத்தியான வனத்தில் பொழுதைப் போக்கலாம். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் யார் அதிகசுதந்திரத்துடன் இன்ப வாழ்வு வாழ்கிறார்கள் என்று சொல்லுவது கடினம். பொதுப்படையாகபதில்



சொல்ல முடியாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் ஒருவனைக் காட்டிலும் மற்றவன் அதிக சுதந்திரம் உடையவன் என்று கூறுவது சுலபம். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல மேற்சொன்ன இருவரில் எவன் அதிக சுதந்திர முடையவன் என்று சொல்லலாம்.

மனித வாழ்வில் உள்ள பல்வேறு துறைகளையும் தனித் தனியே எடுத்து ஆராயத்

நாம் சுதந்திரம் அடைந்துவிட்டபோதிலும் சுதந்திரம் என்றால் என்ன என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். இதை இங்கே விளக்குகிறார் இன்றைய முதுபெரும் பிரிட்டிஷ் விஞ்ஞான மேதை- இவர் ஒரு பொதுவுடைமைவாதியும் கூட.

தொடங்கினால், ஒரு துறையில் ஒரு சிலர் சுதந்திரத்தோடு வாழ்வது வேறொரு துறையில் சுதந்திரத்தோடு வாழும் மக்களைப் பாதிக்கத்தான் செய்யும். வாழ்க்கையில் பல பிரிவுகளைப் பார்ப்பது போலவே, கால வித்தியாசத்துக்கு ஏற்ப, காலப்போக்குக்கு மதிப்புக் கொடுத்து, ஒரு காலத்திலிருந்த சுதந்திர வியாக்கியானத்தையும் பிறிதொரு காலத்தில் வழக்கில் இருந்திருந்த சுதந்திர வியாக்கியானத்தையும் சீர் தூக்கிப் பார்க்கவேண்டும். சுதந்திர வளர்ச்சியும், சுதந்திரத் தடையும் விஞ்ஞான முன்னேற்றத்தை ஒட்டியே பின்னிப் பிணைந்து வந்திருக்கின்றன. அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்படாத காலத்தில், எழுத்துச் சுதந்திரத்திற்கு அவசியமே ஏற்படவில்லை. ஆனால் அச்சு இயந்திரத்தின் அவசியத்தை அறிந்த இக்காலத்திலோ, எழுத்துச் சுதந்திரத்துக்கும் சிற்சில தடைகள் விதித்திருக்கிறார்கள். ஒரு நாட்டு மன்னனைக் கொன்று விடும்படி தூண்டி எழுதுவது குற்றம்.

சுதந்திரத்தடைகளில் இரண்டு விதம் உண்டு. ஒன்று நீதியின் பெயரால் சட்ட பூர்வமாக விதிக்கும் தடைகள். இரண்டு, யுகாந்த காலமாக வழி வழி வந்த வழக்கமான தடைகள். ஒரு மனிதன் தெருவழியே கௌபீனம் மட்டும் உடுத்திச் செல்லுவது சட்ட விரோதமானதல்ல. ஆனால், அப்படிச் செல்லுவது வழக்கத்துக்கு விரோதமான செய்கை.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்தான் சுதந்திர வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியின் பலாபலன்களை வாழ்க்கையில் அனுபவிக்க பணம் படைத்த ஒரு சிலரால் தான் முடிகிறது. எல்லோருமே கார் வைத்துக்கொள்ளவோ, ஏரோப்ளேனில் பறக்கவோ முடியாது. ஒரு சிலருக்கு வாழ்க்கையில் சௌகரியத்தை உண்டாக்கும் விஞ்ஞான வளர்ச்சியே தொழிலாளர்களின் சுதந்திர வாழ்வில் மண்ணைப் போடுகிறது. முன் காலத்திலிருந்ததைவிட வேலை நேரப் பெருக்கமும், ஓய்வு நேரக் குறுக்கமும் ஏற்பட்டதற்குக் காரணம் இயந்திர வளர்ச்சிதான். சுதந்திரத்தின் துரோகிகள் என்று குற்றம் சாட்டப்படும் கம்யூனிஸ்டுக் கட்சிக்காரர்கள், சட்டங்களினாலும், மூட நம்பிக்கைகளினாலும் சுதந்திரம் தடை செய்யப்படுவதைக்காட்டிலும்பொருளாதாரக்கட்டுப்பாட்டினால் குன்றிய சுதந்திரத்தை மீண்டும் மக்கள் அடையவேண்டும் என்றுதான் போராடுகிறார்கள். "சுதந்திரம் என்பது மனித இனத்தின் ஈடு இணையில்லாத, உன்னத உயர்ந்த சொத்து. அதை எல்லா மக்களும் பெற்று அனுபவிக்க வேண்டும்" என்பதுதான் அவர்களது கொள்கை. பொதுவுடைமைக் கொள்கை வழக்கிலிருந்து வரும் ருஷ்ய நாட்டில் ஊர் சுற்றிப் பார்ப்பது, கப்பல் யாத்திரை செய்வதுபோன்ற, தனி மனிதனால் தனித்து அனுபவிக்க முடியாத வாழ்க்கை இன்பங்களை பலர் கூடிக் களிக்கின்றனர்.

புற விஷயங்களினால் மனிதனுடைய சுதந்திரம் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்பதைப் பற்றிக் கவனித்தோம். அக விஷயங்களினால் மனித சுதந்திரம் தடை செய்யப்படுவதைச் சற்று ஆராய்வோம். அக விஷயமும் இருவகைப்படும்: ஒன்று மனசு சம்பந்தப்பட்டது.

மற்றொன்று உடல் சம்பந்தப்பட்டது. பக்க வாதத்தினால் அவதிப்படும் ஒரு நோயாளி, திடகாத்திரமுள்ள மற்றொருவரைப் போலச் சுதந்திரத்தோடு சுகவாழ்வு வாழ முடியாது. ஆனால் மரக்கால்களின் உதவியால் நடக்கிற ஒரு மனிதன், ஆசார விகாரம் (Obsessional Psychosis)* கொண்ட மனிதனைக் காட்டிலும் சுதந்திர முடையவன் என்றுதான் சொல்ல வேண்டும்.

தனி மனிதனுடைய சுதந்திரம் அவனுடைய மனோ நிலையைப் பொறுத்திருக்கிறது. மதுபானம் அருந்தும் பழக்கமுடையவன் பிறரைக் காட்டிலும் சுதந்திரம் குறைந்தவனாகத்தான் இருக்கிறான். குடிவெறியில் தன் நினைவு இல்லாமல் தான் இஷ்டப்பட்டவற்றைச் செய்ய முடியாத நிலையில் மதிமயங்கிக் கிடக்கிறான். தான் உண்டு, தன் ஆபீஸ் உண்டு, மிஞ்சினால் மாலையில் பந்தாட்டம் உண்டு என்று இருக்கிற பணக்காரர்களையும் சுதந்திர புருஷர்கள் என்று கருதக்கூடாது. குறிப்பிட்ட ஒரு சில கொள்கைகளில் மட்டுமே அவர்களுடைய போக்கு அமைந்துவிடுகிறது. ஆனால் தன்னிச்சையாய்த் தன் இஷ்டப்படி, சொன்ன சொல்லைக் காப்பாற்றாமல், ஒரு மாதத்துக்கு ஒரு மனைவியாக மாற்றிக்கொண்டிருக்கிறதுதான் சுதந்திர வாழ்க்கை என்று அர்த்தமல்ல.

ஒரே பண்புள்ள இரண்டு மனிதர்களைக் காண்பது அரிது. ஒவ்வொரு மனிதனும் தனிப்பட்ட பண்புகள் உள்ளவனாக இருக்கிறான். ஒருவன் கணக்குப் பிரியனாக இருப்பான். மற்றவன் சங்கீத ரசிகனாக இருப்பான். உதாரணமாக என்னைப்பற்றிய வரையில், கணக்கும், சங்கீதமும் எனக்குப் பிடிக்கும். சங்கீதத்தைக் காட்டிலும் கணக்குப் போடுவதில்தான் எனக்கு அதிக சிரத்தை. நானே ஒரு சங்கீத ரசிகர் குடும்பத்தில் பிறந்திருந்தால், ஒரு சங்கீத வித்துவானாகவோ, அல்லது சங்கீத கர்த்தனாகவோ மாறியிருப்பேன். மனிதனுடைய கற்பனா சக்தியும், குறிப்பிட்ட விஷயத்தில் அதிக சிரத்தையும், அவனிருக்கும் சூழ்நிலையைப் பொறுத்தே அமைகின்றன என்பது உண்மை. 'தன்னிச்சையாய், மனம் போகிற போக்கில், தடையொன்றும் இல்லாமல் செயலாற்றுவதுதான் சுதந்திரம்' என்று அரிஸ்டாட்டில் சொல்லுவதை நான் மறந்துவிடவில்லை. சுகவாழ்வு வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் சுகம் தேடுவதில் சுகமில்லை. மற்ற விஷயங்களில் அறிவைச் செலுத்தி, அவை கைகூட நாம் செய்கிற முயற்சிகளில்தான் நமக்கு உண்மையான சுகம் கிட்டுகிறது.

ஊகமான சுதந்திரத்தைப் பற்றியும், உண்மையில், நடைமுறையில் இருக்கிற சுதநதிரத்தைப் பற்றியும் விவரமாக எடுத்துக் கூறும் அறிஞர்களான ஸ்பைனோசா, ஹெகல், ஏங்கல்ஸ், காட்வெல் முதலியோர், 'மனித தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும்படியான சமூகத்தில் வாழ்வதுதான் சுதந்திரம்'

* தான் அசுத்தமாக இருப்பதாக எண்ணி கால்கைகளை அடிக்கடி ஒரு நாளைக்கு 50, 60 தடவைகள் கழுவிச் சுத்தம் செய்துகொள்ளத் தூண்டும் மனோவியாதி. —ஆசிரியர்: சக்தி

என்று கூறுவதை நான் ஆமோதிக்கிறேன். ஆகாயத்தில் பறக்கும் சக்தி வாய்ந்த மாய ஜமுக்காளமும் ஒரு அடி எடுத்து வைத்தால் நூறு மைல் போகக்கூடிய மாந்திரிக செருப்புகளும் உள்ள கற்பனை உலகத்தை விட்டு மனிதன் விஞ்ஞான வளர்ச்சி யடைந்த நாகரிக உலகத்துக்கு வந்துவிட்டால், தானே தன்னுடைய சுதந்திரத்துக்குத் தடை விதித்துக் கொள்ள முற்படுகிருன். விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப தன்னுடைய சுதந்திரத்தையும் வரையறுத்துக்கொள்ளுகிற மனிதன், தன்னுடைய உள்ளப் போக்கை, மனப் பண்பை, எண்ணங்களை நன்கு அறிந்து கொள்ளுவானுகில் தன் சுதந்திரத்தை அக விஷயங்கள் எவ்வளவுதான் பாதித்தாலும் சுதந்திரத்தோடு வாழமுடியும்.

தன்னிஷ்டம் போல் எங்கு வேண்டுமானுலும் செல்லும் உரிமை, மனிதனுக்கு அவசியம். அந்த உரிமையைப் பறித்தால் அவன் சுதந்திரபுருஷனுக இருக்க மாட்டான். பழங் காலத்தில் நடைமுறையில் இருந்த சுதந்திரம் இன்று பறி போய்விட்டது. இன்று நாம் ஒரு நாட்டைவிட்டு அந்நிய நாட்டுக்குப் போக வேண்டுமானல் நாம் செல்ல விரும்பும் நாட்டின் உத்தரவு பெற வேண்டும். பிரயாண சுதந்திரத்துக்கு மூல காரணமாயுள்ளவை, குதிரை, வண்டி, ரயில், மோட்டார், கப்பல், ஆகாய விமானம் முதலியவைதாம். விஞ்ஞான உதவியால் துரிதமாக ஓடும் வண்டிகள் கண்டுபிடிக்கப் பட்டவுடன், சில சிறு கட்டுப்பாடுகளும் தோன்றின. ஒரு குறிப்பிட்ட வேகத்துக்கு மேல் போகக்கூடாது என்கிற சட்டமும் அமலுக்கு வந்திருக்கிறது.

தன்னிஷ்டம் போல் எங்கு வேண்டுமானுலும் போகலாம் என்கிற உரிமையில் சில கட்டு திட்டங்கள் இருப்பது நல்லது தான். இல்லாவிட்டால் என்னுடைய வீட்டுக்குள் யார் வேண்டுமானுலும் புகுந்து என்னுடைய அந்தரங்க வாழ்க்கை உரிமையைப் பறிப்பார்கள். பிரயாண சுதந்திரத்தை மக்கள் அனுபவிக்காமல் இருப்பதற்குக் காரணம் வேலைத் தொந்தரவு காரணமாக அவகாசம் கிடைக்காமல் இருப்பது தான். இந்தக் குறையை ருஷ்ய நாட்டில் நிவர்த்தி செய்திருக்கிருர்கள் என்றே சொல்ல வேண்டும். போதிய விடுமுறை நாட்களும் மற்றச் சௌகரியங்களும் அவர்களுக்குக் கிடைக்கின்றன.

இந்தப் புறவிஷயங்களே மட்டுமின்றிச் சில வகுப்பாருடைய மூடப் பழக்க வழக்கங்களும் பிரயாணம் செய்வதை அவ்வளவாக ஆமோதிப்பதில்லை.

மனிதன் உற்பத்தி செய்கிருனே இல்லையோ, உற்பத்தியான பொருள்களை வாங்க அவனுக்கு உரிமை வேண்டும். அத்தியாவசியத்தேவையான உணவு, வீடு, உடை மூன்றும் போக மற்றத் தேவைகளிலும் கூட மனிதனுக்குக் கட்டுப்பாடு இருக்கக்கூடாது. அவசியமேற்படுகிறபொழுது கட்டுப்பாடு வேண்டியதுதான். 'மதுபானவிற்பனை விஷயங்களில் தடை இருக்க வேண்டும்; ஏனென்ருல் மக்கள் அனுவசியமாக அந்த உரிமையைப் பாழ்படுத்திக்கொள்ளுகிருர்கள்' என்று சிலர் சொல்லுகிருர்கள். 'குடி ஒழிப்பு' அவ

சியம் என்று சொல்வது அவ்வளவு விரும்பத் தக்கதல்ல. அம்மாதிரியான தடைகள் இந்தியா போன்ற நாடுகளில் வெற்றி பெறலாம்.

பழக்க வழக்கங்கள் காரணமாக ஒரு சாரார் சில பொருள்களை வாங்கமாட்டார்கள்.

உற்பத்தியாளர்கள் சுதந்திரம், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள் முதலியோரைத் தவிர, மற்றத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஓய்வு, வருஷ விடுமுறை, சம்பள உயர்வு போன்ற உரிமைகள் வேண்டும். உற்பத்தியாளர் உரிமையில் தங்களுடைய இஷ்டம் போல் பொருள் உற்பத்தி செய்யும் சுதந்திரமும் அடங்கியுள்ளது. அதுவும் இந்த விஞ்ஞான வளர்ச்சி அடைந்த இந்தக் காலத்தில் அவசியம். ஆனால் அந்த உரிமை சிலருடைய ஏக போக உரிமையினால் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

தனக்குப் பிரியமான, தன் மனநிலைக்கு ஒத்த வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை மனிதனுக்கு அவசியம். ஆனால் முதலாளித்துவ சமுதாயத்தில், வேலை யில்லாத் திண்டாட்டம் தலை விரித்தாடும் சமூகத்தில் மேற்சொன்ன சுதந்திரம் சாத்தியமில்லை.

ஆண் பெண் உறவு சம்பந்தப்பட்ட மட்டில், இருபாலாருக்கும் ஒத்த சுதந்திரம் வேண்டும். கூடி இல்வாழ்க்கை நடத்தவோ, அல்லது பிரிந்து போகவோ உரிமை வேண்டும்.

தான் எழுதுவதும், பேசுவதும், பிறரைப் பாதிக்காமலும், குற்றங்கள் செய்யத் தூண்டாமலும், அரசாங்கத்துக்கு விரோதமில்லாமலும், கன்னா பின்னாவென்று காலித்தனமாக இல்லாமல் இருக்கிற வரையிலும் மனிதன் எழுத்து, பேச்சுச் சுதந்திரத்தோடு இருக்கலாம். தனி மனிதனுடைய கௌரவத்துக்குப் பங்கம் விளைவிக்கும்படி பேசவோ எழுதவோ கூடாது.

அரசியல் சுதந்திரம்தான் ஒரு நாடு சுதந்திர நாடா இல்லையா என்று சொல்ல உதவுகிறது. அரசியல் சுதந்திரத்தைப் பற்றிப் பல கருத்துக்கள் இருப்பினும், ஜனநாயக ஆட்சிதான் ஒரு சுதந்திர நாட்டுக்கு அழகு. ஜனநாயக ஆட்சிமுறை இருவகைப்படும். ஒன்று: ரோமானியர் கையாண்ட ஜனநாயக முறை. இரண்டு: அமெரிக்காவில் நடைமுறையில் இருக்கும் ஜனநாயக ஆட்சி. இரு முறைகளிலும் குறைவு நிறைவுகள் உண்டு. அமெரிக்க ஜனநாயகத்தின் குறை என்னவென்றால், ஜனப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவிக்கு வந்தால் தாங்கள் என்னவெல்லாம் செய்வதாக வாக்களித்தார்களோ அவற்றை மறந்து சுயநலப் பிரியர்களாய் மாறிவிடுகிறார்கள். மேலும் ஆட்சி பீடத்துக்கு வருகிறவர்களும் ஜனங்களின் உண்மையான பிரதிநிதிகள் என்று சொல்லமுடியாது. பலம் பொருந்திய இரண்டொரு கட்சியின் அங்கத்தினர்களே பதவிக்கு வரமுடிகிறது. அந்தக் கட்சியின கொள்கைகளை நிர்ணயிப்பதும் அந்தக் கட்சியில் செல்வாக்கு வாய்ந்த ஓரிரண்டு தலைவர்கள் தான். இந்தக் குறைபாடு சோவியத் முறையில் நீக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தைப் போன்ற முதலாளித்துவ நாட்டில், முதலாளித்துவ சிறுபான்மையினர் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் இருக்கிற நாலைந்து

பெரிய தொழிற்சாலைகளை அடைத்து விடுவதனாலோ, அல்லது நாலைந்து 'பாங்கு'களை மூடிவிடுவதனாலோ, நாட்டில் பொருளாதார நெருக்கடியை உண்டு பண்ணி, அரசாங்கத்தை நிலைகுலையச் செய்துவிடலாம். ஆகவே அந்த நாட்டின் அரசியல் சுதந்திரம், சிறுபான்மையினரான முதலாளிகளிடம் இருக்கிறதென்றே சொல்ல வேண்டும். அப்படியிருக்க சோவியத் அரசாங்கம் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தில் இருக்கிறது என்று குறைகூறுவது அறிவுடைமையாகாது. உண்மையான அரசியல் சுதந்திரம், ஏழை பணக்காரன், ஆண்டான் அடிமை, முதலாளி தொழிலாளி என்கிற வேற்றுமைகள் இல்லாத மக்கள் சமூகத்தில்தான் இருக்கமுடியும்.

தன் இஷ்டப்படி எந்தக் கடவுளை வேண்டுமானாலும் வழிபடவும், இல்லையேல் வழிபடாமல் இருக்கவும் மனிதனுக்குச் சுதந்திரம் வேண்டும். மதசம்பந்தமான விஷயங்களில் ஒரு மதத்தினர் பிறமதத்தினரின் கொள்கை கோட்பாடுகளுக்கு மதிப்புக் கொடுத்து தாராளமனப்பான்மையோடு பழகவேண்டும். ருஷ்யா போன்ற முற்போக்கு நாடுகளில் அரசியலில் மதத்துக்கு இடம் கிடையாது.

பெண்களும் ஆண்களோடு சரிநிகர் சமானமாக வாழ அவர்களுக்கு உரிமை வேண்டும். முகம்மதியர்கள், பெண்களுக்கு உரிமை தராமல், அவர்களை, மதத்தின் பெயரால், பழக்கவழக்கத்தின் பெயரால் வீட்டுக்குள் போட்டு அடைத்து வைக்கிறார்கள். அமெரிக்கா ருஷ்யாபோன்ற நாடுகளில் பெண்களுக்குச் சமவுரிமைகள் அளிக்கப்படுகிறது.

மனிதனின் தனது உரிமைக்குப் போராடும்பொழுது, பிற்கால மனிதர்களாகிய சிறு குழந்தைகளுக்குத் தங்கள் இஷ்டம்போல் தங்களுடைய போக்குக்குத் தகுந்தவாறு தங்களுடைய கல்வி முறையைத் தேர்ந்தெடுக்க உரிமை வேண்டும். பார்க்கப்போனால் பணக்காரக் குழந்தைகளைக் காட்டிலும் ஏழைப் பிள்ளைகள்தான் சுதந்திரத்தோடு வாழமுடிகிறது.

மனித சுதந்திரம் நாட்டுக்கு நாடு, நூற்றாண்டுக்கு நூற்றாண்டு, விஞ்ஞான வளர்ச்சிக்குத் தகுந்தவாறு மாறிக்கொண்டேயிருக்கிறது. ஒரு மனிதன் சுதந்திரம் என்று நினைக்கும் உரிமைகள் மற்றவனுக்கு அடிமைத் தளையாகத் தோன்றலாம். வர்க்கபேதமுள்ள சமூக அமைப்பில், எல்லா வர்க்கத்தினரும் இன்புற்று வாழமுடியாது. சமூகத்தின் மேல் தட்டில் இருக்கும் முதலாளி வர்க்கம்தான், அரசியல், பொருளாதாரம், மதம் முதலிய சுதந்திரங்களோடு வாழமுடியும். ஒரு சாராரின் சுதந்திரத்தை அந்த நாட்டின் சுதந்திரம், அந்நாட்டு மக்களின் சுதந்திரம் என்று கூறமுடியுமா?

மூன்று முக்கியமான விஷயங்களை மனத்தில் இருத்த வேண்டும். முதலாவதாக, தான் சர்வ சுதந்திரத்தோடு வாழும் ஒருவன் பிறர் சுதந்திரத்தைப்பற்றிக் கவலைப்படுவதே கிடையாது. இரண்டாவதாக, மனிதன் கூடிவாழும் பிராணி. தான் வாழும் சமூகத்துக்கு ஏற்ற விதத்தில் வாழவேண்டும். மூன்றாவதாக சுதந்திரம் தேங்கி நிற்கும் ஒன்றல்ல. காலதேச வர்த்தமானங்களை ஒட்டி வளருகிறது.

# காமதேனு

## வனஸ்பதி

சுத்தமாக
சாஸ்த்ரீய
முறையில்
தயாராவது




பதார்த்தங்கள்
பூரண
ருசியுடன்
பரிமளிக்க

ஒவ்வொரு வீட்டிலும் விருப்புடன் வழங்கப்படுவது
கை படாமல் குணம் கெடாமல்
2, 5, 10, பவுண்ட் ஸீலிட்ட டின்களில் கிடைக்கிறது

காமதேனு கலந்ததே கை நிறைந்த விருந்து

வெளியிடுவோர்:
மேட்டூர் கெமிகல் அண்ட் இண்டஸ்ட்ரியல் கார்போரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை - சேலம்
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் லிட்., திருச்சிராப்பள்ளி

பூரண விற்பனை ஏஜெண்டுகள்: அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்டிரிப்யூடர்ஸ் லிட்
தலைமை ஆபீஸ்: 120, அரமனைக்கார வீதி, மதராஸ் 1.
கிளை ஆபீசுகள்: பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கோயம்புத்தூர், ஹைதராபாத், கும்பகோணம், மேட்டூர் அணை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம்

கவிதை யுலகில் ஓர் ஜோதி!

'யாழ்ப்பாணன்' புனைந்துள்ள

# 'மாலைக்கு மாலை'

முதலிய கவிதைகள்

மொழி, வாழ்த்து, காட்சிகள், நீதி, பாலர்கீதம், கண்ணன், இதயத் துடிப்பு என்னும் பிரிவுகளில் 55 கவிதைகள் கொண்ட முதலாங் கவிதைத் தொகுதி. நாமக்கல் கவிஞரின் முன்னுரை கொண்டுள்ளது.

புதுமணத் தம்பதிகளுக்குச்
சிறந்த திருமணப் பரிசு.

பிரதி விலை ரூ. 2-8-0

பிரசுரம்:

| இந்தியாவில் | இலங்கையில் |
| --- | --- |
| சக்தி காரியாலயம் | வடலங்கா புத்தகசாலை |
| சென்னை-14 | பருத்தித்துறை |

கம்யூனிஸ்ட் சமூகம் எவ்வாறு இருக்கும் என்பதை, கம்யூனிஸ்ட் சமூகத்தை நோக்கிச் செல்லும் ரஷ்ய மக்களுக்குத் தலைமை தாங்கியுள்ள ஸ்டாலின் சுருக்கமாக இங்கு விளக்குகிறார். இக் கட்டுரை, 1927-ம் வருஷத்தில் முதல் அமெரிக்கத் தொழில் தூதுகோஷ்டியினரின் கேள்வி ஒன்றுக்கு அளித்த பதிலாகும்.

# கம்யூனிஸ்ட் சமூகம்

ஸ்டாலின்

கம்யூனிஸ்ட் சமூகத்தின் பொது அம்சங்கள் மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்களில் கூறப்பட்டுள்ளன. சுருக்கமாகச் சொன்னால் கம்யூனிஸ்ட் சமூகத்தைக் கீழ்க்கண்டவாறு பிரித்து வர்ணிக்கலாம்:

கம்யூனிஸ்ட் சமூகத்தில்,

(அ) உற்பத்திக் கருவிகளும், சாதனங்களும் தனிச் சொத்தாக இராது. அவை சமூகச் சொத்தாக, பொதுச் சொத்தாக இருக்கும்.

(ஆ) பற்பல வர்க்கங்களோ, அரசாங்கமோ இராது. தங்கள் பொருளாதார விவகாரங்களைத் தாங்களே மேற்பார்த்துக் கொண்டு தாங்களாகவே ஒரு கூட்டாகச்சேர்ந்து கலந்து கொண்டு தொழிலும் விவசாயமும் செய்யும் தொழிலாளர்கள் மட்டும் இருப்பார்கள்.

(இ) தொழில், விவசாயம் முதலியவை செய்வதில் கையாளும் உயர்ந்த முறையை அடிப்படையாகக் கொண்டு, தேசியப் பொருளாதாரம் திட்டப்படி அமைத்து நிறுவப்படும்.

(ஈ) நகரத்துக்கும் கிராமத்துக்குமோ, தொழிலுக்கும் விவசாயத்துக்குமோ முரண்பாடுகள் இராது.

(உ) பழைய பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட்டுகளின் கொள்கைப்படி உற்பத்திப் பொருள்கள் பகிர்ந்து அளிக்கப்படும்: அதாவது சக்திக்கேற்ற உழைப்பினால் ஒவ்வொருவனும் பொருள்கள் உற்பத்தி பண்ணுவான்; ஒவ்வொருவனுடைய தேவைக்குத் தகுந்தபடி அந்தப் பொருள்கள் அவனவனுக்கு வழங்கப்படும்.

(ஊ) விஞ்ஞானமும், கலையும் அபரிமிதமான வளர்ச்சி பெறுவதற்குரிய நிலை நிலவியிருக்கும்.

(எ) தனி மனிதன் சாப்பாட்டுக் கவலையி லிருந்தும், ஆளும் வர்க்கங்களுக்கு அடிமைப்பட வேண்டிய கவலையிலிருந்தும் விடுபடுவதால், உண்மையில் சுதந்திர புருஷனாகிவிடுகிறான். இத்துடன் அவனுக்கு எத்தனையோ லாபங்களும் கிடைக்கின்றன. நாங்கள் இன்னும் இப்படிப்பட்ட சமூகத்தை அமைக்கவில்லை. அதற்கு வெகு தூரத்திலேயே இருக்கிறோம்.

கம்யூனிஸ்ட் சமூகம் பரிபூரண வெற்றி பெறுவதற்குச் சர்வதேச நிலையும் பொருத்தமாக அமையவேண்டும். சர்வதேசநிலை,

முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தினால் புரட்சி நெருக்கடிகளும், புரட்சி வெடிப்புகளும் ஏற்பட ஏற்பட அதற்கேற்ற அளவில் அபிவிருத்தி அடைந்துகொண்டுவரும். ஆனால் ஒரு விஷயத்தை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு நாட்டிலோ அல்லது பல நாடுகளிலோ தொழிலாளி வர்க்கம் சோஷியலிஸத்தை நோக்கியோ, கம்யூனிஸத்தை நோக்கியோ முன்னேறிக்கொண்டிருக்கும்போது, பிற நாடுகளில் உள்ள முதலாளிகள் கைகட்டிக்கொண்டு, அலட்சியமாக உட்கார்ந்து கொண்டிருக்க மாட்டார்கள். அத்துடன் முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கம், பிற நாட்டிலோ, நாடுகளிலோ சோஷியலிஸம் வெற்றிபெற்றுக் கொண்டு வருவதைப் பார்த்துக்கொண்டிருந்தால் போதும் என்று இருக்கச் சம்மதிக்க மாட்டார்கள். சோஷியலிஸம் வெற்றிபெற்று வரும் நாடுகளை முதலாளிகள் நசுக்கிவிடுவதற்கான எல்லாக் காரியங்களையும் செய்வார்கள் என்பது உண்மை. எந்த நாட்டில் சோஷியலிஸத்தை நோக்கியும், அதற்கு அப்பால் கம்யூனிஸத்தை நோக்கியும், ஒவ்வொரு முக்கியமான முயற்சியை எடுக்கும்போதும், அதை ஒட்டி முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கம் கொஞ்சம் கூடச் சலிப்படையாமல், தங்கள் சர்வாதிகாரத்தையும், சோஷியலிஸத்தையும் தங்கள் நாடுகளில் நிறுவுவதற்காக முயற்சி எடுப்பது தவிர்க்கமுடியாத காரியம் என்பது உண்மை. ஆகவே, சர்வதேசப் புரட்சியின் அபிவிருத்தியில் இனி உலகிலே இரண்டு மத்திய ஸ்தானங்கள் உண்டாகும். அவை யாவன: ஒன்று, சோஷியலிஸ்ட் மத்திய ஸ்தானம். அது சோஷியலிஸத்தை நோக்கிச் செல்லும் எல்லா நாடுகளையும் கவர்ந்திழுக்கும். மற்றொன்று, முதலாளித்துவ மத்திய ஸ்தானம். அது முதலாளித்துவத்தை நோக்கிச் செல்லும் எல்லா நாடுகளையும் கவர்ந்திழுக்கும். உலகப் பொருளாதாரத்தைக் கைப்பற்றுவதற்காக இந்த இரண்டு மத்திய ஸ்தானங்களுக்கும் நடுவே நடக்கும் போராட்டம் உலகெங்கும் உள்ள முதலாளித்துவத்தின் தலைவிதியையும் கம்யூனிஸத்தின் தலைவிதியையும் நிர்ணயிக்கும். ஆகவேதான், உலகப் பொருளாதார அரங்கில் உலக முதலாளித்துவத்தின் கடைசித் தோல்வியானது சோஷியலிஸத்துக்கு வெற்றியாக அமைகிறது.

✲

### இரு முகாம்கள்

இன்று உலகம் இரண்டு பெரிய வகுப்புகளாகப் பிரித்திருப்பதைக் காண்கிறோம். ஏகாதிபத்தியமும் பாஸிஸமும் ஒரு புறம்; அபேதவாதமும் தேசியமும் மற்றொரு புறம். இவை இரண்டும் சிற்சில சமயங்களில் ஒன்று செய்த காரியத்தையே மற்றொன்றும் செய்தபோதிலும் இவைகளின் வேலைத்திட்டத்தை வரையறுப்பது சிரமம். ஏனெனில் பாஸிஸத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் பரஸ்பரம் முரண் இருக்கிறது. அடிமை நாடுகளின் தேசியம் சிற்சில சமயங்களில் பாஸிஸ்ட் தன்மையுடையதாய் இருக்கிறது. ஆனால், முக்கியப் பிளவு இருந்து கொண்டுதானிருக்கிறது. இதை நாம் மனதிலிருத்திக்கொண்டால், உலக நிலைமையையும் அதில் நம்முடைய ஸ்தானத்தையும் தெரிந்து கொள்ளுவது சுலபமாயிருக்கும்.

—பண்டித நேரு (1936, லக்ஷ்மண்புரி காங்கிரஸில்)

# கஜானா

ப. ஸ்ரீநிவாசன்

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்!"

"ஒழிக!"

"பிரிட்டிஷ் கொடுங்கோன்மை!"

"அடியோடு ஒழிக!"

"மஹாத்மா காந்திக்கு ஜே!"

"ஜே!"

"........."

1942-ஆம் வருஷம், ஆகஸ்டு மாதம், ஒன்பதாம் தேதி மாலையில் ஊர்வலமாக அணிவகுத்துச் சென்ற அந்த மாபெரும் ஜனக் கூட்டத்தின் ஆர்ப்பாட்டத்தால் ஆகாயமும் பூமியும் கிடுகிடுவென நடுங்கின. ஆவேச வேகத்தினால் ஒவ்வொருவனும் யானைப் பலத்துடன் அண்டங்குலுங்க நடந்தான். மக்களின் ஆயிரக் கணக்கான கண்கள் கனல் துண்டங்களாக ஜொலித்தன. அவர்களது தேகமெல்லாம் தீயாய்க் கொதித்தது.

"தலைவர்களைக் கைது செய்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்!"

"அடியோடு ஒழிக!"

"காந்திஜியை கைது செய்த அதிகார வர்க்கம்!"

"அடியோடு ஒழிக!"

"மஹாத்மா காந்திக்கு!'

"ஜே!"

"........."

பம்பாயில் கூடி விடுதலைப் போர்த் திட்டம் வகுத்துக் கொண்டிருந்த தலைவர்கள் அனைவரையும் பிரிட்டிஷ் அரசாங்கம் திடீரெனச் சிறைபிடித்து மக்களிடமிருந்து பிரித்துவிட்டது. தலைவர்கள் என்னவானார்கள்? நாடுகடத்தப்பட்டனரா? அல்லது......?

"மஹாத்மா காந்திக்கு!"

"ஜே!"

"தலைவர்களை!"

"விடுதலை செய்!"

"அந்நியரின் ஆதிக்கம்!"

"அடியோடு ஒழிக!"

தாயின் விலங்கைத் தகர்த்தெறிவதற்காகச் சர்வத்தையும் தியாகம் புரிந்த வீரத்தலைவர்களை, நாற்பது கோடி மக்களின் முடிசூடா மன்னர்களை, அந்நிய அரசாங்கம் கைது செய்ததை அறிந்த பிறகும் எந்த இந்தியன் தான் கைகட்டிச் சும்மா யிருப்பான்? அவனுக்கு மானமில்லையா? உலகம் காறி உமிழாதா? அந்த மிலேச்ச ஆட்சியைப் படுசூரண மாக்க வேண்டாமா?

"வெள்ளையனே!"

"வெளியேறு!"

"கொள்ளையடிக்கும் வெள்ளையனே!"

"நாட்டைவிட்டு ஓடடா!"

"அடிமை வாழ்வு!"

"அடியோடு ஒழிக!"

"நமதே ராஜ்யம்!"

"அடைந்தே தீர்வோம்!"

"மஹாத்மா காந்திக்கு!"

"ஜே!"

"........."

தாலுகாவின் தலைமை ஸ்தலமான அந்த ஊரில் ஒரு ஆண்பிள்ளைகூட, ஐந்துவயதுப் பையன்கூட, வீட்டில் தங்காமல் எல்லோரும் ஊர்வலத்தில் திரண்டு நின்றனர். வீட்டு வாசலில் பெண்கள் மாத்திரம் நின்று தவித்துக்கொண்டிருந்தனர். ஊர்வலத்தினரின் உணர்ச்சிப்

அவனும் பணம் திருடியவன்தான்; எனினும் அவனுக்கும் நல்லுணர்ச்சிகள் அற்றுப்போய்விட்டனவா? கஜானாவிலுள்ள அந்தக் கரன்ஸி நோட்டு அவனுக்குப் பணமாகவா தோன்றிற்று? கதையைப் படியுங்கள்.

புயல் எல்லாம் மாதர்களின் இத யத்திலும் அடித்துக்கொண் டிருந்தது.

காந்திக் குல்லாய் அணிந்த பத்துப் பதினைந்து இளைஞர்கள் ஊர்வலத்தை முன்னின்று நடத்திச் சென்றனர்.

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்!"

"அடியோடு ஒழிக!"

"வெள்ளையனே!"

"வெளியேறு!"

"மஹாத்மா காந்திக்கு!"

"ஜே!"

எதிரே போலீஸ் கோஷ்டி ஒன்று வருவதைக் கண்டதும் மக்களின் ஆர்ப்பாட்டம் அதிகரித்தது. பத்து கான்ஸ்டபிள்களை அணிவகுத்து நடத்தி வந்த சப் இன்ஸ்பெக்டர், ஜனக் கூட்டத்திற்கு இருபது கெஜ தூரத்தில் வந்ததும் "நில்லுங்கள்!" என்று கத்தினர். கான்ஸ்டபிள்கள் "டக்" என்று நின்றனர்.

"மஹாத்மா காந்திக்கு!"

"ஜே!"

சண்டமாருதம் போல் ஜனங்களின் குரல் ஒலித்தது.

"பண்டித நேருவுக்கு!"

"ஜே!"

"காரியதரிசி முத்தையாவுக்கு!"

"ஜே!"

அந்த ஊர் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி முத்தையா முதல் நாள்தான் கைது செய்யப்பட்டிருந்தார். பழுத்த தேச பக்தராகிய அவர் ஜல பானமின்றி சிறையில் அவதிப்படுவதாக ஊரில் பேச்சு நடமாடியது.

"போலீஸ் குண்டாந்தடி தர்பார்!"

"அடியோடு ஒழிக!"

"அடக்கு முறை!"

"அடியோடு ஒழிக!"

எதிரே நின்ற போலீஸாரை நோக்கி ஜனக் கூட்டம் முன்னேறியது.

தடியடிப் பிரயோகம் நடத்துமாறு சொல்ல சப் இன்ஸ்பெக்டர் வாயைத் திறக்குமுன் போலீசார் மீது "பட்பட்" என்று கல் மாரி பொழிந்தது. சப்இன்ஸபெக்டரின் குல்லாயை ஒரு "மலம்பிஞ்சு" அலக்காகத் தூக்கிச் சென்று சாக்கடையில் புகுத்தியது. துப்பாக்கியைத் தூக்கிப் பிடிக்கக்கூட அவகாச மில்லாமல், கல் வீச்சினுல் கதி கலங்கிய போலீசார், "ரைட் அபவுட்டேன்!" (திரும்புங்கள்) என்று சப்-இன்ஸ்பெக்டர் கத்தியவுடன் திரும்பி நின்று ஓட்டம் பிடித்தனர்; தலை தெறிக்க ஓடினர்.

ஜனங்கள் கோஷமிட்டுக் கொண்டு துரத்திச் சென்றனர். கூட்டத்தில் சிலர் கீழே விழுந்து மிதிபட்டனர்.

போலீஸ் ஸ்டேஷனை நோக்கி போலீஸார் ஓடினர். மக்களும் அங்கேதான் சென்றனர்.

அரைப் பர்லாங்குச் சச்சவுக்கத்தில், ஆளுயரக்காம்பவுண்டின் மத்தியில், சிவப்புக் காவி பூசிய அந்தப் போலீஸ் ஸ்டேஷனும், அதை அடுத்து ஸ்தல சிறையும், தாலூகா ஆபீஸும் எத்தனையோ வருஷங்களாக இருந்து ஆட்சி செலுத்தி வந்தன.

சிங்கங்களைப் போல் தாவி வந்த ஜனங்கள் போலீஸ் ஸ்டேஷனை நெருங்கிவிட்டனர்.

'ஜே' கோஷம் பின் தொடர எங்கிருந்தோ பறந்து வந்த பாராங்கல் ஒன்று சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் நெற்றியில் மோதியது.

"சுடுங்கள்!" என்ற கூக்குரலுடன் அவர் கீழே விழுந்து பிரக்ஞை இழந்தார்.

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி

## லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

| | | |
|---|---|---|
| 5,00,000 நூற்கும் கதிர்கள் | ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல். | நம்பர் 80 வரை நூல்கள் |

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

# ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

## ஆஸ்த்மாவை குணப்படுத்துவது



## ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.



**ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது**

**புரோஹித ஸ்வாஸஹாரி**

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR



# பிரபஞ்ச ஜோதி பிரசுரங்கள்

*சமீபத்தில் வெளியான*

## வெ. சாமிநாத சர்மா நூல்கள்

★

| | | |
|---|---|---|
| அரசியல் வரலாறு | 2 | 10 |
| கார்ல் மார்க்ஸ் | 3 | 4 |
| மானிட ஜாதியின் 'சுதந்திரம் | 1 | 4 |
| ஸ்ரீராம, கிருஷ்ணர்— ஒரு தீர்க்கதரிசி | 2 | 4 |
| ஆசியாவும் உலக சமாதானமும் | 2 | 8 |
| ஐக்கியதேச ஸ்தாபனம் | 2 | 0 |
| ருஷ்ய-சரித்திர வரலாறு | 1 | 8 |
| சுப்பிரமணிய சிவம் | 1 | 2 |
| பிளேட்டோவின் அரசியல் | (அச்சில்) | |
| சமுதாய சிற்பிகள் | (அச்சில்) | |

சென்னையில் கிடைக்கும் :
**சக்தி காரியாலயம்**
ராயப்பேட்டை :: சென்னை 14.

## பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்

**புதுக்கோட்டை**
**திருச்சி ஜில்லா**

சுடுவதற்காகக் கண்ணை இடுக்கிப் போலீஸார் குறிபார்த்தனர்.

"மஹாத்மா காந்திக்கு!"

"ஜே!" கொந்தளிக்கும் கடலைப்போல் மக்கள் கர்ஜித்தனர்.

ஸ்டேஷனின் நாலுபுறங்களிலிருந்தும் சுவரேறிக் குதித்து உள்ளே புகுந்த நூற்றுக் கணக்கான ஜனங்கள், போலீஸார் மீது பாய்ந்து, அவர்களைக் கீழே உருட்டிவிட்டனர். வாசலை மாத்திரம் பார்த்து நின்ற போலீஸார் ஏமாந்து போயினர்.

ஒரு கோஷ்டி தாலூகா ஆபீஸில் புகுந்து தாசில்தாரை இழுத்து வந்து கட்டிப் போட்டது. யுத்த நிதி வசூலுக்காக ஜனங்களைக் கொடுமைப் படுத்தி பேர் வாங்கியவர் அவர்.

"மஹாத்மா காந்திக்கு!"

"ஜே!"

"காரியதரிசியை விடுதலை செய்!"

எல்லோரும் சிறையை நோக்கிச் சென்றனர். போலீஸாரிடமிருந்து கைப்பற்றிய திறவுகோலால் சிறைக் கதவைத் திறந்தான் ஒரு இளைஞன். எழெட்டுப் பேர் அறைக்குள் புகுந்து காரியதரிசியைத் தலைக்கு மேல் தூக்கி வைத்துக்கொண்டு வெளியே கொணர்ந்தனர்.

"காரியதரிசி முத்தையாவுக்கு!"

"ஜே!"

முதலில் காரியதரிசிக்கு ஒரே திகைப்பாக இருந்தது. ஜனங்களின் செய்கையை அங்கீகரிப்பது சரியா என்று அவருக்குச் சந்தேகம் தட்டியது. ஆனால் வழிகாட்டுவதற்குத் தலைவர்கள் இல்லாத போது ஏதாவது செய்தாக வேண்டுமே! "இதுவே கடைசிப் போராட்டம்" என்று அவரது அந்தராத்மா அலறியது. மக்களின் ஆர்ப்பாட்டத்தில் அவரும் சேர்ந்து கொண்டார்.

"மஹாத்மா காந்திக்கு!"

"ஜே!"

காரியதரிசியின் அறைக்கு அடுத்த அறையில், கம்பிக் கதவைப் பிடித்து நின்ற நான்கு கிரிமினல் கைதிகள் ஆச்சரியத்துடன் வெளியே பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களில் உயரமும் பருமனுமாகக் கன்னங்கரேலென்று இருந்த ஒரு கைதி, "அண்ணே! என்ன சங்கதி அண்ணே?" என்று உரத்த குரலில் கேட்டான்.

"காந்திஜியைக் கைது செய்திட்டாங்க......நாங்க இந்த அரசாங்கத்தை ஒழிக்கப்போறோம்" என்று பொது ஜனங்களில் ஒருவன் பதிலளித்தான்.

"இவங்களையும் திறந்து விடுங்கடா! வயத்துக்கு இல்லாமத்தானே திருடியிருப்பாங்க!" என்று கூட்டத்தின் மத்தியிலிருந்து ஒரு குரல் கேட்டது.

அந்தக் கிரிமினல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர். வெளியே ஓடும் சிந்தனையே தோன்றாமல் அவர்கள் ஜனக் கூட்டத்துடன் உற்சாகமாகக் கலந்து கொண்டனர்.

அடுத்தாற் போல்?

"இடி! நொறுக்கு! கொளுத்து! எகாதிபத்திய சின்னங்களைச் சாம்பலாக்கு!"

சிறைச்சாலை மீது பெட்ரோலும் மண்ணெண்ணெயும் குபீரெனப் பாய்ந்தன. அவை எங்கிருந்து தான் வந்தனவோ! அடுத்த நிமிஷமே சிறைச்சாலை பற்றி எரிந்தது.

போலீஸ் ஸ்டேஷனிலும் தீப் பிடித்தது.

அக்னி ஜ்வாலையும் 'ஜே' கோஷமும் போட்டி போட்டுக் கொண்டு ஆகாயத்தை நோக்கிப் பறந்தன.

தீப்பந்தங்களுடன் தாலுகா ஆபீஸிற்குள் ஒரு கூட்டம் பாய்ந்தது. தஸ்தாவேஜிகளையும், நாற்காலி மேஜைகளையும் ஹால் நடுவே கொண்டு குவிப்பதில் மீதிப்பேர் சுறுசுறுப்பாய் ஈடுபடலாயினர்.

கோரமாக நாவைச் சுழற்றிய தீப்பந்தத்தைக் கையில் ஏந்தி ஒருவன் வழி காட்ட, ஐந்தாறு பேர் கஜானா அறையில் புகுந்தனர்.

அவர்களில் ஒருவன் ஆஜானுபாகுவான அந்தக் கிரிமினல் கைதி. அவன் தலையும் தாடியும் மீசையும் காடுபோல் அடர்ந்து வளர்ந்திருந்தன. அழுக்கடைந்த கிழிசல் வேஷ்டி ஒன்றை அவன் அரையில் கட்டியிருந்தான். திருட்டுக் குற்றத்துக்காக அவன் பெற்றிருந்த இரண்டு வருஷக் கடுங்காவல் தண்டனையில் மூன்று மாதங்கள்தான் கழிந்திருந்தன.

அறையின் நடுவே இருந்த இரும்புப் பெட்டியை தீவட்டிக்காரன் அணுகினான். அந்தக் கைதி சுற்று முற்றும் திரும்பிப் பார்த்துவிட்டு, அருகில் இருந்தவன் தலையில் இருந்த காந்திக் குல்லாயை மெதுவாக எடுத்து தனது தலையில் வைத்துக் கொண்டான்.

முன்னால் சென்றவன் இரும்புப் பெட்டியைத் திறந்தான். அந்தப் பிரமாண்டமான பெட்டியில் கரன்ஸி நோட்டுகள் கட்டுக் கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வெள்ளி ரூபாய்கள் கண்ணைப் பறித்தன.

"அடேயப்பா! என்ன பணம்டா!" என்று சொல்லி விட்டு தீவட்டிக்காரன் திடுக்கிட்டுப் பின் வாங்கினான். தீப்பந்தத்தை அவன் கை சோர விட்டு விட்டான்.

கீழே கிடந்த தீப்பந்தத்தை அந்தக் கைதி சட்டென்று கையில் எடுத்தான். "கொளுத்துடா! கொளுத்து! நாளைக்குத் தான் காந்தி ராஜா ரூபா வரப் போகுதே! கொளுத்து! சாம்பலாக்கு!" என்று சொல்லிக் கொண்டே கரன்ஸி நோட்டுகளுக் கிடையே தீப்பந்தத்தை அவன் சொருகினான். இரும்புப் பெட்டிக்குள் தீ தகதக வென்று எரிய ஆரம்பித்தது.

"எல்லோரும் வெளியே வாங்கடோய்!"

உள்ளே இருந்தவர்கள் வெளியே ஓடிவந்தனர். தாலுகா ஆபீஸையும நெருப்பு வியாபித்துக் கொண்டது. பனை உயரத்துக்கு ஜ்வாலை எழுந்தது.

அந்தக் கட்டிடங்களை எல்லாம் நெருப்பு உண்ண பல மணி நேரம் பிடித்தது. ஜனங்கள் ஆர்ப்பரித்துக்கொண் டிருந்தனர். கைகளைக் கட்டிக் கொண்டு அந்தக் கைதி சற்று ஒதுங்கி நின்று, அந்தச் சிவப்புக் காட்சியை மௌனமாகப் பார்த்தான்.

எல்லாம் எரிந்து தணிந்தது. கரி படிந்த மூளிச் சுவர்கள் அரைகுறையாய் நின்றன. அந்தக் கைதி அருகே சென்று, கீழே குனிந்து சிறிது சாம்பலைக் கையில் எடுத்து, கண்களை பயபக்தியுடன் மூடிக் கொண்டு, நெற்றியில் பூசினான். சாம்பல் சுட்டது.

✱

# சுதந்திர இந்தியாவின் அரசியல் சட்டம்

●

**காலக்கோலன்**

பிரிட்டிஷார் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதாகக் கூறி, அதிகாரத்தை இந்தியரிடம் ஒப்படைத்து ஒரு வருஷகால மாகிறது. இந்தியயூனியனிலும், பாகிஸ்தானிலும் இன்னும சுதந்திர அரசியல் அமைப்பு சட்டம் நிறைவேற்றப்பட வில்லை. பிரிட்டிஷார் இத்தனை நாட்களாக ஏதோ பார்லிமெண்டில் சட்டமியற்றி நாட்டை ஆண்டனர். நமக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர் நம்முடைய அரசியல் அமைப்பை நாம்எப்படி அமைத்திருக்கிறோம், அதனல் நம்முடைய அரசியல் நிலைமையோ பொருளாதார நிலைமையோ எப்படி மாறியிருக்கிறது என்று கேட்டால் அக் கேள்விக்குத் திருப்திகரமான பதில் ஒன்றும் தருவதற்கு முடியவில்லை.

1946-லேயே அரசியல் நிர்ணய சபை ஏற்பட்டது. 1947, ஆகஸ்டில் பிரிவினை ஏற்பட்டது. அதற்கு முன்பே அவ்வப்பொழுது சுதந்திர இந்தியாவின் லட்சியம் என்ன, அரசியல் சட்டத்தின் அடிப்படையான கொள்கை என்ன என்பன பற்றிய விவாதங்கள் நடந்தன; தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றை அனுசரித்து அந்த லட்சியங்களில், கொள்கைகளைச் "சட்டத்துக்கேற்ற பாஷையில்" ஓர் அரசியல் சட்டத்தை அம்பேத்கார் தலைமையில் வேலை செய்த ஒரு நிபுணர்கள் கமிட்டி, மசோதா ரூபத்தில் தயாரித்து வெளியிட்டது. இந்தப் பிரஸ்தாபத் திட்டம் பிப்ரவரி மாதக் கடைசியில் வெளியிடப்பட்டது. நமது நாடு எந்த வகையில் அரசாளப்படும் என்பது நமக்கு முக்கியமான விஷயம். சமூகத்தில் புரட்சிகரமான மாறுபாடு ஒன்று ஏற்பட்டு புதிய நிலைமை ஏற்பட்டால் இந்த அரசியல் சட்டம் மாற்றப்படலாம். அத்தகைய ஓர் எதிர்பாராத நிலைமை ஏற்படாத வரையில் நீண்ட நாட்களுக்கு சுதந்திர இந்தியாவின் அரசாங்கம் இப்பொழுது இயற்றப்படும் சட்டத்தின் அடிப்படையில்தான் நடைபெறும். ஆதலால் இச் சட்டம் எப்படி இருக்கிறது என்பதையும் அது எப்படித் திருப்தி அடைய வேண்டுமென்பதையும் நாம் அனைவரும் அறியவேண்டும். சுதந்திர ஜனநாயக அடிப்படையில் நமது நாட்டார் மலரவேண்டும் என்று விரும்பும் ஒவ்வொரு மனிதனும் இவ்விஷயத்தில் அக்கறை கொள்ள வேண்டும்.

பிரஸ்தாபத் திட்டம் வெளியாகி ஐந்து மாதங்களாகிவிட்டன. திட்டத்தைப் பற்றிப் பொது ஜனங்களிடையே விசேஷமான விவாதம் ஒன்றும் காணப்படவில்லை. திட்டம் என்ன என்பதையும் விளக்கிக் கூறுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் சர்க்காரோ, முக்கியமான அரசியல் கட்சிகளோ எடுத்துக்கொள்ள வில்லை. அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்கள்கூடப் பொது ஜனங்களி

சில மாதங்களுக்குமுன் அம்பேத்கார் தலைமையில் ஒரு கமிட்டி, சுதந்திர இந்தியாவுக்கு அரசியல் சட்டம் வகுத்துச் சமர்ப்பித்தது அல்லவா? அந்த அரசியல் சட்டத்துக்கு விமர்சனமே இக் கட்டுரை.

டையே, அந்தச் சபையின் வேலையைப்பற்றி எவ்விதப் பிரசாரமும் செய்யவில்லை.

ஜனங்களுடைய தொடர்பு இல்லை

அரசியல் நிர்ணய சபை ஜனங்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டதல்ல. ஏகாதிபத்தியத்தால் ஏற்படுத்தப்பட்ட பழைய அரசியல் சட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சட்ட சபைகளால் இதற்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பொது ஜனங்களுக்கும் அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்களுக்கும் நேரடியான சம்பந்தம் இல்லாமற் போயிற்று.

மேலும் ஜனங்களுக்கு வாழ்க்கையைப் பற்றிய தொல்லைகளும் கவலைகளும அதிகரித்துவிட்டன. விலைவாசிகளின் உயர்வு, வேலை நீடிக்குமோ இல்லையோ என்ற கவலை, வியாபார மந்தம்—இத்தகைய பொருளாதாரக் குழப்பத்தில் அரசியல் சட்டத்தின் அமைப்பைப் பற்றி அவர்கள் கவலைப்படாமலிருப்பது அதிசயமல்ல.

அம்பேத்கார் கமிட்டி தயாரித்துள்ள சட்ட நகலின் முக்கிய அம்சங்கள் என்ன என்பதைப் பார்ப்போம்.

அரசாங்க உறுப்புகள் :

இந்தச் "சட்டத்தில்" 18 பாகங்கள் இருக்கின்றன. எழு அனுபந்தங்கள் இருக்கின்றன. மொத்தம் 315 பிரிவினைகள் (articles) — இருக்கின்றன. பாகங்கள் ஒவ்வொன்றும் அரசின் (அரசாங்கத்தின்) வெவ்வேறு பகுதியைப் பற்றியவை. உதாரணமாக, இந்திய யூனியன் பகுதிகள் என்ன என்பதை ஒரு பகுதி குறிக்கிறது; மற்றொன்று யூனியன் அரசாங்க உறுப்புகள் என்ன என்பதைக் குறிப்பிடுகிறது; இப்பொழுது மாகாணங்களாக இருக்கும் பாகங்களின் அரசாங்க அமைப்பை இன்னொரு பகுதி குறிப்பிடுகிறது. தவிர அடிப்படையான உரிமைகள், அரசாங்கத்தின் பொதுவான லட்சியங்கள் ஆகியவற்றைக் குறிப்பதற்குத் தனிப் பாகங்களையும் பிரஸ்தாப மசோதாவில் காணலாம்.

இந்திய யூனியன் :

பிரஸ்தாப மசோதாவின்படி இந்திய யூனியன் ஒரு சமஷ்டி அரசாக (Federal State) —பல 'அரசு'கள் சேர்ந்துள்ள ஒரு அரசாக—இருக்கும். இந்திய யூனியனுடைய ஒவ்வொரு பகுதியையும் ஒரு அரசு (State) என்று குறிப்பிடுகிறார்கள். அப் பகுதியின் அந்தஸ்து மாகாணத்தின் அந்தஸ்தைவிட உயர்ந்தது. அப்பகுதிக்குள் அரசாங்க அந்தஸ்துடன் சட்ட மியற்றவும், வரி விதிக்கவும் அதற்கு அதிகாரம் உண்டு.

இந்த யூனியனில் சேரும் பகுதிகளை மூன்று விதமான 'அரசு'களாக இச் சட்டம் பிரித்துக் கூறுகிறது. தற்போதுள்ள மாகாணங்கள், டில்லி, குடகு போல் மத்திய சர்க்காரால் நடத்தப்படும் பிரதேசங்கள், சமஸ்தானங்கள் ஆக மூன்றுவிதமான அரசுகளைக் கொண்டது இந்திய யூனியன்.

சட்ட சபை:

இந்திய யூனியனில் சட்ட சபையாகிய பார்லிமெண்டு இரு சபைகளைக் கொண்டதாகும ஒன்று ஜனப் பிரதிநிதிகளின்

சபை, மற்றொன்று "அரசுகளின் கவுன்ஸில்" (Council of States) இவ் விரண்டில் விசேஷமானது ஜனப்பிரதி நிதிகளின் சபையே. ஏனெனில் நிதி சம்பந்தமான மசோதாக்களை நிறைவேற்றும் அதிகாரம் இச்சபையினுடையது. மேல் சபையாகிய கவுன்ஸில் இந்த மசோதாக்களைத் திருத்தினாலும், அத் திருத்தங்களை ஜனப்பிரதி நிதி சபை ஏற்காவிடில், திருத்தங்கள் செல்லுபடியாகாது. மற்ற விஷயங்களில் இரு சபைகளுக்கும் அபிப்பிராய பேதமேற்பட்டால் இரண்டு சபைகளும் சேர்ந்து கூடி ஒரு முடிவிற்கு வருவதற்கு வேண்டிய ஷரத்து பிரஸ்தாப சட்டத்தி லிருக்கின்றது.

கீழ்ச்சபை அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கை 500க்கு அதிகமாக இருக்கக்கூடாது. 7½ லட்சம் ஜனத்தொகைக்கு ஒரு பிரதிநிதியாவது இருக்கவேண்டும்

மேல் சபையின் அங்கத்தினர் தொகை 250. கலை, விஞ்ஞானம் போன்ற துறைகளில் விசேஷ அனுபவம் பெற்றவர்கள் 15 பேரை, ஜனாதிபதி நியமனம் செய்யலாம். மீதமுள்ள அங்கத்தினர்கள் இந்திய யூனியனில் சேர்ந்துள்ள 'அரசுகளின்' பிரதிநிதிகள். அந்தந்தப் பகுதியின் சட்டசபையோ, சட்டசபைகளோ அப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஜனப்பிரதிநிதிகளின் சபை 5 வருஷத்திற் கொருமுறை பூராவும் கலைக்கப்படும்; புதிய தேர்தல்களில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, புதிய சபை கூட்டப்படும். இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை கவுன்ஸில் அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பகுதி எண்ணிக்கையாகும் நபர்கள் 'ரிடையர்' செய்யவேண்டும். எந்த வருஷத்திலும் கவுன்ஸில் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர், நாலு வருஷ அனுபவமுடையவர்களாக இருப்பார்கள்.

ஜனாதிபதி:

இந்திய யூனியன் ஒரு "சுதந்திர ஜனநாயகக் குடியரசு" என்று நகல் மசோதா குறிப்பிடுகின்றது. இந்தக் குடியரசின் தலைவராக ஒரு ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப் படவேண்டும். அவரைத் தேர்ந்தெடுப்பதற்காக யூனியன் சட்டசபையின் அங்கத்தினர்களும், மற்ற 'அரசு'களின் சட்டசபை அங்கத்தினர்களும் கூடுவார்கள். ஜனாதிபதி 5 வருஷகாலம் பதவி வகிக்கலாம். ஜனாதிபதியைத் தவிர ஓர் 'உப ஜனாதிபதி'யை யூனியன் பார்லிமெண்டு தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த "உப ஜனாதிபதி" கவுன்ஸிலின் அக்கிராசனர் பதவியை வகிப்பார். ஜனாதிபதி பதவி 5 வருஷத்திற்குள் காலியானால் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் வரையில் உப ஜனாதிபதி ஜனாதிபதியாக வேலைசெய்வார்.

பிரெஞ்சுக் குடியரசில் ஜனாதிபதி வெறும் அலங்காரப் பதவி; அமெரிக்கக் குடியரசில் ஜனாதிபதிக்குக் கொடுப்பட்டுள்ள அதிகாரம் அதிகமானது. இந்திய யூனியன் அரசியல் சட்ட மசோதாவில் இவ்விரண்டுக்கு மிடையான ஓர் அந்தஸ்தை ஜனாதிபதிக்கு ஏற்படுத்தி இருக்கின்றனர்.

கூட்டுப் பொறுப்புள்ள மந்திரி சபை:

யூனியன் அரசாங்கத்தை நடைமுறையில் நடத்துவது யூனியன் மந்திரி சபை. இச் சபையை "மந்திரிகள் கவுன்ஸில்" எனக்

குறிப்பிட்டுள்ளனர். இச் சபை பார்லிமெண்டின் கீழ்ச் சபையாகிய ஜனப்பிரதிநிதி சபைக்குப் பொறுப்பு வாய்ந்தது. மந்திரி சபையின் பொறுப்பு கூட்டுப் பொறுப்பு. பிரதம மந்திரியை ஜனாதிபதி நியமனம் செய்ய வேண்டும்; மற்ற மந்திரிகளை இப் பிரதம மந்திரியின் சிபார்சுப்படி ஜனாதிபதி நியமனம் செய்ய வேண்டும். இவ்வாறாக ஜனப் பிரதிநிதி சபைக்குட்பட்டதும், கூட்டுப் பொறுப்பு வாய்ந்தது மான ஒரு பார்லிமெண்டரி ஜன நாயகத்தைப் பிரஸ்தாப திட்டம் ஏற்படுத்துகிறது. நிர்வாக அதிகாரம் முழுதும் ஜனாதிபதியின் பெயரால் நடக்கும். ஆனால் ஜனாதிபதியின் வேலையில் மந்திரி சபையின் உதவியினால், அதன் சிபார்சுப்படி நடக்க வேண்டும்.

**நீதிஸ்தலம்:**

ஏந்த அரசியல் அமைப்பிலும் முக்கியமான அம்சங்கள் மூன்று. சட்டம் இயற்றும் அமைப்பு, சட்டத்தை அமல் நடத்தி நிர்வாகத்தை நடத்தும் அமைப்பு, சட்ட திட்டங்களும் நியாயமும் ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதை நிர்ணயிக்கும் நீதிஸ்தல அமைப்பு ஆகிய மூன்று அம்சங்கள். மூன்றாவதாகிய நீதிஸ்தல அமைப்புக்கும் பிரஸ்தாப திட்டம் ஷரத்துக்களைத் தயாரித்துள்ளது. ஒரு "சுப்ரீம் கோர்ட்" ஏற்படுத்தப்படும். அதன் நீதிபதிகள் எண்ணிக்கை ஏழுக்குக் குறையக்கூடாது. அவர்களை நியமனம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதியினுடையது. நீதிபதியாக நியமிக்கப் பட்டவர்கள் 65 வயது வரையிலும் பதவி வகிக்கலாம். நீதிபதியின் நடத்தையை ஆக்ஷேபித்துப் பார்லிமெண்டு சபையில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்கள் தீர்மானம் நிறைவேற்றினாலொழிய, நீதிபதியைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது. பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உத்திரவுகளைப் போடுவதற்கு இந்தக் கோர்ட்டுக்குச் சுயமாகவே அதிகாரம் உண்டு. இந்திய சர்க்காருக்கும் யூனியனிலுள்ள மற்ற 'அரசு'களின் சர்க்காருக்கும் ஏற்படும் சச்சரவுகளில் இக்கோர்ட்டு தீர்ப்பளிக்கும்; மற்ற ஹைகோர்ட்டுகளின் மேல்கோர்ட்டாகவும் அது இயங்கும். அதன் அதிகாரத்தை விஸ்தரிப்பதற்கும் சட்டத்தில் இடம் உண்டு. அரசியல் சட்டத்தைப்பற்றிய விஷயங்களில் இக் கோர்ட்டின் அபிப்பிராயத்தை ஜனாதிபதி கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

இவையே மத்திய அரசாங்க அமைப்பின் முக்கிய அம்சங்களைப் பற்றிய ஷரத்துக்கள். பிரஜைகளின் அடிப்படையான உரிமைகளைப்பற்றியும், ராஜ்யத்திற்கு அபாயம் என்ற அவசர நிலையில் உபயோகப்படுத்தக்கூடிய அதிகாரம் பற்றியும் பின்னால் கவனிப்போம்.

தற்போதைய மாகாணங்கள் இப்பொழுது மாகாணங்களாக உள்ள பிரதேசங்கள் யூனியனின் பகுதிகளாக(அரசுகளாக)ச்சேருகின்றன. அந்தப்பிரதேசங்களின் அரசியல் அமைப்புப் பற்றிய ஷரத்துக்களின் முக்கிய அம்சங்களையும் இங்கே குறிப்பிடுவோம்.

அந்த 'அரசு'களின் நிர்வாகத் தலைவர் கவர்னர். கவர்னரை நேரடியாக ஜனங்களே தேர்ந்தெடுப்பதா அல்லது, அந்தப் பிரதேசத்து சட்டசபை தேர்ந்தெடுக்கும்நாலுபேரில் ஒரு

வரை ஜனாதிபதி நியமனம் செய்வதா என்பதை நிபுணர்கள்கமிட்டியினர் விளப்பியிருக்கின்றனர். கவர்னரை ஜனங்களே நேரடியாகத் தேர்ந்தெடுத்து விட்டால், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைக்குப் பொறுப்பான மந்திரி சபைக்கும் கவர்னருக்கும் அபிப்பிராய பேத மேற்படும் சமயத்தில் யாருடைய அதிகாரம் மேலானது என்ற சர்ச்சை கிளம்பக்கூடும். ஆதலால் மேலே குறிப்பிட்டுள்ள வகைகளில் இரண்டாவது வகையில் கவர்னரை நியமனம் செய்வது நலம் என்று கருதுகின்றனர்.

யூனியன் மந்திரிசபையைப் போல இப் பிரதேசங்களிலும் மந்திரிசபை உண்டு. மந்திரிகளைப் பிரதமமந்திரி சிபார்சுப்படிதான் நியமனம் செய்ய வேண்டுமென்ற ஷரத்து கிடையாது; ஆனால் கவனர்களுக் கென்று அனுபந்தத்தில் வகுக்கப்பட்டுள்ள சிபார்சுகளில், சட்டசபையில்பெரும்பான்மையோருடைய ஆதரவைப் பெறக்கூடியவர் என்று கவர்னர் கருதும் நபரைக் கலந்து மந்திரிகளை நியமனம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மந்திரிகளை நியமிப்பதில், கூடுமானவரையில் முக்கியமான மைனரிட்டி வகுப்பினர்களையும் மந்திரி சபையில் சேர்க்க வேண்டும்என்பதைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றது.

இப் பிரதேசங்களில் கோர்ட்டுகளின் அமைப்பு, அதிகாரம் ஆகியவற்றைப் பற்றிய ஷரத்துக்களையும் பிரஸ்தாப திட்டம் வகுத்துள்ளது.

**இதர ஷரத்துக்கள் :**

ஒன்பதாவது பகுதியில் யூனியன் அரசாங்கத்துக்கும், மற்ற ராஜ்ஜியங்களின் அரசாங்கத்துக்கும் என்ன என்ன அதிகாரங்கள் உண்டு என்பதையும், அவசியமானால் யூனியன் அரசு சில அதிகாரங்களை எடுத்துக்கொள்ளுவதற்கு வேண்டிய ஷரத்துக்களையும் காணலாம். பிரஸ்தாப திட்டத்தில் குறிப்பிடப்படாத புது விஷயங்களைப்பற்றிச் சட்டமியற்றும் உரிமை யூனியனுடையது. யூனியன் அதிகாரத்தைப் பலப்படுத்திப் பாதுகாப்பதற்கு வேண்டிய ஷரத்துக்கள் இப் பகுதியில் அடங்கியுள்ளன.

மைனரிட்டி வகுப்பினர்களுக்குப் பத்து வருஷகாலத்துக்குச் சில பாதுகாப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

அரசியல் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்குச் சில நியதிகளை ஏற்படுத்துகிறது. பார்லிமெண்டு சபையில் மூன்றில் இரண்டுபங்கு ஓட்டுப் பெற்றால் தான் திருத்தம் அமுலுக்கு வரும்; யூனியனில் சேர்ந்துள்ள அரசுகளின் அதிகாரம் செலுத்தக்கூடிய ஜாபிதாவையோ, அவற்றிற்குப் பார்லிமெண்டு சபையிலுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கையையோ அல்லது 'சுப்ரீம் கோர்ட்'டின் அதிகாரத்தையோ பாதிக்கும் விஷயங்களைப்பற்றிய திருத்தங்கள், தற்போதைய மாகாணங்களாயுள்ள பிரதேசங்களில் பாதிக்கு மேற்பட்டவற்றின் சட்டசபைகளாலும், சமஸ்தான உறுப்புகளாகக் குறிப்பிடப்படும் பிரதேசங்களில் சட்டசபைகளில் மூன்றிலொரு பங்கு உறுப்பினர்களின் சட்டசபைகளாலும் ஆமோதிக்கப்பட வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள முக்கியமான அம்சங்களைத் தவிர இரண்டு முக்கியமான அம்சங்

களை நாம் கவனிக்க வேண்டும். பிரஜைகளின் உரிமை! பிரஜைகளின் அடிப்படையான உரிமைகளைப் பற்றியவை அவை. அரசியல் நிர்ணயசபை கூடிய காலத்தில் பிரஜா உரிமையைப்பற்றிய தீர்மானத்தின்மீது பல பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டன. எந்த அரசியல்சட்டமும் பிரஜைகளின் உரிமைகளைக் குறிப்பிட்டால் மட்டும் போதாது; அவற்றை எந்த நோக்கத்துடன் குறிப்பிடுகின்றது, அவற்றை அனுபவிப்பதற்கு எவ்வித உத்திரவாதத்தை ஏற்படுத்துகின்றது, அவை பறிபோகாம இருப்பதற்கு எத்தகைய பாதுகாப்பை ஏற்படுத்துகின்றது என்ற விஷயங்கள் முக்கியமானவை.

பிரஸ்தாப திட்டத்தின் மூன்றும் பாகம் "அடிப்படையான உரிமைகள்" பற்றியது. ஆனால் அந்தப் பாகத்திலடங்கிய ஷரத்துக்களைப் படித்தால் ஒவ்வொரு உரிமையையும் குறைக்கும் 'பொடி'யைக் காண்கிறோம். பேச்சுரிமையைக் குறைக்கும் சட்டதிட்டங்கள் பல தற்போதைய சட்டங்களில் காணலாம். தற்போது அமலிலுள்ள சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில்தான் பேச்சுரிமை உண்டு என்று பேச்சுரிமையைப் பற்றிய உப ஷரத்தின் 'வால்' கூறுகிறது. அது மட்டுமல்ல அரசாங்கம் தன்னுடைய அதிகார அந்தஸ்தையும், அஸ்திவாரத்தையும பாதுகாத்துக் கொள்வதற்கு எந்த விதமான சட்டத்தை இயற்றிக்கொள்வது இந்த சட்டசபை உரிமை ஷரத்தினால் பாதிக்கப்படாது! அடிப்படை உரிமையைப் பற்றிய சட்ட ஷரத்துக்கள் அனைத்தும் உரிமைகளைக் குறைக்கும நோக்கத்துடன் வகுக்கப்பட்டன என்றுதோன்றுகின்றன. உரிமைகளை அனுபவிப்பதற்கு, விரிவாக ஜனங்கள் அனுபவிக்க சுதந்திரம் நமக்கும் வரதுள்ளது, பழைய கால அடக்குமுறை அதிகாரம் ஒழிந்தது என்று உணருவதற்கு இடமிருப்பதாகத் தோன்றவில்லை.

இந்தப் பிரஸ்தாபமசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை வழங்க வேண்டுமென்று 'சுப்ரீம் கோர்ட்'டுக்கு மனுச் செய்வதற்கும், அதற்கான உத்திரவுகளைப் பிறப்பிக்க அதிகாரமளிப்பதற்கும ஷரத்துக்கள் காணப்படுகின்றன. ஆனால் அவசரச் சட்டம் பிறப்பிதது, அரசியல்சட்டத்தைத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கக் கவர்னருக்கு அதிகாரம் உண்டு. அந்த அவசர நிலைமையைப் பிரகடனம் செய்த பின்னர்ஜனாதிபதியும் ஒரு பிரகடனம் செய்து இந்த உரிமைகளை வழங்குவதற்காக ஏற்படுத்தியுள்ள ஷரத்தை ரத்து செய்யலாம்.

**ஜன நாயகம் ஏற்படுமா?**

இந்தவிசேஷ அதிகாரத்தைஎடுத்துக்கொள்வதற்குக் கவர்னருக்கு அதிகாரமளித்துள்ள ஷரத்து பிரிட்டிஷாருடைய 1935-ம் வருஷ அரசியல் சட்டத்தின் 93-வது செக்ஷனைப் போன்றது. இத்தகைய ஷரத்துக்களைப் பார்த்தால் நமக்கு ஏற்படவிருக்கும் அரசியல் அமைப்பு 'ஜனநாயக' அமைப்பாக இருக்குமா, அல்லது, அந்நிய ஆட்சியைப் போன்ற அதிகார வர்க்கத்தின் ஆட்சியாக இருக்குமா என்ற சந்தேகம் கிளம்புகிறது. சுதந்திரம் பெற்ற இந்தியாவில் இத்தகைய ஷரததுகள் இந்திய சமூகத்திலுள்ள ஒரு பகுதியினருக்குச் சாதகமான அரசியல்

# நீங்கள் படித்துவிட்டீர்களா?

| | | |
|---|---|---|
| **யுத்த கால பர்மா**<br>ஜப்பானிய யுத்தத்தின் முழு விபரமும், நேத்தாஜி சர்க்காரின் சுதந்திரப் போராட்ட சரித்திரமும் அடங்கிய நூல். | | ரூ. 4 0 |
| **ஆன்டன் செஹாவ்**<br>சிறு கதைச் சக்கரவர்த்தி செஹாவின் சரித்திரமும் அவருடைய சிறந்த கதைகளைப் பற்றிய விமர்சனமும். | புரசு. பாலகிருஷ்ணன் | 3 8 |
| **காதலா....?**<br>முழு நாவல் | "சு. ரா" | 2 8 |
| **இலக்கிய விமர்சனம்**<br>'துணிவான முயற்சி; சிறந்த பார்வை' என்று அறிஞர்களால் பாராட்டப் பெற்ற நூல். | சிதம்பர ரகுநாதன் | 2 0 |
| **பொது உடைமைதான் என்ன?** | கண. முத்தையா | 2 0 |
| **காந்தி பாமாலை** | ராய. சொ. | 3 0 |
| **தாலாட்டும் கும்மியும்** | ராய. சொ. | 0 6 |
| **வேலை நிறுத்தம் ஏன்?** | "விந்தன்" | 0 12 |
| **ஆண்மை** | "புதுமைப்பித்தன்" | 1 0 |
| **நமது இலக்கியம்** | "புதுமைப்பித்தன்" | 0 12 |
| **தமிழும் ஆங்கிலமும்** | புரசு பாலகிருஷ்ணன் | 1 0 |
| **வருகிறார் நேத்தாஜி** | S. D. சுந்தரம் | 0 12 |
| **புரட்சி** | நேத்தாஜி | 0 10 |
| **சிங்காரி** | சியாமளா பாலகிருஷ்ணன் | 1 0 |
| **கள் ஒழிக** | ராஜாஜி | 0 12 |
| **Prohibition** | Rajaji | 0 12 |

## தமிழ்ப் புத்தகாலயம்

1. லஸ் கார்னர்

மயிலாப்பூர் சென்னை 4.

## உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.



உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்,

**மைசூர் சில்க்**

மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு.

கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK-107M

## சூதகத்தை நிறுத்தியது



குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தி யளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3.

நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5.

மிக்க கடுமையான கோளாறுகளுக்கு விலை ரூ. 8.

கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets)

6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4.

(வி. பி-க்கு 12 அணு அதிகப்படி)

**Mrs. P. DEVEE, F. D. S. (M.S.)**

Tollygunge, :: CALCUTTA

ஸ்டாக்கிஸ்டுகள்: ஹாரி அண்ட் சன். 93, சைனு பஜார் ரோட், சென்னை

ராகவன் அண்ட் கம்பெனி

ஸ்ரீ நரசிம்மராஜா ரோட், பெங்களூர் சிடி

அமைப்பாகி விடக்கூடிய அபாயம் உண்டு. அரசாங்க அமைப்பிலும் அதிகாரத்திலும் தங்களுடைய கை வலுக்கவேண்டும் என்று சமூகத்தின் வெவ்வேறு பகுதிகள் இன்று முயன்று வருகின்றன. முதலாளித்வத்தின் "ஜன நாயகமாக" இந்தியா வளருமானல் சுதந்திர இந்தியாவில் ஏழையின் நிலைமை உயருவதற்கு உத்திரவாதம் உண்டு என்ற நம்பிக்கை அழிந்துவிடும்.

இந்த மசோதா தயாரித்த கமிட்டியின் அக்கிராசனரும், இந்திய சர்க்கார் மந்திரியுமான டாக்டர் அம்பேத்கார் எழுகுண்டு போட்டிருக்கிருர். ஆரம்பத்திலேயே இந்தியா "சுதந்திர ஜனநாயகக் குடியரசு" என்ற பிரகடனத்தை "சுதந்திர ஜனநாயக அரசு" என்று திருத்த வேண்டுமென்கிருர். அவருடைய நோக்கம் இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருக்க வேண்டுமென்பது. அப்படி சாம்ராஜ்யத்தி லிருப்பதாயிருந்தால் 'குடியரசு' என்று கூறுவது பொருந்தாது என்பது அவருடைய வாதம். பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபட்டாலும், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய உறவு வேண்டும் என்றுகூறி, பிரிட்டிஷ் ஆதிக்கத்துக் குட்பட்டதாக இந்த நாட்டை வைப்பதற்கான முயற்சி இது.

அரசியல் நிர்ணய சபையின் அங்கத்தினர்கள் ஜனங்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களல்ல; அவர்களைத் தேர்ந்தெடுத்த சட்டசபையோ நாட்டிலுள்ள வயது வந்தவர்களனைவரும் ஓட்டுரிமை பெற்று தேர்ந்தெடுத்த சட்டசபை அல்ல. பிரஸ்தாப மசோதாவோ ஜனங்களைக் கலந்து அவர்கள் அபிப்பிராயத்தை அறிந்து அவர்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட வில்லை. சட்ட நிபுணர்களும், நிர்வாகத்திறமை உடையவர்களும் (பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தக் கீர்த்தியை அடைந்தவர்கள் அவர்கள்) இந்த ஷரத்துக்களை எழுதி இருக்கின்றனர். நாட்டு மக்களின் லட்சியங்களைக் குறிப்பிடும் நோக்கத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வெறும் வார்த்தைகளாகி விட்டன. இந்த அரசியல் அமைப்பு சட்டத்தினல் தன்னுடைய நிலை எந்த வகையிலும் மாறப் போவதில்லை என்பதனல் பொதுஜனம் இந்தப் பிரஸ்தாப மசோதாவைக் கண்டு உற்சாகப்படவில்லை; அதை மாற்ற வேண்டுமென்ற அக்கறையோ கவலையோ காண்பிக்க வில்லை. எவ்வித உற்சாகமோ, பரபரப்போ இன்றி சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்பு "இதுவும் ஒரு சம்பவம்" என்று விதியின் வினையாக இவ் வருஷ முடிவிற்குள் நிறைவேறிவிடும். ஆனல் சாதாரண ஜனங்கள் மட்டும், 'புதிய அரசியல் சட்டத்தினல் நமக்கு என்ன நலன் வந்தது?' என்று கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

*

### பயங்கரச் செயல்கள்

சர்க்காரோ பொதுமக்களோ பயங்கரச் செயல்கள் புரிந்து கொண்டிருந்தால், அங்கே ஜனநாயக உணர்ச்சியை ஸ்தாபிக்கமுடியாது.

—மகாத்மா காந்தி

# ஆந்திரர் படையெடுப்பு

தி. நா. சுப்பிரமணியன்

நல்லதோ கெட்டதோ ஒன்றைச் சதா ஒருவர் திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கூறி வந்தால், அது கேட்போர் உள்ளத்திலே—உடனே இல்லாவிட்டாலும் கொஞ்சம் பொறுத்தாவது, நிச்சயமாக, ஸ்திரமாகப் பதிந்துவிடும். இது மனத் தத்துவ உண்மைகளில் ஒன்று. இந்த உண்மையை விளம்பரக்காரர்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரசார தந்திரம் அவர்கள் எதிர்பார்த்த பலனையும் கொடுத்திருக்கிறது. எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும், அதைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல், தன் கட்சியை ஒருவன் ஓயாமல் சொல்லிக் கொண்டே வந்தால், அவன் கூறுவதிலும் கொஞ்சம் நியாயம் இருக்கத்தான் வேண்டும் என்று கேட்பவர்களுக்குத் தோன்றுவது இயல்பு.

இந்த வழியைப் பின்பற்றியே ஹிட்லர் ஐரோப்பாவில் தன் ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொண்டான். இந்தத் தந்திரத்தாலேயே ஜின்னா பாகிஸ்தானைப் பெற்றார். இப்போது ஆந்திரர்களும் இதே முறையைப் பின்பற்றி, சென்னை நகரம் தங்களுக்கே சொந்தமானது என்று ஓயாமல் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இத்தகைய பிரசாரம் என்றென்றைக்குமே நிரந்தரமான பலனை அளித்துவிடாது. ஹிட்லர் மகோந்நத ஸ்திதியில் இருந்த காலத்தில், அவன் செய்து வந்த பிரசாரத்தில் ஏதாவது உண்மை இருக்கலாமோவென்று கொஞ்சம் மயக்கம் அடைந்தவர்களுக்கும் இப்போது தெளிவு ஏற்பட்டுவிட்டது. அதே போல, ஜின்னாவின் பாகிஸ்தான் பிரசாரத்தைக் கேட்டு, அது தெய்வ லோகமாகத் திகழப் போகிறது என்று மயங்கியவர்களும் தாங்கள் அவ்விதம் ஒரு சமயம் எண்ணியது முற்றிலும் தவறு என்பதை இப்போது உணர்ந்து விட்டார்கள். அம்மாதிரியே ஆந்திரர்களின் பொய்ப் பிரசாரத்துக்கு ஆதாரம் ஒன்றுமே கிடையாது என்பது மக்களுக்கு விளங்காமல் போகாது.

எனினும் அத்தகைய மயக்கத் தெளிவு ஏற்படும்போது காலப் பிற்பாடு ஆகிவிடாமல் இருக்க வேண்டும். ஹிட்லர் விஷயத்திலும், பாகிஸ்தான் விஷயத்திலும் தாங்கள் எண்ணியது தவறு என்று பிறகு ஏற்பட்ட தெளிவு அவர்களுக்கு முன்னதாகவே ஏற்பட்டிருந்தால், மக்கள் அனுபவிக்க நேர்ந்த எத்தனையோ கஷ்ட நஷ்டங்களைத் தவிர்த்திருக்கலாம். ஆகவே ஆந்திரர்கள் செய்து வரும் போலிப் பிரசாரத்தின் உண்மையை முன்னதாகவே நாம் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியம்.

சென்னை நகரம் தங்களுக்கே சொந்தமெனக் கூறி வந்த ஆந்திரர்கள் இப்போது வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் முதலிய ஜில்லாக்களும் ஆந்திரர்களைச்

ஆந்திர நாட்டில் இப்போது சில நாஜிகள் தலையெடுத்திருக்கிறார்கள்; ஊர்களையும் தேசத்தையும் கபளீகரம் செய்ய அவர்கள் பெரும் பாடு படுகிறார்கள்; சென்னையும் தங்களுக்கு வேண்டும் என்று கூக்குரலிடுகிறார்கள். அவர்களுடைய நாஜி சொரூபத்தை எடுத்துக் காட்டுகிறது கட்டுரை.

சேர்ந்தவை யென்றும் அவற்றை யும் ஆந்திர மாகாணத்துடன் சேர்த்துவிட வேண்டுமென்றும் கேட்கிறார்கள். சமீபத்திலே ஆந் திர மாகாணப் பிரிவினைக்காக அரசியல் நிர்ணய சபை ஏற்படுத் திய கமிஷன் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் காரணத்தைக் கொண்டு ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டி இத்தகைய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி யிருக்கிறது.

ஆந்திரர்களைப் போலவே கர் நாடகர்களும் தங்களுக்குத் தனி மாகாணம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வருகிறார் கள். சேலம், கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களின் பகுதி களையும் நீலகிரி ஜில்லாவையும் கர்நாடக மாகாணத்தில் சேர்த்து இணைத்துவிட வேண்டுமென்று கர்நாடக மாகாணக் காங்கிரஸ் கமிட்டி சென்ற வாரத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருக் கிறது. இவ்விதம் ஆந்திரர், கர் நாடகர், மலையாளிகள் ஒவ் வொருவரும் கொஞ்சம் கொஞ் சம் பங்கு போட்டுக் கொண்ட பிறகு தமிழருக்குப் பாக்கி யிருக் கும் பிரதேசம் மிகவும் சிறிய தாக இருக்கும்.

நிற்க, ஆந்திர கர்நாடகர்கள் தங்களுக்குக் கொஞ்சமும் உரிமை யில்லாத பிரதேசங்களைத் தாங்கள் அடைந்துவிட வேண்டு மென்று உரிமை கொண்டாடித் தீர்மானங்கள் நிறைவேற்றுவது டன் பிரசாரமும் செய்து வருவ தன் நோக்கம்தான் என்ன?

'கோடாலிக் காம்புக்கு அடிப் போட்டால் கத்திப் பிடியாவது தேறாதா?' என்ற பழமொழி ஒன்று உண்டு. அதே போல வாய் கொண்ட வரையில் கேட் டால், முழுவதும் கிடைக்காவிட் டாலும், கேட்டதில் கொஞ்சமா வது கிடைக்காமல் போகுமா வென்ற ஆசைதான் இதற்குக் காரணம்.

அன்றி, ஆந்திரர்கள் இத்த கைய குணத்தையே உடையவர் கள். தெலுங்கு நாட்டிலே கர்ண பரம்பரையாக ஒரு பாட்டு உண்டு. அது பின்வருமாறு:

> கொண்ட விடு மனதேரா
> கொண்டபள்ளி மனதேரா
> காதனி எவ்வரு வாதுக்கு வச்சிநு
> கடகமு தாகா மனதேரா.

இதன் பொருள்: கொண்ட வீடு என்னதடா; கொண்டபள்ளி என்னதடா. இல்லை யென்று எவராவது வாதுக்கு வந்தால், கடகம் வரையில் என்னதடா.

எப்படி இருக்கிறது வழக்கு? இவ்விடம் சொல்லப்படும் கடகம் என்பது இப்போது ஒரிஸா மாகாணத்தின் தலைநகராக உள்ள கட்டாக் என்னுமிட மாகும். 'இந்த ஊரும் என் னுடையது. பக்கத்தூரும் என் னுடையது. இல்லை யென்று யாராவது சொன்னால் தேசமே என்னுடையது என்பேன்' என்று ஒருவன் சொல்வானாகில், அவனை என்னவென்று கூறுவது!

இந்தப் பாட்டை ஆதாரமாகக் காண்பித்து ஆந்திரர்கள் கட் டாக்கைத் தங்கள் மாகாணத் துடன் சேர்த்துவிடவேண்டும் என்று கேட்பார்களா? என் னவோ, ஒருகால் கேட்டாலும் கேட்பார்கள். ஏன், இப்போது ஒரிஸா மகாணத்தில் சேர்ந்திருக் கும் கஞ்சம் ஜில்லா, விசாகப் பட்டணம் ஜில்லாவின் ஒரு பகுதி ஆகியவற்றை அவர்கள் திரும்பவும் ஆந்திர மாகாணத்தில் சேர்த்துவிட வேண்டும் என்று கிளர்ச்சி செய்கிறார்கள். அதை ஒரியர்கள் மறுத்தால் கட்

டாக்கே தங்களுக்கு வேண்டு மென்று கேட்கவும் கூடும்!

இந்த முறையில்தான் அவர்கள் சேலம் வரையில் உள்ள தமிழ் நாட்டுப் பகுதியையும் தங்கள் நாட்டுடன் இணைக்க வேண்டும் என்கிறார்கள். ஏனென்றால் 'சேலம் வரையில் கேட்டால் சென்னையாவது கிட்டாதா?' என்ற ஆசைதான் காரணம்.

திருப்பதி எனப்படும் வேங்கடமே தமிழ்நாட்டின் வடஎல்லையென்று நீண்ட காலமாகத் தமிழ் இலக்கியம் கூறிவருகிறது. ஒரு காலத்தில் அதற்கும் வடக்கில் பரவி யிருந்திருக்கிறது. இன்றைக்கும் திருப்பதிப் பிரதேசத்தில் தெலுங்கே யன்றித் தமிழும் பெருவாரியாகப் பேசப்பட்டு வருகிறது. சமீப காலம் வரையில் திருப்பதி தமிழ்நாட்டுப் பகுதியுடனேதான் சேர்ந்திருந்தது.

இப்போது திருப்பதி சித்தூர் ஜில்லாவைச் சேர்ந்தது. இந்த ஜில்லாவே 1911-ஆம் வருஷத்தில் தான் புதிதாக, பக்கத்திலே பெரிய ஜில்லாக்களாக இருந்த இரண்டு மூன்றிலிருந்து சிறு பாகங்களைப் பிரித்து ஒன்றாக்கி ஏற்படுத்தப்பட்டது. அதற்குமுன் திருப்பதி வட ஆற்காடு ஜில்லாவில் இருந்தது. அந்தக் காலத்திலே அவ்விடத்தின் பிரதேச பாஷை தமிழ் தான். அதற்குப் பிறகு அது தெலுங்குப் பகுதியுடன் இணைக்கப் பட்டபோது, அந்தப் பிரதேசத்தில் தெலுங்குப் பயிற்சி அதிகமாயிற்று. ஆயினும் இன்றைக்கும் தெலுங்கினால் அந்நாட்டை ஸ்வீகரித்துக்கொள்ள முடியவில்லை. தமிழ் மொழி வழக்குப் போய்விடவில்லை. இன்றைக்கும் தெலுங்கே தெரியாத ஒருவர் திருப்பதி, காளஹஸ்தி முதலிய இடங்களுக்கு எந்த விதமான சிரமமும் இல்லாமல் போய்வந்து விடலாம்.

சித்தூர் ஜில்லா ஏற்பட்ட சமயத்தில் அரசாங்கத்தார் திருப்பதியை அதனுடன் சேர்த்தது நிர்வாக சௌகரியத்தை உத்தேசித்தே யல்லாமல், அவ்விடத்தில் வழங்கி வந்த மொழியைக் கொண்டு அல்ல வென்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இவ்விதம் தெலுங்குப் பகுதியுடன் திருப்பதியை இணைத்ததாலேதான் அங்கே இப்போது தெலுங்குப் பழக்கம் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. அப்படி யில்லாமல் பழையபடியே இருந்திருந்தால், அது முற்றிலும் தமிழ்ப் பகுதியாகவே இருந்திருக்கும். இன்றைக்கும் அந்தப் பிரதேசத்தில் உள்ளவர்கள் தமிழர்களே. அவர்களுக்குத் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டும் தெரியும். இவ்விரண்டு மொழிகளுள் எதைப் பிரதேச பாஷை யென்று சர்க்கார் சொல்லுகிறார்களோ அதை அதிகமாகப் பயிலுவார்கள்.

சென்ற தலைமுறை வரையில் தமிழ் நாட்டைச் சேர்ந்திருந்ததும் இன்றைக்கும் தமிழ்ப் பழக்கமே அதிகமாக உடையதுமான அந்தப் பிரதேசத்தை ஆந்திரர்கள் தங்கள் நாட்டுடன் சேர்த்துக் கொள்ள விரும்புகிறார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள், இன்றைக்கு அங்கே தெலுங்கே அதிகம் பயிலப்படுகிறதென்பதும், அது தெலுங்கு நாட்டை ஒட்டி இருக்கிறதென்பதும் ஆகும்.

ஆனால் சென்னையைப் பொறுத்த வரையில் ஆந்திரர்கள் இந்தக் கொள்கைகளைக் காற்றில்

விட்டுவிடுகிருர்கள். 1931-ஆம் வருஷ ஜன கணிதப்படி சென்னே யில் 6,47,210 பேர் இருந்தார் கள். அவர்களிலே 4,11,823 பேர் தமிழர்; 1,34,629 பேர் தெலுங்கு பேசுபவர். மொத்தஜனத்தொகை யில் ஐந்தில் ஒரு பங்கும், தமிழர் களிலே மூன்றுல் ஒரு பங்குக்குக் குறைவாகவும் உள்ள ஆந்திரர் கள் சென்னையைத் தங்கள் நாட் டுடன் சேர்க்க வேண்டுமென்று விரும்புவது விந்தையினும் விந்தை. இதுமட்டுமா? சென்னே ஆந்திர ஜில்லாக்களுடன் ஒட்டிய படியாகவாவது இருக்கிறதா? அதுவும் இல்லே.

நாம் ஒப்புக்கொள்ளாவிட்டா லும், விவாதத்துக்காவது நெல் லூர் ஜில்லாவை ஆந்திர மாகா ணத்தின் தெற்கு எல்லேயாக வைத்துக்கொண்டாலும், அதற் கும் சென்னேக்கும் இடையில் சுமார் நாற்பது மைல் தூரம் இருக்கிறது. இந்தப் பகுதியில் வசிப்பவர்களில் தமிழர்களே அதி கம். தெலுங்கர்களும் இருக்கிருர் கள். இருந்தாலும் பிரதான மொழி தமிழ்தான். இவ்விதம் இருக்க அவர்கள் சென்னேயைத் தங்களுக்கே வேண்டு மென்று கேட்கிருர்கள். இது எதனுல்?

ஆந்திரர்கள் தங்களுக்குத் தனி மாகாணம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. ஆயினும் அவர் கள் சென்னே நகரம் தங்களுக்கே உரியதென்று பத்து வருஷகால மாகத்தான் சொல்லி வருகிருர் கள். 1938-ஆம் வருஷம் அக்டோ பர் மாதம் சென்னேயில் நடந்த ஆந்திர மகாசபையின் இருப தாவது மகா நாட்டிலேதான் சென்னே ஆந்திர மாகாணத்துக் குத் தலேநகரமாக இருக்க வேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள்.

அந்தக் காலத்திலே ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டி யின் தலேமை ஸ்தானம் விஜய வாடாவில்தான் இருந்தது. ஆந்திரர்களும் தங்கள் மாகாணத் தின் தலே நகர் விஜயவாடா என்றே நினேத்து வந்தார்கள். ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டியே அங்கீகரித்த 'ஸ்ரீபாக் ஒப்பந்தம்' ஏற்பட்ட காலத்தி லும் சென்னேயைப் பற்றிய பிரஸ் தாபமே இல்லே. ஏனெனில் அதிலே ஒரு ஷரத்தில், "சர்வகலா சாலே இப்போது இருக்கும் இடத்திலேயே இருக்கலாம். உயர்தர நீதிமன்றமும் தலே நகர மும் சர்க்கார் பிரதேசத்திலும் ராயலசீமையிலும் நிறுவப்பட வேண்டும். ஆயினும் ராயல சீமைக்குச் சலுகை காட்ட வேண்டும்'' என்று கூறப்பட் டுள்ளது. அதற்குப் பிறகு ஆந்திரர்கள் சென்னே நகரத்தைக் கோரும்படியாக என்ன நடந்து விட்டது?

சர்க்கார் பிரதேசத்தில் இருப்ப வர்களுக்கும் ராயலசீமைக்காரர் களுக்கும் என்றைக்குமே நெருங்கிய தொடர்பு இருந்த தில்லே. ஒருவரை யொருவர் நம்புவதில்லே. ராயலசீமையை அபிவிருத்தி செய்யவிடாமல் வட சர்க்கார் பிரதேசத்தவர் பலவித மான தொந்தரவுகளே விளேவித்து இன்னல் படுத்துவர் என்று ராயலசீமைக்காரர்கள் பயப்படு கிருர்கள். அன்றி அவர்கள் சென்னேயுடன் தங்களுக்குள்ள கலாசாரத் தொடர்பைத் துறக் கச் சம்மதிக்கவும் இல்லே. இதனுல் ராயலசீமைக்காரர்களேத் திருப்தி

செய்து தங்களுடன் சேர்த்துக் கொள்வதற்காகவே சர்க்கார்க் காரர்கள் சென்னையை ஆந்திர மாகாணத்தின் தலை நகரமாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அதனால் சென்னையைத் தாங்கள் கைப் பற்றுவதற்கு அவர்கள் எல்லா விதமான முறைகளையும் கை யாண்டு வருகிறார்கள். ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டியை யும் சென்னைக்கே மாற்றிக் கொண்டு பலத்த பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இந்தப் பிரசாரம் ஆந்திரர்க ளிடையே எவ்வளவு தூரம் நடந் திருக்கிறது என்பதற்குப் பின் வரும் சம்பவத்தை ஓர் உதாரண மாகக் கூறலாம்.

சமீபத்திலே ஒருநாள் நான் பஸ்ஸில் பிரயாணம் செய்துவந்த போது நாட்டுப்புறத்திலிருந்து சென்னை பார்க்க வந்திருந்த ஆந்திரர், என்னைத் தெலுங்கில் என்னவோ கேட்டார். அவர் கேட்டது எனக்கு விளங்கவில்லை. இதை நான் சைகைகளால் காட்டியவுடன் அவர் அடைந்த ஆச்சரியத்தை அளவிட முடி யாது. "தெலுங்கு தெரியாமல் ஆந்திர பட்டணமான சென்னை யிலே நீங்கள் எப்படிக் காலந் தள்ளுகிறீர்கள்?" என்றே அவர் கேட்டார். எவ்வளவு தூரம் சென்னை ஆந்திரப் பட்டணமே என்று பிரசாரம் நடந்திருப்ப தென்பது விளங்கும்.

ஆந்திர மாகாணப் பிரிவினைக்கு இப்போது ஒரு கமிஷன் நியமிக் கப்பட் டிருக்கிறது. அவர்கள் சென்னை நகரத்தில் ஆந்திரர்கள் அதிகமா, தமிழர்கள் அதிகமா, என்று ஒருகால் கணக்கிட்டு விடுவார்களோவென்று நினைத்து ஆந்திரர்கள் அதற்கும் தயார் செய்து வருகிறார்கள். நாட்டுப் புறங்களிலிருந்து ஏராளமான தெலுங்கர்களை அவர்கள் சென்னையில் குடியேற்றி வரு கிறார்கள். எப்பாடுபட்டாவது சென்னையைத் தாங்கள் கைப் பற்றிவிட வேண்டுமென்று ஆந்திரர்கள் படையெடுத்து வரும்போது தமிழர்கள் என்ன செய்கிறார்கள்? 'சென்னை எப்படியும் தங்களுக்கே சொந் தம், ஆந்திரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. ஆதலால் அவர் கள் அதைக் கைக்கொண்டு விட முடியாது' என்று எண்ணிக் கை கட்டிச் சும்மா இருக்கிறார்கள்.

'மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையால், பொய்போலுமே, பொய்போ லுமே' என்று சொல்லுவார் கள். அதனால் தமிழர்கள் விழித் தெழுந்து தங்கள் உரிமையை நிலைநாட்ட வேண்டும். சென்னை தங்களுக்கே சொந்தம் என்பதை ஒவ்வொரு தமிழனும்—அவன் நகரவாசியாயினும் சரி, நாட்டுப் புறத்தில் வாழ்பவனாயினும் சரி— உணர்ந்து கொள்ளும்படி செய்து அதை இழக்காமல் பேரிடச் செய்ய வேண்டியது அவசியம்.

❀

**அது கல்யாணம் அல்ல**

சரீரப்பசியைத் தீர்ப்பதற்கு என்று உள்ள கல்யாணம் கல்யாணமே அல்ல.

—மகாத்மா காந்தி

கட்டுரையாளர் ஓர் ஆங்கிலத் தத்துவப் பேராசிரியர். 56 வயது நிரம்பிய இவர் ஏராளமான நூல்கள் எழுதி யிருக்கிறார். அமெரிக்கப் பழக்க வழக்கங்களின் படையெடுப்பால் ஆங்கிலப் பண்பாடு குட்டிச் சுவராகிறது என்று இக் கட்டுரையில் குறிப்பிடுகிறார். சுதந்திர நாட்டில் வாழ்ந்தும்கூட பிற கலாசாரத்தைக் கண்டு தாழ்வு மனப்பான்மையுடன் மோகிக்கும் நம்மவர்களுக்கு இக் கட்டுரை ஒரு எச்சரிக்கை யாகும்.

# பண்பாட்டுக்கு சில ஆபத்துக்கள்

சி. இ. எம். ஜோட்

ஆங்கில நாட்டின் வாழ்க்கை முறைக்குப் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அநேகமாக, ஆங்கில மக்களின் பழக்க வழக்கங்களிலும், கருத்தோட்டங்களிலும் அமெரிக்கா நுழைந்து கொண்டதுதான், அதற்குக் காரணம். "அமெரிக்கப் பழக்க வழக்கங்களின்படி ஒழுகுவதே அமெரிக்கர்களுக்கு நல்லது. ஆனால், ஆங்கிலேயர்கள் அரைவாசி அமெரிக்கர்களாக நடந்து கொள்ளுவது நல்லதல்ல" என்று ஜே. பி. பிரீஸ்ட்லீ* சொல்லுகிறார். அவர் கூறுவதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.



இரண்டு மகா யுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் இங்கிலாந்து அமெரிக்காவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது; அதாவது அமெரிக்க நாட்டு ஒழுக்க முறைகள், நடை உடை பாவனைகள் முதலியவற்றினாலும் அமெரிக்கத் தாய்மார்களாலும் இங்கிலாந்து ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. (அமெரிக்கத் தாய்மார்கள் தங்கள் நாட்டுப் பெண், பிரபு வீட்டுப் பெண்ணாகவும் பிரபு வீட்டு வாலிபர்கள் தங்கள் குமாரிகளுக்கு மாப்பிள்ளைகளாகவும் வரவேண்டுமென்று விரும்புகிறார்கள்) மேற்படி ஆக்கிரமிப்பினால் இங்கிலாந்து சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களுக்கும் மிகவும் ஆபத்து ஏற்பட்டுவிட்டது. உதாரணமாக ஆங்கிலப் பெண்ணின், என் வாலிபப் பிராயத்தின் போது நல்ல முறையில் வளர்க்கப்பட்ட ஆங்கில யுவதிகளின் லட்சியம் இப்போது மாறி ஹாலிவுட் சினிமா நடிகையின் லட்சியத்தை அவர்கள் கைக்கொள்ளும்படியாக ஆகிவிட்டது.

* ஜே. பி. பிரீஸ்ட்லீ, இன்றைய பிரசித்திபெற்ற ஆங்கில நாடக ஆசிரியர்

அமெரிக்கப் பெண், ஆங்கிலப் பெண் இந்த இருவரிலும் யாரைத் தேர்ந்தெடுப்பது என்றால்நான் ஆங்கிலப் பெண்ணையே தேர்ந்தெடுத்துக்கொள்ளுவேன். ஏனென்றால், சரீரத்தில் பூசிக் கொள்ளும் வாசனைத் திரவியங்கள், மதுபான வகைகள் முதலிய காரியங்களில் நான் அதிகம் செலவிட நேராது.

அமெரிக்க நாட்டு விளம்பரக்காரர்கள், வியாபாரிகள் முதலியவர்கள் கையாளும் முறைகள் ஆங்கிலப் பத்திரிகைகளை ஆக்கிரமித்துவிட்டன. பத்திரிகையில் பெரும்பகுதி, மக்கள் விரும்பாத சரக்குகளை விரும்பும்படியாகத் தூண்டுவதற்கே பயன்படுத்தப் படுகிறது. இதனால் விளம்பரக்காரர்களை நியமனம் செய்துள்ள கம்பெனிகள் மேற்கண்ட சரக்குகளை விற்று லாபம் சம்பாதிக்க முடிகிறது.

நூற்றாண்டுக் கணக்கில் நம் மூதாதைகள் 'ஷெர்ரி' என்ற பானத்தை அருந்தி வந்தனர். இப்போது நம் புத்திரிகளெல்லாம் 'காக்டெய்ல்' பானத்தை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டார்கள். நம்முடைய அருமையான இசை நாட்டியமாகிய 'வால்ட்ஸ்' என்பது குறைந்து நீக்ரோ சங்கீதத்துக்கு இசைய ஆடும் அமெரிக்க நாட்டியம் வந்து புகுந்துவிட்டது.

நம் பாஷையில் அமெரிக்கக் கொச்சை மொழிகள் கலந்து விட்டன. இதனால் அநேகமாக என் தலை முறையைச் சேர்ந்த எல்லோருக்கும் சினிமாப் படங்கள் பெரும்பாலும் புரிவதே இல்லை. எல்லாவற்றையும் விடப் படுமோசம் என்னவென்றால், பாடகர்களும் சபையோரும் சேர்ந்துபங்கெடுத்துக் கொண்ட, நம் பண்பாடெல்லாம் பிரதிபலிக்கும் சங்கீத மேடைகள் போய் சினிமா வந்து புகுந்துவிட்டது. இந்த அமெரிக்க படையெடுப்பால், நம் நாட்டில் முன் இருந்தது போன்ற, சபையோருடன் நேரடி சம்பந்தம் கொண்டிருந்த, சிறந்த இசை வாணர்கள் இப்போது இல்லாமல் போய்விட்டார்கள்.

இந்த மாறுதல்களெல்லாம் மிக மிக அபாயகரமானவையாக எனக்குத் தோன்றுகின்றன. அமெரிக்க முறைகள் அமெரிக்கருக்கு மிக மிக நல்லவையாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நாம் தெய்வத்துக்குப் பொதுவாக, நம் நாடக மேடையும் நம் பத்திரிகைகளும் நம் சங்கீத மண்டபங்களும் நம் புதல்விகளும் நமக்குச் சொந்தம் என்று கருதத் தொடங்குவோமாக!

✻

### ருஷ்யர்வைப்பார்

மேல்நாடுகளில் இருந்து வரும் கோட்பாடுகளின்படி ருஷ்யா ஒரு ஜனநாயக தேசமல்ல என்று கூறப்படுகிறது. ஆனால், ஜனநாயகத்துக்கு அடிப்படையாகவுள்ள அம்சங்கள் மற்ற எந்த தேசத்திலும் இருப்பதைவிட மிகமிக அதிகமாகவே, ருஷ்ய பாமர மக்களிடையே இருந்து வருவதைக் காண்கிறோம். ருஷ்யாவிலுள்ள 6 லட்சம் கிராமங்களிலும் நகரங்களிலும் விரிவான ஜனநாயகம் வேரூன்றி நிற்கிறது.

—பண்டித நேரு



படம் : கே. எஸ். நாகராஜன், சென்னை

பூபாரம் தாங்கும் பண்டித நேரு




படம் ; சாமி ஆர்ட் ஸ்டுடியோ, திருச்சி

காரைக்குடியில் பிரதமர் நேரு மின்சார ரசாயன ஆராய்ச்சி ஸ்தாபன அஸ்திவாரக் கல் நாட்டுகிருர். (25-7-48)



படம் : கே. என். நாகராஜன், சென்னை

சென்னையில் நேருஜி



இந்தியப் பிரதமர் நேருவும் சென்னை மேயர் கிருஷ்ணராவும்
(வரவேற்பு உபசாரத்தின்போது)



படம்: கே. எஸ். நாகராஜன், சென்னை

சென்னை பிரதமரும் இந்திரா காந்தியும்



படம்: வி. கணபதி, சென்னை

சென்னை விமான நிலையத்தில் பிரிவு உபசாரம்



படம்: வி. கணபதி, சென்னை

சென்னை பொதுக்கூட்டத்தில் நேருஜி



*பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் நடைபெற்ற சமயத்தில் நம் தலைவர்கள் எதிர்கால இந்தியாவின் அரசியல் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியும் மக்களுக்கு அவ்வப்போது சொல்லி வந்திருக்கிறார்கள். இக்கட்டுரையும், சிறையிலே சகோதரக் கைதிகளுக்குச் செய்த பிரசங்கப் பகுதிகளாகும். இங்கே பொது உடைமை முறை சுருக்கமாக விளக்கப்பட்டு வற்புறுத்தப்படுகிறது. சக்தி வெளியீடான* **அபேதவாதம்** *என்னும் நூலிலிருந்து.*

# பொது உடைமை சாத்தியமே

**சி. ராஜகோபாலாச்சாரியார்**

இப்பொழுது பதவியும் அதிகாரமும் வகிப்பவர்களைக் கீழே இழுத்துத் தள்ளிவிட்டு, அவற்றை நீங்கள் கைப்பற்றி விடுவதாக வைத்துக் கொள்ளுவோம். அதனால் உங்களுக்குச் சந்தோஷம் ஏற்படக்கூடும்; ஆனால், அது பொது உடைமை ஆகிவிடாது. வேலையை யாவரும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொண்டு உழைப்பதுதான் பொது உடைமையின் முக்கிய தத்துவம். வேலை செய்யாவிட்டால், வாழ்க்கை நடத்த முடியாது. வேலை இப்பொழுது ஏற்றத் தாழ்வுடன் பங்கிட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதை யாவரும் சமத்துவமாகப் பங்கிட்டுக் கொள்ளச் செய்ய வேண்டுமென்பதே பொது உடைமையின் உண்மையான நோக்கம்.

தொழிலையும் செல்வத்தையும் சமத்துவமாகப் பங்கிட, சில பரீட்சை செய்து பார்த்தார்கள். எதிர்பார்த்த அளவு அவற்றில் வெற்றி ஏற்படவில்லை. பொது உடைமையின் நோக்கம், உலக முழுவதிலும் தொழிலை மனிதர்கள் சமத்துவமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்பதாகும். உலக முழுவதும் பொது உடைமை ஏற்பட்டால்தான், பூரண நன்மையையும் காண முடியும்.

ஆனால், இப்போது உலகம் பற்பல சுதந்திர தேசங்களாகப் பிரிந்து கிடக்கிறது. ஆகையால், உண்மையில் சமத்துவமான தொழில் பிரிவினையை உலக முழுவதிலும் ஏககாலத்தில் ஏற்படுத்திவிட முடியாது. ஒரு நாட்டில் பொது உடைமை ஸ்தாபிக்கப்படுவதாக வைத்துக் கொள்ளலாம். என்றாலும், பக்கத்து நாட்டில் இன்னும் முதலாளி ஆதிக்கமே இருந்துவருமானால், பொது உடைமை ஸ்தாபிதமான நாட்டில்கூட அதன் பூரண பலனையும் அடைந்துவிட முடியாது. இதைக் கொண்டு பொது உடைமையே பயனில்லை யென்று நீங்கள் அபிப்பிராயப் பட்டுவிடக் கூடாது.

எதிர்ப் பக்கத்தில்:
**சென்னைப் பிரதமரும், இந்திரா காந்தியும்**
படம்: வி. கணபதி, சென்னை

பொது உடைமை என்பது சமத்துவத் தொழில் பிரிவினை என்று சொல்லிவிட்டேன். ஆகவே, பொது உடைமையில் தனி மனிதர்களுக்குச் சொத்துரிமை கிடையாது. நல்ல பொருள்கள் யாவும் எல்லா மனிதர்களுக்கும் சொந்தமா யிருக்கும். உலகத்தில் நடைபெற வேண்டிய சகல உழைப்பையும், உலக மனிதர்கள் யாவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுவார்கள். எல்லா மனிதரும் தன் தன் தேவைக்கு வேண்டிய பொருள்களை எடுத்துக் கொண்டு, தன் தன் சக்திக்கியன்ற வேலைகளைச் செய்வார்கள். பொது உடைமை ராஜ்யத்தில் "இது என் வீடு; இது என் பணம்; இது என் மகன் அல்லது மகளுக்கு அல்லது பேரனுக்குப் போய்ச் சேரும்" என்றெல்லாம் நீங்கள் சொல்லக் கூடிய சாமான்கள் இருக்க மாட்டா. "இது என்னுடையது" அல்லது "இது உன்னுடையது" என்ற பேச்சே, பொது உடைமை ஆட்சியில் கிடையாது. இப்படிப்பட்ட நிலைமை எப்படி யிருக்க முடியும் என்றுதான் இப்பொழுது தோன்றும். ஏனென்றால், சொத்துரிமை எண்ணத்திலேயே நாம் வளர்ந்து ஊறிக் கிடக்கிறோம். ஆகையால், தனி மனிதனுக்குச் சொத்தே இல்லாத உலகத்தை நாம் உருவகம் செய்து பார்க்க இயலாமற்போகிறது. ஆனால், சில உதாரணங்களின் உதவியைக் கொண்டு அதை நாம் படிப்படியாக விளங்கிக் கொள்ளலாம்.

நதியும் ஏரியும் யாவருக்கும் உபயோகமாகின்றன; யாவருக்கும் பொதுவாக நிர்வகிக்கப்படுகின்றன. இதே கொள்கையை இதர சொத்துக்கள் மீதும் பிரயோகித்துப் பார்த்தோமானால், பொது உடைமைத் தத்துவத்தைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளலாம். "மனிதனுடைய உழைப்பால் விளையும் தானியங்களும் உணவுப் பொருள்களும் இருக்கின்றனவே; இவற்றின் தன்மை வேறுவிதமானது. இவை போன்றவற்றில் தனி மனிதனுக்குச் சொத்துரிமை அவசியமாக இருக்கிறது" என்று நீங்கள் நினைக்கக் கூடும். ஆனால், உண்மையில் அப்படி யொன்றும் வித்தியாசம் கிடையாது. தபால் போக்குவரத்து ஊழியம் ஒரே மொத்தமாக சமூகம் பூராவுக்கும் பொதுவாய், நடைபெறுகிறது. ஒவ்வொரு மனிதனின் கடிதமும் அவனிடம் போய்ச் சேருகிறது. இவ் வேலையை ஜனசமூகம் முழுவதும் சேர்ந்து செய்யவில்லையா? இவ்வாறே மனிதர்களின் ஏனைய தேவைகளையும், எல்லாருடைய நன்மைகளுக்கும் ஒத்த முறையில் கூட்டுறவோடு பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

தபால் இலாகா, வீதி விளக்கு, நகர சுகாதாரம், வீட்டு வேலைகளுக்கு மின்சார சப்ளை ஆகிய இவையெல்லாம் கூட்டுறவு கொண்ட தேசிய ஏற்பாடுகளேயாகும். பொது உடைமை சாத்திய மென்பதற்கு இவை பிரத்தியட்ச உதாரணங்களாய் விளங்குகின்றன.

நாடகம், சங்கீதம், சினிமா முதலிய சகல களியாட்டங்களையும், இவ்வண்ணமே எல்லாரும் அனுபவிக்கக் கூடியவையாக, பொது உடைமை ரீதியில் நடத்தலாம். இதே மாதிரியே, சகலமான சௌந்தரியக் காட்சிகளையும் எல்லாரும் ஐக்கியமாய் அனுபவித்து இன்புறும் வண்ணம, பொதுவில் நிர்வகிக்க முடியும்; அது சாத்தியமேயாகும்.

*பாஞ்சைப்பதிவீரன்
கட்ட பொம்முவின்
வரலாறு இது.*



# கட்டபொம்மு

ரகுநாதன்

வானம் பொழியுது, பூமி விளையுது
மன்னனென் காணிக்கு ஏது பணம்?
கால மழையில் முப்போகம் விளையுது
கட்டனென் காணிக்கு ஏது பணம்?
கோடை மழையிலே முப்போகம் விளையுது
கொற்றவன் காணிக்கு ஏது பணம்?
மாரிகள் பெய்தும்பெய் யாமலும் போவதை
மாற்றுதற்கோ பணம் வாங்குகிறீர்?

இது ஒரு நாட்டுப் பாடல்; ஆனால், இந்த நாட்டுப் பாடலை கொஞ்ச காலத்துக்கு முன் யாருமே பாடக் கூடாது. பாடினால் ராஜத் துரோகம். அதற்குத் தண்டனை கிடைக்கும். ஏனெனில் இந்தப் பாடல் வரி கொடா இயக்கத்துக்கு வலுக் கொடுப்பதாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கருதியது. இந்தப் பாடல் திருநெல்வேலிச் சீமையில் வழங்கி வரும் கட்டபொம்மு சரித்திரத்திலுள்ள பாடல். கி.பி. 1798-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் தேதி காலை 10 மணிக்கு கும்பினியின் பேஷ்குஷ் அதிகாரியான ஜாக்ஸனுக்கும், பாஞ்சாலங் குறிச்சி பாளையக் காரனான வீர பாண்டியக் கட்ட பொம்முவுக்கும் நடந்த சம்வாதத்தின் சாரமே இந்தப் பாட்டு. கட்டன் கப்பம் கட்ட, மறுத்தான்; ஜாக்ஸன் கட்டனைச் சிறையிடத் துணிந்தான். அதன் காரணமாக, கலகம் விளைந்தது. கத்தி முனையில் கட்டன் தப்பி ஓடி வந்துவிட்டான். அன்று ஆரம்பித்த கும்பினி-பாளைய விரோதம் 1801-ம் வருஷம் மே மாதம் 24-ம் தேதி கும்பினியார் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தரைமட்ட மாக்கும் வரை நீடித்து முடிந்தது.

பல்லாரி நாட்டிலே வாடிக் கோட்டையிலே குடி வாழ்ந்த கம்பளத்தார் என்றொரு கூட்டம் பஞ்சத்தின் காரணமாக, அங்கிருந்து தெற்கு நோக்கிப் பிரயாணப்பட்டார்கள். அப்படி வந்த கூட்டத்தாரில் ஒரு பகுதியினர் திருநெல்வேலிச் சீமையில் கோயில்பட்டித் தாலூக்காவில் மணியாச்சிக்குக் கிழக்கே பத்து மைல் தூரத்திலுள்ள சாலிகுளம் என்ற பரம்புக்காட்டில் குடிசை போட்டுக் குடி வாழ்ந்தனர். பின்னால், அவ்விடத்தில் பாஞ்சாலக் குறிச்சி என்னும் பெயரால் கோட்டை கொத்தளம் வளைந்து குடியாண்டு வந்தனர். அவர்கள் மரபிலே வந்தவர்கள் தான் கட்ட பொம்மு (கெட்டிபொம்மு) ஊமைத்துரை என்னும் பாளையக் காரர்கள். இவர்கள் 18-ம். நூற்றாண்டின் பிற் பகுதியிலே அங்கு

ஆண்டு வந்ததும், இவர்கள் கிழக் கிந்திய கம்பெனியாருக்கு கப்பம் கட்ட மறுத்ததும், அதன் விளைவாகப் போர் விளைந்ததும், ஆங்கிலச் சரித்திரம் இருட்டடிப்பு செய்ய முயன்ற உண்மை. பாஞ்சாலங்குறிச்சி என்ற ஊர் ஓட்டப்பிடாரம் கிராமத்துக்கு வடகிழக்கில் ஒன்றரை மைல் தூரத்தில இருக்கிறது. இந்தப் பாஞ்சாலக்குறிச்சி வீரர்களின் சரித்திரம் இன்று நினைப்பூட்டுதற்குரியது.

18-ம் நூற்றாண்டுக் காலத்தில் தெற்கத்திச் சீமையின் வரி வசூலிப்பு விஷயமாக, நவாபுக்கும் கம்பெனியாருக்கும் ஒரு உடன்படிக்கை நடந்தது. அதன் விளைவாக, பாளையக்காரர்கள் கம்பெனியாருக்கே கிஸ்தி கட்ட வேண்டும். இந்த வேளையில் ரெவினியூ போர்டார் மாக்ஸ்வெல் எனபவரை அனுப்பி பாளையக்காரர்களுக்குரிய பிரதேசங்களை வரையறுத்துக் குறிப்பிடச் சொன்னார்கள். அந்த வேளையில் அருங்குளம், சிவஞானபுரம் எனும் இரு கிராமங்களையும் எட்டயபுரத்தாருக் குரியதென மாக்ஸ்வெல் பிரித்தார்; பாஞ்சாலங்குறிச்சியார் அது தமக்கே உரியதென்றனர். மாக்ஸ்வெல்லின் இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சியால், எட்டயபுரத்துககாரர் கட்ட பொம்முவுக்கு விரோதியாகவும், கம்பெனிக்கு நண்பராகவும் மாறினர்; அது போலவே கட்டபொம்மு எட்டயபுரத்தாருக்கும், கம்பெனியாருக்கும் விரோதியாகவும், அதன் காரணமாக அப்போது தென்னாட்டில் இருந்து வந்த உலாந்தாக்காரர்களிடம் அனுதாபமும் சிநேகமும் கொண்டவராகவும் மாறினர். ஆகவே ஆதியில் மாக்ஸ்வெல் விதைத்த பிரிவினை விதையின் விளைவே, 'எட்டயபுரத்தான் சிரிக்க நாம் வாழக்கூடாது' என்ற வைராக்கியத்துடன் கட்டபொம்மு சகோதரர்கள் உயிரிழக்கும் நிலவரை கொண்டு சென்றது.

கட்டபொம்மு வீரத்திலும் வலிமையிலும் சளைத்தவனில்லையென்றாலும், கம்பெனியாரிடம் ஒத்துப் போக வழி கிடைத்தால், ஒப்பந்தம் பண்ணிக் கொள்ளவும் தயாராயிருந்தான் என்றே ஊகிக்க இடம் தருகிறது. ஆனால், அவனது தம்பியான ஊமைத்துரையும், தானபதிப்பிள்ளையான சிவசுப்பிரமணிய பிள்ளையும் சண்டை வரப் போவதை முன் கூட்டியே உணர்ந்தவர்களாய், அதைத் துரிதப்படுத்தி இரண்டிலொன்று கண்டுவிட வேண்டும் என்று ஆத்திரப்பட்டதாகவுமே தெரிகிறது.

மேஜர் ஜாக்ஸன் ராமநாதபுரம் கலெக்டராக நியமனம் பெற்று வந்த பின்பு எட்டயபுரத்தார் அவனிடம் பிராது பண்ணிக் கொண்டார்கள். அருங்குளத்திலே கம்பு, சோளக்கதிர்களைக் கொள்ளையிட்டதாகவும், தட்டைப் படைப்பிலே தீ வைத்ததாகவும், நிரை கொள்ளை கொண்டதாகவும் புகார் பண்ணி, அதைச் சமூகம் விசாரித்து நியாயம் வழங்காவிடில், மேலிடத்துக்குப் பிரியாது பண்ணிக் கொள்ள வேண்டியதாகும் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். அதன் மேல், கட்டபொம்முவுக்கு ஜாக்ஸனிடமிருந்து கடிதம் வந்தது.

கட்டபொம்முவும் அந்தக் கடிதத்தின்படி துரையுடன் 'பேஸ்ட்டி'க்கு ஒப்புக்கொண்டு மந்திரி பிரதானிகளுடன் கிளம்பினன். ஆனல் ஜாக்ஸனே திருநெல்வேலி

குற்றுலம், ஸ்ரீவில்லிப்புத்தூர், திருச்சுழி, கமுதி முதலிய ஊர்களிலெல்லாம் பேட்டிக்கு ஒப்புக் கொள்ளாமல் ராமநாதபுரம் வந்து சேர்ந்தான். ஆகவே, ராமநாதபுரத்தில் கட்டபொம்மு பேட்டிக்குச் செல்லும் போது, மனசில் தாம் அலைக்கழிக்கப் பட்டதின் காரணமாக கசப்பும், பாஞ்சைப்பதியில் முன்னுல் மணியச் சேவகம் பார்ததவனும், அப்போது ஜாக்ஸனோடு இருந்தவனுமா யிருந்த கோபாலையன் முன் கூட்டியே அறிவித்த ஜாக்ஸனின் சதி யெண்ணத்தின் காரணத்தாலும், எதற்கும் துணிந்தே பேட்டிக்குச் சென்றுன்.

அங்குஜாக்ஸன்மேஜர்கட்டனை வஞ்சனையாய் சிறையிடத் துணிந்தான். கட்டன் தப்பித்துவிட்டான். தானுபதிப் பிள்ளை மட்டும் இராமலிங்க விலாசத்தினுள் (பேட்டி நடந்த இராமநாதபுரம் சேதுபதி பங்களா) அகப்பட்டுச் சிறை பிடிக்கப்பட்டார். ஊமைத்துரைக்கு தானுபதிப் பிள்ளையில்லாமல், ஊர்திரும்பவே மனசில்லை. எப்படியும் கட்டபொம்முவும் ஊமைத்துரையும பாஞ்சைப்பதி வந்து சேர்ந்தனர்.

கும்பினியாரால், சிறையிடப்பட்ட தானுபதிப் பிள்ளையை, கட்டபொம்முவை கிஸ்தி கட்டும்படி வற்புறுத்தும்படி பலாத்காரம் செய்யப்பட்டது. பிள்ளை அந்த உடன்படிக்கைக்கு ஒப்புக் கொள்ளாமல் தன்னை போர்டாரிடம் அனுப்பி வைக்கக் கேட்டுக்கொண்டார். அதன் மேல், பிள்ளை பாராக்காரர்கள் புடைசூழ, கைதியாக போர்டாரிடம் அனுப்பி வைக்கப்பட்டார். போர்டாரிடம் ஜாக்ஸனின் வஞ்சனையை எடுத்துக் கூறினர, பிள்ளை. அதன் மேல், போர்டார் நடந்ததை மறந்துவிடும்படியும், கட்டபொம்முவை மீண்டும் ஒரு பேட்டிக்கு ஒப்புக் கொள்ளச் செய்யும்படியும் வேண்டிக் கொண்டு விடுதலை செய்தார்கள். தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடித்திழுக்க அவர்கள் அத்தனை முட்டாள்களா, என்ன?

ஊருக்குத் திரும்பிய தானுபதிப் பிள்ளை மனசில் வெள்ளையருக்கும் தம் மன்னனுக்கும் போர் மூளுவது தடுக்க முடியாதது எனற உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. ஊருக்கு வந்த பிள்ளை தனது மகன் வெள்ளைச்சாமியின் கலியாணத்துக்காக, கட்டபொம்முவுக்கு பாக்கு வைத்து, கலியாணச் செலவுக்கு நெல்லும் கேட்டார். விளைவில்லாத காரணத்தால் களஞ்சியத்தில் நெல் இல்லையென்றும், சேத்தூர், சிவகிரியில் பணம கொடுத்து நெல் வாங்கிக் கொள்ளலாமென்றும கட்டன் சொன்னுன். ஆனுல், பிள்ளை ஸ்ரீவைகுண்டத்தில் நெல் வம்பாகக் காத்துக் கிடக்கிறது என்று கூற, அந்த நெல்லை எந்த விதச் சல்லியமும் இல்லாமல் பெற முடியுமானுல், பெற்றுக் கொள்ளலாம என்றும் கட்டன் பதில் கூறினுன். அதன் மேல் பிள்ளையும் படை சனங்களும் கும்பினியாருக்குச் சொந்தமான நெல்லை அளக்க, ஸ்ரீவைகுண்டம் சென்றுர்கள். அங்கு காவலிருந்த பாண்டியத் தேவனுக்கும் கம்பளத்தாருக்கும் சண்டைவர, நெல் சூறையாடப்பட்டது; பாண்டியத் தேவனும் கொல்லப்பட்டான்.

கட்டபொம்மன் ஸ்ரீ வைகுண்டம் நிகழ்ச்சிகளைக் கண்டு கிலேசமடைந்தான்; ஊமைத்துரையோ பிள்ளையை ஆதரித்தான். பாண்டியத் தேவனின்

தாய் முத்துக்கறுப்பாயி மகனின் மரணத்தைப்பற்றி பாளையங் கோட்டை பிற்கட்டு மேஜரிடம் முறையிட்டாள். அதன் மேல், பிற்கட் 'பாண்டியனைக் கொன்ற தானாபதிப் பிள்ளையை கம்பெனியாரிடம் ஒப்புவித்து விடவேண்டும். இல்லையெனில் சண்டை தான்' என்று கட்டபொம்முவுக்கு செய்தி அனுப்பினான். ஆனால், ஊமைத்துரையோ, "கிஸ்தியை வேண்டுமானாலும் ஒட்டிக்கு இரெட்டியாகக் கொடுக்கலாமே ஒழிய, மந்திரிப் பிள்ளையைக் கொடுக்க முடியாது" என்றான்.

ஆகவே உடன்பாடற்ற முறையில் இருதரத்தாருக்கும் சண்டை மூள ஆரம்பித்தது. இருபாலரும் யுத்தத்துக்குத் தயாரானார்கள். இந்தச் சண்டையில் வெள்ளையர் பக்கம் பிற்கட்டும், காலனும் பிரபலமானவர்கள். அதுபோலவே கட்ட பொம்மன் பக்கத்தில் ஊமைத்துரையும், அவனது உயிருக்குயிரான வெள்ளையனும் பிரபலமானவர்கள்.

போகாதே போகாதே என்கணவா!
பொல்லாத சொப்பனம் கண்டுவிட்டேன்

என்று வெள்ளையன் மனைவி பிரலாபிப்பதாகவும், அதற்கு வெள்ளையன்,

போகவிடைதர வேண்டுமடி!
போகத்தடை செய்தால் கோபம் வரும்
என்புத்தி கேட்பவர் கோடியதில்
பெண்புத்தி கேட்பனோ பாதர் வெள்ளை?
உண்ட விட்டுக்கு இரண்டகம் செய்து
உலகிலே உயிர் வாழலாமோ?

என்று கொதித்தெழுவதையும் கட்டபொம்மு நாட்டுப்பாடலில் காணமுடிகிறது.

சண்டை நடந்தது. சண்டையில் கட்டபொம்மனின் சிறந்த படைவீரர்களான வெள்ளையன், கந்தன் பகடை முதலியவர்கள் கொல்லப் பட்டார்கள். பல நாள் சண்டை நடந்தும் கோட்டை தகரவில்லை. கடைசியில் தானாபதிப்பிள்ளையின் யோசனைப்படி கோட்டையைவிட்டுத் தப்பி விடவேண்டும் என்று எண்ணுகிறார்கள். இருட்டோடு இருட்டாய் தப்பி ஓடி, நாகலாபுரம் சென்றார்கள். அங்கு ஆலோசனை பண்ணி, தானாபதிப்பிள்ளை நாகலாபுரத்திலேயே இருந்து விஷயாதிகளை அவ்வப்போது தெரிவித்துக் கொண்டிருக்கவேண்டும் என்றும், கட்டபொம்மு சகோதரர்கள் புதுக்கோட்டை செல்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது. ஊமைத்துரை வழியில் பிரிந்து விட்டான். பிரிந்து கன்னிவாடியில் ஒரு வீட்டில் இனங்கூறாமல் தங்கிவந்தான். கட்டபொம்மு மட்டும் புதுக்கோட்டை சென்று அங்கு தொண்டைமானின் ராஜோபசாரங்களைப் பெற்று இருக்கும்போது, தொண்டைமானின் துரோகசிந்தையால், ஆக்னியூவுக்கு விஷயம் எட்டி, கட்டன் சிறைப்பட்டான். ஊமைத்துரை அகப்படவில்லை. கம்பெனியார் கட்டன் ஊமைத்துரைக்குக் கடிதம் எழுதி வரவழைத்தால், விஷயத்தைச் சுமுகமாக்கிக் கொள்ளலாம் என்று நயவஞ்சகமாய்க் கூறிய தன் பேரில், கட்டனிடமிருந்து ஊமைத்துரைக்கு லக்கய நாயக்கன் மூலம் தகவல் சென்றது. அதன் காரணமாக, ஊமைத்துரையும் பிடிபட்டான். நாகலாபுரத்தில் தானாபதிப்பிள்ளையும் பிடிபட்டார். கடைசியில் மேஜர் பானர்மென் முன்னிலையில் விசாரணை நடந்தது. நாகலாபுரத்தில் பிள்ளை தூக்கிலிடப்பட்டு, பிள்ளையின் தலை பாஞ்சா

லங்குறிச்சி கோட்டை வாசல் கொடி மரத்தில் சொருகப்பட்டது. கட்டபொம்முவும் 1799-ம் ஆண்டு அக்டோபர் 14-ம் தேதி கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டான். ஊமைத்துரையும் பிறரும் பாளையங்கோட்டைச் சிறையில் காவல் வைக்கப்பட்டனர். பாஞ்சாலங்குறிச்சி கோட்டை தரை மட்டமாகிவிட்டது.

'தொண்டைக் குழியிலே சீவனிருந்தாலும் தோக்கலவார் வீரம் இழக்காத' ஊமைத்துரையும்,கோஷ்டியும் சிறையிலிருந்து கெட்டிக்காரத்தனமாகத் தப்பி ஓடி, கோட்டை எழுப்பி, மீண்டும் சண்டைக்குத் தயாரானார்கள். கட்டபொமமுவையும்,பிள்ளையையும் தூக்கிலிட்ட பானர்மென் அப்போது திரும்பிப்போய் விட்டான். பிற்கட்தான் மீண்டும் ஊமைத்துரை மீது போர் தொடுத்தான். கோட்டை சிறிதும் தகரவில்லை. பதனீர், கம்பு உமி, கம்பங்கூழ் முதலியன கலந்து கட்டிய அந்தக் கோட்டை தகரவில்லை. சண்டை நீடித்தது. அப்போது கம்பெனிச் சேனாதிபதியிடமிருந்து "எட்டு நாள் போரிடுங்கள். இல்லையென்றால், எட்டு நாள் கழித்து ஊமைத்துரையை தெட்சிணநவாபாகப் பிரகடனப் படுத்துங்கள்" என்று அறிவிப்பு வந்தது. வெள்ளையரின் இந்த வழக்கமான சூழ்ச்சி ஊமைத்துரையிடம் பலிக்கவில்லை. "சிங்கத்துக்கு நரி பட்டம் கட்டவா? கட்டனையும் பிள்ளையையும் பறிகொடுத்துவிட்டு, பட்டம் சூட்டவா?" என்று குமுறினான், அவன்.

சண்டை நடந்தது. நிலைமை முற்றியதும் ஊமைத்துரை கோட்டையை விட்டுத் தப்பித்து, சிவகங்கை மருது பாண்டியனிடம் அடைக்கலம் புகுந்தான். மருது சகோதரர்கள் வெள்ளையருடன் பகையாடி, தங்கள் நட்புரிமையைக் காட்டினார்கள். அதன் காரணமாக, அவர்கள் பிடிபட்டு, திருப்பத்தூர்க் கோட்டையில் தூக்கிலிடப் பட்டார்கள். ஊமைத்துரையையும் பாஞ்சாலங் குறிச்சிக்குக் கொண்டு வந்து பீரங்கி மேட்டில் தூக்கிலிட்டுக் கொன்றார்கள். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையையும் இடித்துத் தரைமட்டமாக்கினார்கள். காகம் பறக்காத சீமையிலே அன்று காகமும் பறந்தது; கழுகும் பறந்தது.

இப்படியாக, அன்று வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய கட்டபொம்மு சகோதரர்களின் சரிதம் முடிந்தது. கட்டபொம்மு வெள்ளையர்களை எதிர்த்ததற்குக் காரணம், வெள்ளையர்கள் தமது நிலப்பிரபுத்வ ஆட்சியில் கைவைக்க முயன்றதாலேயே அன்றி, அன்னிய ஆதிக்கம் நம் நாட்டில் கால் பரவக்கூடாது என்ற சுதேசிய உணர்ச்சி மிகுதியால் அல்ல. ஆனால், அவன் தம்பி ஊமைத்துரைதான் வெள்ளையர்கள் என்றாலே வெறுத்துத் தள்ளினான். அண்ணனைவிட, தம்பிதான் இந்த வீர சரித்திரத்தின் சரித்திர நாயகனாக விளங்கக் கூடியவன்.

பாஞ்சாலங்குறிச்சி, வெள்ளையர்களின் சிம்ம சொப்பனமாக விளங்கியது. ஆகவே இடித்துத் தரைமட்டமாக்கிய இடத்தில், காட்டு ஆமணக்கை விதைத்து ஒன்றுக்கும் உதவாமல் அடித்தார்கள். பாஞ்சாலங்குறிச்சி என்ற பெயரையே சர்க்கார் புத்தகத்திலிருந்து நீக்கிவிட்டார்கள். இப்போது பாஞ்சாலங்குறிச்சி இருக்குமிடம் சென்றால், அங்கு

தரைமட்டமான கோட்டையின் அஸ்திவாரத்தைத்தான் காண முடியும். அந்த அஸ்திவாரத்தின் படமே பக்கத்தில் கொடுத்திருப்பது.

குறிப்புகள் :

1. பூஜை மண்டபம் (தானாபதிக்குரியது)
2. தானாபதியின் வீடு
3. கன்னி விநாயகர் கோயில்
4. கீராவி
5. முரசடிக்கும் இடம்
6. கட்டபொம்மு ஊமைத் துரை கோட்டை
7. கிணறு (இன்றும் தண்ணீர் இருக்கிறது.)
8. எட்டுக்கால் மண்டபம்
9, களஞ்சியம்
10. குருவிச் சாவடி
11, சொக்கட்டான் மண்டபம்
12. ஆனை கட்டும் தறி
13. தெப்பக்குளம்

வெள்ளையர்கள் கட்டபொம்முவின் வீரகாவியத்தை மறைக்க முயன்றாலும் மக்கள் மறக்கவில்லை. மக்கள் அவன் புகழைப் பாடலிலே இசைத்தார்கள். அவனையும் ஊமைத்துரையையும் தெய்வமாகக் கும்பிடுகிறார்கள். இன்றும் கயத்தாற்றில் கட்டபொம்முவைத் தூக்கிலிடப்பட்ட புளிய மரத்தின் அடியிலுள்ள கற்குவியல் மக்களது வீரவணக்கத்தைத்தான் காட்டுகிறது. தாய்மார்கள் தம் குழந்தைகளுக்குக் கொடுக்கும் சேனையில் பாஞ்சாலங்குறிச்சி மண்ணில் சிறிதாவது கலந்து கொடுப்பது இன்றும் வழக்கம்; அந்த மண்ணில் வீரம் இருக்கிறதாம். அத்தனை நம்பிக்கை. சண்டைக் கோழிகளும், குஸ்தி பயில்வான்களும் பாஞ்சாலங்குறிச்சி மண்ணைப் பவித்திரமாகக் கருதுவார்




கள். ஆகவேதான் அந்த 'வீர மண்ணில்' யாரேனும் ஒரு பிடி அள்ளுவதாகத் தெரிந்தால்கூட, குற்றமாகக் கருதப்பட்டது.

கட்டபொம்முவையும் ஊமைத்துரையையும் ஈன்றெடுத்த மண்தான் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. யையும் ஈன்றெடுத்தது. ஆகவே, சுதந்திரத் திருநாளைக் கொண்டாடும் நாம் வ. உ. சி. பிறந்த ஒட்டப்பிடாரத்தைத் திசை நோக்கித் தொழும் போது, கட்டபொம்முவையும் ஊமைத்துரையையும் மனசில் நினைத்துக் கொள்ளத்தானே வேண்டும்!

✱

# இண்டோ-கமர்ஷியல் பாங்க்

லிமிடெட்.

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூல தனம் | .... ரூ. 25,00,000 |
| வழங்கி வரக்கவிக்கப்பட்ட மூல தனம் | .... ரூ. 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூல தனம் | .... ரூ. 18,75,000 |
| ரிஸர்வ் நிதி | .... ரூ. 10,00,000 |

மதராஸில் ஆபீஸ்கள்

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோட், தியாகராய நகர், பெரியமெட், மைலாப்பூர், திருவல்லிக்கேணி

தென்னிந்தியாவின் எல்லா முக்கிய நகரங்களிலும் பிராஞ்சுகளும், சப் ஆபீஸ்களும் உள்ளன

## முன்னேற்றமான திட்டங்கள்

### ரெகரிங் டெபாஸிட்டுகள்

ஒவ்வொரு மாதம் ரூபாய் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டுள்ள துகைகளோ செலுத்தி வரலாம். இந்த டிபாஸிட்டுகள், 47 அல்லது 90 மாதங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

ரூபாய் ஒன்று வீதம் 47, 90 மாதங்களுக்கு செலுத்தி வந்தால் முறையே 48, 91 வது மாதக்கடைசியில் ரூ. 50, 100 வீதம் திரும்பப் பெறலாம்.

### காஷ் ஸர்ட்டிபிகெட்டுகள்

மூன்றுவருஷ காஷ் ஸர்ட்டிபிகெட்டுகள் ரூ. 50-ம் அதன் பெருக்குத் துகைகளுக்கும் பெற்றுக் கொள்ளலாம். 50 ரூபாய் காஷ் ஸர்ட்டிபிகெட்டுக்குச் செலுத்த வேண்டிய துகை ரூ. 46.

ஐந்து வருஷ காஷ் ஸர்ட்டிபிகெட்டுகள் ரூபாய் பத்துக்கும் அதன் பெருக்குத் துகைகளுக்கும் பெற்றுக் கொள்ளலாம். 10 ரூபாய் காஷ் ஸர்ட்டிபிகெட்டுக்குச் செலுத்த வேண்டிய துகை ரூ. 8—10—0 மேற்கண்ட திட்டங்களின் வசதிகளை எங்கள் எல்லா ஆபீஸ்களிலும், எவ்வித துகைகளுக்கும் பெறலாம்.

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரெக்டர்.





ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

# அரிய நாவல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| சிப்பாய் ஹிருதயம் | 'சுகி' | 1 | 8 |
| வளர் பிறை | 'டீமாறன்' | 3 | 0 |
| பாச வலை | ய. ல. | 1 | 8 |
| மரகதம் | விக்டர் ஹ்யூகோ | 5 | 0 |
| மிருணுளினி | பங்கிம் சந்திரர் | 2 | 8 |
| தபசியும், தாசியும் | அனத்தோல் பிரான்ஸிஸ் (அச்சில்) | | |

தபால் செலவு தனி

கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம், திருச்சிறப்பள்ளி ஜில்லா




**புதுமைப்பித்தன்**

நடந்தேன், நடக்கின்றேன்
நடந்து நடந்தேகுகின்றேன்.
நடந்தேன், நடக்கின்றேன்,
நடந்து நடந்தேகுகின்றேன்.

செல்லும் வழி இருட்டு
செல்லும் மனம் இருட்டு,
சிந்தை அறிவினிலும்
தனி இருட்டு.

நடையால் வழிவளரும்
நடப்பதனால் நடை தொடரும்;
அடியெடுத்து வைப்பதற்கு
ஆதிவழி ஏதுமில்லை.

சுமையகற்றிச் சுமையேற்றும்,
சுமைதாங்கியாய் விளங்கும்
சுமைக்குள்ளே தானியங்கிச்
சுமையேற்றும் சும்மாடே!

'எங்கு' 'எதற்கு'
'ஏனெ'ன்று கேட்டக்கால்
'எங்கு எதற்கு'
'ஏனெ'ன்றே கேள்வி வரும்.

என்னை அணைத்ததும்
இருட்டுக் குரல் தானோ?
என்னை அணைக்க வரும்
மருட்டுக் குரல் தானோ?

நடந்தேன் நடக்கின்றேன்
நடந்து நடந்தேகுகின்றேன்,
நடந்தேன், நடக்கின்றேன்
நடந்து நடந்தேகுகின்றேன்.

# குட்டிக் கதைகள்

### இருபாபர்த்மாக்கன்

இரண்டு மனிதர்கள் தமது பாவங்களிலிருந்து விமோசனம் பெற ஒரு ஞானியிடம் யோசனை கேட்கப் போனார்கள். ஒருவன் தான் மகா பாவம் செய்ததாகச் சொன்னான். மற்றவன் தான் அப்படிப் பிரமாதமான பாபகிருத்தியங்களில் ஈடுபடவில்லை என்று சொன்னான்.

ஞானி அவர்களுடைய பாபங்களின் விவரத்தைக் கேட்டார்.

முதலாமவன் சொன்னான்: "ஆத்திரத்தில் என் நண்பனைக் கொன்றுவிட்டேன். இப்போது என் மனச் சாட்சி என்னைத் துன்புறுத்துகிறது. அதை நினைத்து நினைத்துப் புழுங்குகிறேன்." சொல்லும்போதே அவனுக்கு அழுகை வந்தது.

இரண்டாமவன் சொன்னான்: "நான் சிறு சிறு பாவங்கள் தான் செய்தேன்; அவை குறிப்பிடத் தக்கவையுமல்ல; நினைவிலும் இல்லை." அவனுடைய பேச்சில் உற்சாகம் இருந்தது.

ஞானி கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, முதலாமவனைப் பார்த்து, "மகனே, நீ போய் உன்னால் சுமக்க முடிந்த அளவுக்குப் பெரிதான ஒரு பாறுங் கல்லைத் தூக்கிக் கொண்டுவா" என்றார். இரண்டாமவனைப் பார்த்து: "மகனே, நீ ஒரு சாக்கு எடுத்துக்கொண்டு போய் அது கொள்ளுமளவுக்கு சிறு சிறு கற்களாகப் பொறுக்கிக் கட்டிக் கொண்டு வா" என்றார்.




இருவரும் சென்றார்கள். ஒருவன் பெரிய பாறுங்கல்லுடனும், அடுத்தவன் ஒரு மூட்டை கூழாங் கற்களுடனும் வந்து சேர்ந்தனர்.

ஞானி இருவரையும் பார்த்து, "சரி. இனி நீங்கள் இருவரும் சென்று இந்தக் கற்களை எங்கெங்கிருந்து எடுத்தீர்களோ அங்கேயே போட்டு வாருங்கள்" என்றார்.

இருவரும் அங்கிருந்து சென்றனர். முதலாமவன் தான் தூக்கி வந்த பாறுங்கல்லை எடுத்த இடத்தில் போட்டுவிட்டுத் திரும்பினான். இரண்டாமவன் கற்களைப் பொறுக்கிய இடங்களைக் கண்டுபிடிக்கமுடியாமல், ஞானியிடமே திரும்பி வந்தான். வந்து தனது இயலாமையைத் தெரிவித்தான்.

ஞானி இருவரையும் பார்த்து, "மக்களே! பாவம் என்பது

---

*உபநிஷத்துக் கதையைப் போல, உலகில் பல கதைகள் வழங்கி வருகின்றன. அவற்றில் சிலவே இவை. இவை ஒவ்வொன்றும் ஒரு உண்மையைக் கூறுகிறது. கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?*

இந்தக் கற்களைப் போன்றது தான். பெரும் பாவம் செய்தவனின் மனசை, அப் பாவம் இந்தப் பாறுங் கல்லைப் போலவே அமுத்தும். அவன் அதை உணர்ந்து வருந்தும்போது, அந்தப் பாவத்தை மன்னித்து விட முடியும். சிறு சிறு பாவங்களே செய்பவனால் அவற்றை மனசில் நினைத்துப் பார்க்கக்கூட முடியாதபோது, அதை நினைத்து வருந்த முடியாதபோது அவன் பாபியாகவே இருக்கிறான். ஆகவே சிறு பாவங்களையும் பெரும் பாவத்தைப் போலவே கருதவேண்டும்'' என்று சொன்னார்.

—டால்ஸ்டாய் (ருஷ்யக் கதை)

## 2

### உண்மை மோதிரம்

ஒரு சுல்தான் இருந்தான். அவனுக்குப் பணத் தேவை அதிகமாயிருந்தது. அந்தப்புரச் சிங்காரிகளுக்கும், அடிமைகளுக்கும் செலவு பண்ணவே பணம் பற்றாக் குறையா யிருந்தது. ஆகவே அவன் மந்திரியின் ஆலோ



சனையை நாடினான். மந்திரி ஒரு யோசனை சொன்னான்: இந்த ஊரில் ஒரு யூதன் இருக்கிறான்; பெரும் பணக்காரன். அவன் மீது ஏதாவது ஒரு பழியைச் சுமத்தி அதன்மேல், அவனுடைய பணத்தைத் தட்டிப் பறிக்கலாம் என்று சொன்னான்.

சுல்தான் தலையாட்டிவிட்டு யூதனை வரவழைத்தான். முஸ்லிமான சுல்தான் யூதனைப் பார்த்து ''மூன்று பெரும் மதங்களிலும் எது சிறந்தது'' என்ற கேள்வியைக் கேட்டான். கேட்டுவிட்டுத் தனக்குத்தானே யோசித்துக் கொண்டான்:

''யூதன் தனது மதத்தைப் பெருமைப்படுத்தி கிறிஸ்துவத்தைப் பாராட்டினால், நான் என் மதத்தை இழிவுபடுத்தி விட்டதாக அவன் மீது சீறுவேன். அதன்மேல் அவன் பணத்தைப் பறிப்பேன். அவன் இஸ்லாமே சிறந்தது என்றால், அவன் ஏன் இன்னும் யூதனாயிருக்கிறான் என்று கேட்பேன். அவன் முஸ்லிமாக மறுப்பான். அதைக் கொண்டும் அவன் பணத்தைத் தட்டிப் பறிப்பேன்.''

சுல்தான் கேட்டான்: ''எது உண்மையான மதம்?''

யூதன் கொஞ்சங்கூடக் கலங்காமல் பதில் சொன்னான்:

''அரசே! தயை செய்து ஒரு கதை சொல்ல அனுமதியுங்கள். ஒரு தகப்பனுக்கு மூன்று பிள்ளைகள்; மூவர்மேலும் அவனுக்கு நிறைந்த அன்பு உண்டு. அந்தத் தகப்பனிடம் ஒரு விலையுயர்ந்த வைர மோதிரம் இருந்தது. மூன்று பிள்ளைகளும் தனக்கே அந்த மோதிரத்தைத் தரவேண்டும் என்று தனித் தனியே வேண்டிக் கொண்டார்கள். யாருக்குக் கொடுப்பது என்று தெரியாமல் அவன் திண்டாடினான். ஆகவே ஒரு தட்டானை வரவழைத்து அந்த வைர

மோதிரம் போலவே வேறு இரு கல் மோதிரங்களையும் செய்து கொண்டுவரச் சொன்னான். மோதிரங்கள் வந்து சேர்ந்தன. தட்டான் செய்துவந்த மோதிரங்களுக்கும், வைர மோதிரத்துக்கும் தோற்றத்தில் வித்தியாசமே இல்லை. தகப்பன் பிள்ளைகளைத் தனித் தனியே கூப்பிட்டு ஒவ்வொருவரிடமும் ஒரு மோதிரத்தைக்கொடுத்து அனுப்பினான். மூவரும் தங்கள் தங்கள் கையில் தான் வைர மோதிரம் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். தகப்பன் நிம்மதியாய் இறந்துவிட்டான்.

"அரசே. இந்தக் கதையே இந்த மூன்று மதங்களுக்கும் பொருந்தும். ஆண்டவன் ஒருவனுக்குத்தான் எது உண்மையான மதம் என்பது தெரியும். நாமெல்லாம் அவனுடைய குமாரர்கள். நாமெல்லாம, நாம்தான் உண்மையான வைர மோதிரத்தை வைத்திருப்பதாக நினைத்துக்கொள்ளுகிறோம்."

யூதன் கதையை முடித்தான். சுல்தான் கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, யூதனை விடுதலை செய்தான்.

—இத்தாலியக் கதை

## தற்பெருமை

ஸாலமோன் மகாராஜா அரண்மனை உப்பரிகையி லிருந்து தோட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். தோட்டத்தில் ஒரு புறாக் கூடு. அதில் ஆணும் பெண்ணுமாக ஒரு ஜோடிப் புறாக்கள இருந்தன.

ஸாலமோனுக்குப்பக்ஷிபாஷை, மிருக பாஷை யெல்லாம் தெரியும். ஆகவே அந்தப் புறாக்கள் என்ன பேசிக்கொள்கின்றன என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

ஆண் புறா சொல்லிற்று: "கண்ணே! நீ என் அரண்மனையையே வெறித்து வெறித்துப் பார்க்கிறாய்? நான் நினைத்தால், அந்த அரண்மனையை என் அலகால் இடித்துத் தரைமட்டமாக்கி விடுவேன், தெரியுமா?"

மகாராஜா இதைக் கேட்டவுடன் ஆண் புறாவைத் தன்னிடம் கூப்பிட்டார். கூப்பிட்டு, "என்ன ஒரேயடியாய் பெருமை பாராட்டுகிறாய்? உன்னால் இந்த அரண்மனையை இடித்துத் தள்ள முடியுமா?" என்று கேட்டார்.

ஆண் புறா நடுங்கிப்போயிற்று. பிறகு அரசரைப் பார்த்து, "அரசே! மன்னிக்க வேண்டும். மனைவியைச் சந்தோஷப்படுத்த புருஷன் ஆயிரத்தைச் சொல்லத்தான் செய்வான். நீங்கள் இதையெல்லாம் பொருட்படுத்தலாமா?" என்றது.



அரசர் சிரித்துக்கொண்டே புறாவைக் கண்டித்து "இந்த மாதிரி இனிமேல் முட்டாள்தனமாய்ப் பேசிக்கொண்டிருக்காதே" என்று சொல்லி அனுப்பினார்.

ஆண் புரு மீண்டும் கூட்டுக்குத் திரும்பி வந்தது. வந்து தன் மனைவியிடம், "கண்ணே, அரசர் என்னை எதற்கு கூப்பிட்டனுப்பினர் தெரியுமா? ரொம்பரகசியம். நீ யாரிடமும் சொல்லிவிடக் கூடாது. அவர் ஒரேயடியாய்ப் பயந்து போய்விட்டார். அவருடைய அரண்மனையை நான் இடித்துத் தள்ளிவிடக் கூடாது என்று அழாக்குறையாய் வேண்டிக்கொண்டார். என்ன பண்ணுவது? பாபம் பிழைத்துப் போகட்டுமே! பார்த்தாயா? ஸாலமோன் மகாராஜா கூட என்னிடம் அடி பணிய வேண்டியிருக்கிறது" என்று பெருமையடித்துக்கொண்டது.

—எபிரேயக் கதை

### அறிவும் புத்திசாலித்தனமும்

ஓர் ஊரிலிருந்து நாலு நண்பர்கள் தங்கள் அறிவு விசாலத்தால் உலகத்தையே கட்டியாள எண்ணி பரதேசம் புறப்பட்டார்கள். அவர்களில் முதல் மூவரும் சகல கலா வல்லவர்கள்; கடைசி மனிதனுக்குக் கலாஞானம் அதிகம் இல்லாவிட்டாலும், புத்தி சாதுர்யம் உண்டு.

எனினும் அந்த நண்பர்கள் அந்தக் கடைக்குட்டியைத் தங்களோடு சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. முதல் இருவரும் அவனைப் பார்த்து, "உனக்கு என்ன கலாஞானம் உண்டு? எங்களோடு வந்து நாங்கள் சம்பாதிப்பதில் பங்கு கோரவா வருகிருய்? ஆகவே திரும்பிப் போ" என்றுர்கள்.

மூன்றுமவன் மட்டும் இரக்கப்பட்டு, "என்ன இருந்தாலும் நண்பனுச்சே. கூட இருந்து விட்டுப் போகட்டுமே" என்றுன்.

கடைசியில் நால்வருமே சேர்ந்து சென்றுர்கள். போகும் வழியில் ஒரு சிங்கத்தின் எலும்புககூடு கிடந்தது. அதை அவர்கள் கண்டனர்.

முதலாமவன் நான் இந்த எலும்புகளை ஒழுங்காக்குவேன்" என்று சொல்லி அதைச் செய்தான்.

இரண்டாமவன் தனது கலைஞானத்தால் அதற்குச் சதையும் ரத்தமும் கொடுப்பதாகச் சொன்னுன்; செய்யவும் செய்தான்.

மூன்றுமவன் அதற்கு உயிரூட்டப் போவதவாகச் சொன்னுன்.

அதற்குள் புத்திசாலியான நாலாவது நண்பன் "தயைசெய்து கொஞ்சம் பொறு" என்று சொல்லிக் கொண்டே, பக்கததிலிருந்த மரத்தி லேறிக் கொண்டான்.

மூன்றுமவன் சிங்கத்துக்கு உயிரையும் கொடுத்தான்.

உயிர்பெற்று எழுந்த சிங்கம் அம் மூவரையும் கொன்று தீர்த்துவிட்டுச் சென்றது.

புத்திசாலி சாவதானமாய் மரத்தைவிட்டு இறங்கி நடந்தான்.

—பஞ்சதந்திரக் கதை

✱

### அவையடக்கம்!

இந்தச் சிறுவன் இயற்றிய பாடல்களில் குற்றம் குறைகள் இருந்தபோதிலும் அதைக் குணமாகக் கொள்ளவேண்டும்!

— ஒரு தமிழ் நூலின் முன்னுரை

# அர்த்த சாஸ்திரத்தில் அரசனின் கடமைகள்

**கௌடில்யன்**

அசோக சக்ரவர்த்தியின் பாட்டன் சந்திரகுப்த மௌரியன். சந்திரகுப்தனை சிம்மாசனத்தி லேற்றுவதற்கு நந்தராஜ வம்சத்தை ஒழிக்கவேண்டி யிருந்தது. இந்த இரண்டு காரியங்களையும் செய்தவன் கௌடில்யன் என்பவன். அவனே அவனுடைய அமைச்சன். ஜாதியிலோ பிராமணன். அவனுக்கு விஷ்ணுகுப்தன், சாணக்கியன் என்ற பெயர்களும் உண்டு. அவன் தென்னாட்டுக்காரன் என்று கூட ஓர் அறிஞர் கருதுகிறார். அவன் கிறிஸ்து பிறக்க 300 வருஷங்களுக்கு முன் வாழ்ந்தவன். அவன் அர்த்த சாஸ்திரம் என்ற ஓர் அரசியல் நூலை இயற்றியிருக்கிறான். இந்நூலை அந்தக்காலத்திலேயே பாராட்டியிருக்கிறார்கள்; தூற்றியும் இருக்கிறார்கள். இங்கே அவன் நூலில் 19-ம் அத்தியாயத்தில் உள்ள அரசனின் கடமைகள் மொழி பெயர்த்துத் தரப்பட்டுள்ளன. சில விஷயங்கள் இக்காலத்துக்கு ஒவ்வாதனவாக இருந்தாலும், சில முற்போக்கானவையாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

அரசன் சுறுசுறுப்புள்ளவனாக இருந்தால் அவனுடைய குடிகளும் சுறுசுறுப்புள்ளவர்களாக இருப்பார்கள். அவன் அசட்டைத் தனமாக இருந்தால் அவனுடைய குடிகள் அசட்டையாக இருப்பதுடன் மட்டுமல்லாமல், உண்ட வீட்டில் கெண்டியும் தூக்கி விடுவார்கள். அத்துடன் அசட்டைத்தனமுள்ள அரசன் விரோதிகளின் கையில் எளிதில் சிக்கிக் கொள்ளுவான். ஆகவே, அரசன் எப்பொழுதும் விழிப்போடு இருக்க வேண்டும்.

அரசன் பகலை எட்டு நாழிகைகளாகவும் இரவை எட்டு நாழிகைகளாகவும் (1 நாழிகை = $1\frac{1}{2}$ மணி) பிரித்துக்கொள்ள வேண்டும்.* இவற்றில் பகலில் முதல் நாழிகையில் (அதாவது முதல் பகுதியில்) அரசன் காவலாளர்களை உரிய இடத்தில் நிறுத்திவிட்டு, வரவு செலவு கணக்குகளைக் கவனிக்க வேண்டும்; இரண்டாம் பகுதியில் நகர மாந்தர், நாட்டுப்புற மாந்தர் ஆகியோரின் விவகாரங்களைக் கவனிக்க வேண்டும்; மூன்றாம் பகுதியில் அவன் குளித்து உணவு அருந்துவதுடன் படிக்கவும் வேண்டும்; நான்காம் பகுதியில் தங்கமாக வரும் வரிப் பணத்தை வாங்குவதுடன் மேற் பார்வை அதிகாரிகளுடைய உத்தியோக நியமனங்களைக் கவனிக்க வேண்டும்; ஐந்தாம் பகுதியில் தன் மந்திரி சபையுடன் எழுத்து மூலமாகக் கடிதப் போக்கு வரத்து செய்ய வேண்டும். அத்துடன் தன் உளவுகாரர்களிடமிருந்து ரகசியத் தகவல்களை அறிய

*நாழிகையை எப்படிக் கணக்கிடுவது என்பதற்குப் பல வழிகளும் கணக்குகளும் கூறப்பட்டிருக்கின்றன. அது இங்கே அவ்வளவு அவசியமில்லை என்று கருதி விடப்பட்டுள்ளது. (மொ. பெ.)

வேண்டும்; ஆறும் பகுதியில் அவன் தனக்குப் பிரியமான உல்லாசப் பொழுதுபோக்குகளில் கலந்துகொள்ளலாம்; அல்லது சுயமாக ஆலோசனை செய்துகொண்டிருக்கலாம்; ஏழாம் பகுதியில் அவன் யானைகள், குதிரைகள், ரதங்கள், காலாட் படைகள் முதலியவற்றைமேற்பார்வையிட வேண்டும்; எட்டாம் பகுதியில் தன் சேனாதிபதியுடன் ராணுவ நடவடிக்கைகளைப் பற்றி ஆலோசனை செய்ய வேண்டும்.

பகல் கழியும் நேரத்தில் அவன் அந்தி நேரப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

இரவின் நாழிகையில் (அதாவது முதல் பகுதியில்) அரசன் ரகசிய தூதர்களை வரவழைத்துப் பேச வேண்டும்; இரண்டாம் பகுதியில் குளித்து, சாப்பிட்டுவிட்டுப் படிக்க வேண்டும்; மூன்றும் பகுதியில் அவன், எக்காள வாத்தியங்கள் முழங்க, தன் படுக்கைக்குச் சென்று நான்காம் பகுதியிலும் ஐந்தாம் பகுதியிலும் சுகமாகத் தூங்க வேண்டும;* ஆறும் பகுதியில் எக்காள வாத்தியங்களின் முழக்கத்தைக் கேட்டு அரசன் துயிலெழுந்து சாஸ்திரக் கட்டளைகளையும், மறு நாளைய கடமைகளையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; ஏழாம் பகுதியில் நிர்வாகம் சம்பந்தமாக எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி உட்கார்ந்து ஆலோசிக்க வேண்டும். அத்துடன் உளவாளிகளை வெளியிடங்களுக்கு அனுப்ப வேண்டும்; எட்டாம் பகுதியில் யாகம் புரியும் புரோகிதர்களிடமும், ஆசான்களிடமும், தலைமைப் புரோகிதரிடமும் ஆசீர்வாதம் பெறவேண்டும்; அதன் பின் தன் வைத்தியன், தலைமைச் சமையல்காரன், ஜோதிடர் முதலியவர்களைப் பார்த்துவிட்டு, பசு, கன்று, காளை—மூன்றையும் சுற்றி வந்து வணங்கியபின் தன் ராஜ சபைக்குப் போகவேண்டும்.

இதில் தன் சக்திக்கு ஏற்ற முறையில் தன் வேலை நேரங்களை மாற்றிக் கொண்டும் தன் கடமைகளைச் செய்யலாம்.

ராஜசபையில் இருக்கும் போது அரசன் தன்னிடம் வந்துள்ள விண்ணப்பதார்களை வாசலில் காக்க வைக்கக்கூடாது. ஏனென்ருல் அரசன் தன் மக்களுக்கு எட்டாத நிலையில் இருந்து கொண்டு, தனக்கு அடுத்த உத்தியோகஸ்தர்களிடம் தன் வேலைகளை ஒப்படைத்துவிட்டால் நிர்வாகத்தில் நிச்சயம் குழப்பம ஏற்படும்; அதன் மூலம் பொது ஜனங்களிடம் வெறுப்பு ஏற்படும். அவனும் எதிரிகளிடம் சிக்கிக் கொள்ள நேரிடும்.

அதனால் தெய்வங்கள், மதவிஷயத்தில் அடிப்படையான குற்றத்தைக் காண்பவர்கள், வேதம் ஓதிய பிராமணர்கள், ஆடு மாடுகள் புனித ஸ்தலங்கள், இளம் பிராயத்தவர்கள், முதியவர்கள், துன்பப்படுகிறவர்கள், நாதியற்றவர்கள், பெண்கள் முதலியவர்களின் விவகாரங்களை அரசன் நேரில் இருந்து கவனிக்க வேண்டும். மேற்கூறிய வரிசைக் கிரமப்படியோ, அல்லது அந்தந்த வேலையில் எது அவசரமாக உள்

* இதன் மூலம் கௌடில்யன் கருத்துப்படி அரசன் மொத்தம் மூன்று மணி நேரம் தான் தூங்க வேண்டும் என்று தெரிகிறது. (மொ. பெ.)

ளரோ அதை அனுசரித்தோ கவனிக்கவும் செய்யலாம்.

அவசரமாகக் கண்டு பேச வருபவர்களுடன் உடனே பேச வேண்டும்; ஒத்தி போடக் கூடாது. ஒத்தி போட்டுவிட்டால் அந்தக் காரியங்களைப்பிறகு செய்து முடிப்பது கஷ்டமாகப் போய்விடும்; முடியாமலும் போய்விடும்.

ஹோம குண்டம் வைக்கப்பட்ட அறையில் அரசன் உட்கார்ந்து கொண்டு, வைத்தியர்கள், நோன்புகளைக் கடைப்பிடிக்கும் துறவிகள் முதலியவர்களின் விவகாரத்தைக் கவனிக்க வேண்டும். அதற்கு முன்னல் (தன்னிடம் வந்துள்ள விண்ணப்பதார்களுக்கு) பூர்வாங்கமாக நமஸ்காரம் செய்துவிட்டு, தன்னேடு தன் தலைமைப் புரோகிதன், ஆசாரியன் முதலியவர்களை இருக்கும்படி செய்து கொள்ள வேண்டும்.

விண்ணப்பதார்கள் குறைப்படுவதற்கு ஏதுவில்லாதவாறு மூன்று சாஸ்திரங்களிலும் வல்லவர்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு நோன்புகளைக் கடைப்பிடிப்பவர்கள், யக்ஷிணி வித்தை, யோக வித்தை முதலியன அறிந்த நிபுணர்கள் ஆகியோரின் விவகாரங்களைக் கவனிக்கவேண்டும்.

அரசன் மதாசாரப்படி எடுத்துக் கொள்ளும் பிரதிக்ஞை, செயலாற்றுவதற்கு அவன் தயாராக இருக்கிறன் என்பதைக் காட்டுகிறது; யாகம் செய்வது தன் கடமைகளைத் திருப்திகரமாகச் செய்வான் என்பதைக் காட்டுகிறது. தக்ஷிணை வைப்பது, நிவேதனம் படைப்பதற்காக ஸ்நானம் செய்து கொள்ளுவது முதலியவற்றில் ஒரேமாதிரி கவனம் செலுத்த வேண்டும்.

குடிமக்களின் சந்தோஷத்தில் தான் அரசனுடைய சந்தோஷம் அடங்கியிருக்கிறது. குடிமக்களின் சுகவாழ்வில்தான் அரசனுடைய சுகவாழ்வு அடங்கியிருக்கிறது. அரசன் தன்னைச் சந்தோஷப்படுத்தும் விஷயங்கள் யாவும் நல்ல விஷயங்கள் என்று கருதிவிடக்கூடாது; தன் குடிமக்களைச் சந்தோஷப்படுத்தும் விஷயங்களையே நல்ல விஷயங்கள் என்று கருதவேண்டும்.

ஆகவே அரசன் எப்போதும் சுறுசுறுப்புள்ளவனுக, தன் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். செல்வத்தின் அஸ்திவாரம் சுறுசுறுப்பான உழைப்பு; அதற்கு எதிர்மாருன உழைப்பின்மை கஷ்டத்தின் அஸ்திவாரமாகும்.

உழைப்பில்லாவிட்டால், தற்போதுள்ள உடைமைகளும், இனி கிடைக்கப் போகும் உடைமைகளும் ஒழிந்து போய்விடும். உழைப்பின் மூலம் அரசன் தன் லட்சியங்களை அடைவதுடன், ஏராளமான செல்வத்தையும் அடையலாம்.

✲

**ஆத்மார்த்தக் காதல்**

ஆத்மார்த்தக் காதலுடன் நின்றுவிடும் கல்யாணங்களில் எனக்கு நம்பிக்கை கிடையாது.

—மகாத்மா காந்தி

**பொதுஜன மதிப்பு**

நல்லொழுக்கம்தான் மக்களிடம் மதிப்பைத் தேடி அளிக்கும்.

—மகாத்மா காந்தி

# இந்திய மக்களும், அவர்களுடைய

# ஆடைகளும்.



பஞ்ஜாரா..... இவர்களில் ஆண்பிள்ளைகள் அணிவது ஒரு வெள்ளை நூல் வேஷ்டி, ஒரு தளர்ந்த ஜிப்பா, அதனோடு ஒரு தலைப்பாகை. பஞ்ஜாராப் பெண்களுடைய ஆடை மிக்க சிங்காரமானது. அவர்கள் கண்ணைக்கவரும் வர்ணங்களில் பாவாடையும், கழுத்திலிருந்து இடுப்புவரை இறுகத்தைத்த ரவிக்கையையும் அணிந்து கொள்கிறார்கள். அவைகளில் பற்பல வர்ணக் கண்ணாடித்துண்டுகள் அலங்காரமாக தைக்கப்பட்டிருக்கும்.

*டாடா வகுப்பைச் சார்ந்த மில்களில் 35,000 தொழிலாளிகள் இந்தியாவுக்கு தேவையான துணி உற்பத்தியிலீடுபட்டிருக்கிறார்கள்.*

டாடா வகுப்பு நேசவுசாலைகளினால் பிரசுரிக்கப்பட்டது.

தி டாடா மில்ஸ் லிட்., தி. ஸ்வதேசி மில்ஸ் லிட்.

தி அஹமதாபாத் அட்வான்ஸ் மில்ஸ் லிட்.,

தி ஜனரல் இன்டியா ஸ்பின்னிங் வீவிங் மானுபாக்டரிங் கம்பெனி லிமிடெட்.

ADARTS TI. 670 Tamil

ஆகஸ்டு 15௳

# சுதந்திர தினம்

1907-ம் ௵ இதே தினம்

எங்கள் பாங்க் ஆரம்ப[illegible]தினம்

நடைமுதல் நிதிகள்: 23½ கோடிக்கு அதிகம்



N.P.B

தி

## இந்தியன் பாங்க் லிட்.

## ஸாரிடோன்




வலியை வெகு சீக்கிரமாக போக்குகிறது

# வைரங்கள்

சி. வி. ராமன்

வைரங்கள் சுலபமாகவும் விலை சரசமாகவும் கிடைத்தால், டீக் கோப்பைகளும், சமையல் சாமான்களும் செய்யலாம்! பீங்கான் பாத்திரங்களைக் காட்டிலும் பார்வைக்கு அவை அழகாக இருப்பதோடு, சடுதியில் உஷ்ணத்தைக் கிரகிக்கும் சக்தி வாய்ந்தவையாகவும் இருக்கும்.

வைரங்களின் இயற்கைப் பண்புகளையும், ரசாயன குண விசேஷங்களையும் ஆராய்வதில் நான் கடந்த ஏழு, எட்டு ஆண்டுகளைச் செலவழித்தேன். வைரங்களின் உபயோகத்தை முதன் முதலில் அறிந்து அதை உபயோகப்படுத்திய தனிப் பெருமை இந்தியாவுக்கு மட்டுமே உரியது. பண்டைக்காலத்தில், நெடுந்தொலைவிலிருந்து, ரோமாபுரியிலிருந்து கடல் கடந்து வந்து இந்திய வைரங்களை வாங்கிச் சென்றனர். இந்த உண்மை, 1925-ம் ஆண்டு, ருஷ்ய விஞ்ஞானக் கழகத்தின் அழைப்பிற்கு இணங்கி ருஷ்யா சென்றிருந்த பொழுது, எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. அப்பொழுது கிரெம்லினுக்குச் சென்றிருந்தேன். அங்கு, பிரகாசமான வைர, வைடூரிய, கோமேதகக் கற்களை வைத்திருந்தார்கள்.

அவற்றின் நடுவில் இருந்த காதரைன் மகாராணியின் வைர முடி பிரகாசித்தது. அந்தப் பெரிய முடியில் வைரங்களும், மாணிக்கங்களும், கோமேதகங்களும் பதிக்கப்பட்டிருந்தன. அந்த வைரமுடியின் அழகை ரசிப்பதை விட, அதில் பதிக்கப்பட்டிருந்த வைரங்களின் தன்மையையும், அந்த இந்திய வைரக் கற்கள் எப்படி ருஷ்யாவுக்குச் சென்றது என்ற ஆராய்ச்சியிலும் ஈடுபட்டது என் மனம். அந்தக் கிரீடத்தைக் கையில் வைத்திருக்கும் பொழுதும், அதைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த பொழுதும் படம் எடுத்த ஒரு காமிராக்காரர் அதை என் தலையில் வைத்துக் கொள்ளச் சொன்னார். முடியாது என்று தலையை அசைத்து விட்டேன். அதற்குமுன் அதை அணிந்தவர்களின் கதியை அடைய நானும் விரும்பவில்லை!

உலகத்துக்கே இந்தியாதான் வைரங்களை விற்றது. பிறகு உலகத்தின் பல்வேறு பாகங்களில் குறிப்பாக பிரேசில், தென் ஆப்பிரிக்கா போன்ற இடங்களிலும் வைரங்கள் கிடைக்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டவுடன், உலகத்தின் வைரவியாபாரி என்ற இந்தியாவின் தனிப் பெருமை மங்க ஆரம்பித்துவிட்டது.

லண்டன் சர்வகலாசாலையில் நம் நாட்டு விஞ்ஞான மேதை செய்த பிரசங்கம் இது. வைரங்கள் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு பயன்படுவதையும், பெண்கள் வைரங்கள்மீது பிரியப்படுவதையும் பற்றி மிக மிக ரசமாகப் பேசியிருக்கிறார் நம் அறிஞர்.



சி. வி. ராமன்

கொஞ்ச நாளைக்கு முன் சர் கிரிப்ஸ், "எலிசபெத் இளவரசிக்குப் பரிசாக வந்திருக்கும் ஊதா வைரக்கல்லை நீங்கள் பார்க்க வேண்டும். அதைப் பார்க்காத வரையில் நீங்கள் ஒரு வைர ஆராய்ச்சியாளர் என்று சொல்லிக் கொள்ள முடியாது" என்றார். ஊதா வைரக்கல் புதிதல்ல. என்னிடமே அவ்வளவு பெரிதாக இல்லாவிட்டாலும் ஒன்று இருக்கிறது. உலகமெங்கும் வைரச் சுரங்கங்கள் தோண்டப் படுகின்றன. இருந்தாலும் இந்தியாவில் இருக்கும் சுரங்கங்களில் கிடைக்கும் வைரங்களின் குணமே தனிச் சிறப்பு வாய்ந்தது. சமீபகாலமாக வட இந்தியாவில் பாலம் என்ற

இடத்தில் வைரக்கற்கள் கிடைக்கின்றனவாம்.

இயற்கையில் கிடைக்கும் வைரங்கள் பார்ப்பதற்கு அவ்வளவு அழகாக இருக்காது. பட்டை தீட்டாத வைரங்களை நம் முன்னோர்கள் காதில் அணிவது வழக்கம். இப்பொழுதுதான் தலைப்பாகை அணிவதே அநாகரிகம் என்றாகி வருகிறதே!

வைரம் அணிகலமாக உபயோகப்படுவதைப் பற்றி நான் சொல்லப் போவதில்லை. மக்கள் ஏன் நகை நட்டுகள் போட ஆசைப்படுகிறார்கள் என்பது மனித வரலாற்று சாஸ்திரிகள் ஆராயவேண்டிய விஷயம்.

ஆனால், தென்னிந்தியப் பெண்மணிகள் வைர நகைகள் அணிய ஏன் ஆசைப்படுகிறார்கள் என்பதைப்பற்றி என்னுடைய சொந்த அபிப்பிராயம் ஒன்று இருக்கிறது. அவர்களுடைய கருநிற மேனிக்கு அழகு செய்கின்றன இந்த ஊதா வைரங்கள். தங்களுடைய நிறத்தின் குறைபாட்டை நிவர்த்தி செய்யவே அவர்கள் வைரத்தின் உதவியை நாடுகின்றனர். பெண்கள் அணிந்திருக்கும் வைரங்களைப் பார்க்கும் கண்கள் கூசுகின்றன. (மிகப் பிரகாசமான வஸ்துவைப் பார்க்க மனிதக் கண்கள் கூசுவது இயற்கைதானே) ஒளிமிக்க வைரங்களினின்று கண் பார்வையை அவற்றை அணிந்திருப்பவர்கள் மேல் திருப்ப வேண்டிய அவசிய மேற்படுகிறது.

பெண்கள் வைரங்கள் அணிவதன் காரணம், தாங்கள் அணிந்திருக்கும் வைர நகைகளைப் பிறர் பார்க்கவேண்டுமென்பதற்காக அல்ல! பிறர் கண் பார்வையை வைர ஒளியின் உதவியால் இழுத்து தங்களைப் பார்க்கச் செய்ய வேண்டும் என்பதுதான். வைரங்கள் பெண்களின் அழகுக்கு அழகுசெய்து, அவர்களுடைய தோற்றத்துக்கு, அழகான பின்னணியாக விளங்குகின்றன.

இயற்கையில் கிடைக்கும் வைரக் கற்களுக்கும் கடைகளில் வைத்திருக்கும கற்களுக்கும் சம்பந்தமே இல்லை. கடைகளில் விற்கம்படும் வைரம் பட்டை தீட்டப்பட்டு, மெருகேற்றப்பட்டது. முதலில் இயற்கையில் கிடைத்த வைரத்தை அப்படியே அணிந்து கொண்டார்கள். பிறகு எவனோ ஒருவன் வைரங்களை உடைக்கலாம் என்று கண்டுபிடித்தான். பிறகு வைரக்கற்களைக் கண்ணாடிச் சில்லுகளைப் போலத் தகடுகளாக வெட்டி, அவற்றைத் தங்கத்தில் பதித்தார்கள். அவை பார்ப்பதற்குக் கண்ணாடி பிட்ட ஜன்னல் கதவுகளைப் போல இருக்கும்.

அம்மாதிரியான நகைகள் ஒரு பெட்டி நிறைய இருந்ததைப் பார்த்திருக்கிறேன். நவநாகரிக நகைகளைப்போல 'டால்' அடிக்க வில்லை. ஆனால், அந்த அழகு, படாடோபமற்றுக் கவர்ச்சி மிக்கதாய் இருந்தது. இயற்கை வைரங்களுக்கு இப்பொழுது 'மார்க்கெட்'டில் மதிப்பு இல்லை. இயற்கை வைரத் தகடுகளுக்கு விஞ்ஞானிகளிடையேதான் கிராக்கி அதிகம்.

சில சமயங்களில் ஆராய்ச்சி செய்வதற்காக என் பணக்கார நண்பர்களிடத்திலிருந்து வைரங்கள் வாங்கி வருவேன். அவர்கள் கொடுக்கும்பொழுது அரை மனத்துடன், திரும்பி வருகிற பொழுது வைரமாகத்தான் வரப் போகிறதோ அல்லது வைரத்தின் தாயாகிய கரித்துண்டாக வரப்

போகிறதோ என்ற மனச் சஞ்சலத்துடன், சந்தேகப் பார்வையுடன் கொடுப்பார்கள். பரிசோதனை செய்ய நண்பர்களிடம் இரவல் வாங்குவதைக் காட்டிலும், விலைக்கு வாங்குவதுதான் தொந்தரவில்லாதது என்று என் அனுபவம் கூறுகிறது.

வைரங்கள் தட்டையாக, தகடு போல் இருந்தால்தான் ஆராய்ச்சி செய்வது சுலபம். இதனால் இயற்கையில் கிடைக்கும், ஸ்படிக ரூப வைரக் கற்கள் பரிசோதனைக்கு லாயக்கற்றவை என்று அர்த்தமல்ல. இயற்கைவைரங்களை அவற்றின் சுயரூபத்தில் பரிசீலனை செய்வதில்தான் ஆராய்ச்சியின் முழு சிரத்தை இருக்கிறது. இயற்கை வைரங்களைப் பரிசோதனை செய்யும் வாய்ப்பு எனக்கு நிறையக் கிடைத்திருக்கிறது. அதுவும் இந்திய வைரங்களே ஒரு தனி ரகம்! உலகத்தின் பல்வேறு பாகங்களில் கிடைக்கும் அந்த வழக்கமான ஸ்படிக ரூபத்தில் மட்டும் கிடைப்பதில்லை. எல்லாவித ரூபங்களிலும், பலவித பரிமாணங்களிலும் கிடைக்கின்றன. மிகச் சிறிய வைரக்கல் ஒரு நீர்த் துளி மாதிரி இருக்கிறது!

இந்திய சமஸ்தான மன்னர்களின் ஒருவர் ஒரு வைரமாலை வைத்திருக்கிறார். அந்த வைரமாலை இயற்கை வைரங்களால் ஆனது. வைரக்கற்களை தங்கத்தில் பதிக்காமல் அப்படி மாலை போல் தங்கச் சங்கிலியில் தொடுக்கப் பட்டிருக்கிறது. நான் ஒருமுறை அந்த வைரக்கற்களைப் பார்வையிட நேர்ந்தது. என்ன அழகான சேமிப்பு! இந்தியாவில் கிடைத்த வைரங்களிலேயே தலைசிறந்தவை அவை.

இந்த வைரமாலையைப் பற்றி ஒரு கதைகூட வழங்கிவருகிறது. ஒரு சமயம் வைஸ்ராய் அந்த மன்னரைப்பார்க்கச் சென்றிருந்தாராம். அந்தச் சமயம் வைஸ்ராய், மன்னரை அந்த மாலையை அணியும்படி கேட்டுக் கொண்டாராம். அதற்கு, "இவ்வளவு அழகான மாலையைக் கேவலம் மனிதனா அணிவது?" என்று சொன்னாராம் மன்னர்.

ஸ்படிக ரூபத்தில் கிடைக்கும் வைரங்கள், வைரத்தின் வரலாற்றில் இரண்டாம்படி. அவை தோன்றி இன்றைக்கு 10 கோடி வருஷங்களா, அல்லது 100 கோடி வருஷங்களா என்பதில் தான் சர்ச்சை. எப்படியிருந்தாலும் குறைந்தது 10 கோடி வருஷங்களாவது இருக்கும். அந்த ஸ்படிக ரூபம் இத்தனை வருஷங்களாகியும் குலையாமல் இருக்கிறது! பூமியில் உள்ள அநேக ரசாயன சத்துக்களும், மற்றப் பொருள்களும் அந்த வைரங்களைப் பாதிக்கவில்லை!

இயற்கை அன்னை நமக்காகத் தயார் செய்து தரும் இந்த அரும் பெரும் பொருளை விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சிக் கூடங்களிலேயே கண்டுபிடிக்க முயற்சி செய்திருக்கிறார்கள். முயற்சியில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

க்யூரி அம்மையார்கூட, செயற்கை வைரங்கள் செய்ய ஒரு நூதன வழியைக் கண்டுபிடித்துள்ளார்கள். அந்த முறையைக் கையாண்டு, அணுக்குண்டு செய்து ஒன்றுமறியாத பாமர மக்களின் தலைகளில் போட்டு அவர்கள் இருந்த சுவடு தெரியாமல் அழிப்பதைக் காட்டிலும், ஒரு மலைக் குகையில் நிலக்கரியை அடைத்துவிட்டு, அணுச் சக்தியைப் பாய்ச்சினால், மனி

தர்கள் அழியமாட்டார்கள், நாடு, நகரங்கள் தரைமட்டமாக்கப்படமாட்டாது, அந்தச் சுரங்கம் ஒளி வீசும் வைரக்கற்கள் நிறைந்ததாக இருக்கும்.

பங்களூரில் இருக்கும் என்னுடைய ஆராய்ச்சிக் கூடத்துக்கு வருகிற நண்பர்கள், "வைரங்களை வைத்துக்கொண்டு என்ன ஆராய்ச்சி செய்கிறீர்கள்? உங்களுக்கு வைரம் செய்யத் தெரியுமோ?" என்று கேட்கிறார்கள். மனிதனுக்கு என்ன ஆசை! அதைத் தடுக்கமுடியுமா? விஞ்ஞானிகள் செயற்கை முறைப்படி கண்டுபிடித்துள்ள கெம்புகளும் (சிவப்பு வைரம்) எவ்வளவுதான் அழகாக இருந்தாலும் நகல் நகல்தானே. அசலுக்கு ஈடுவருமா? செயற்கை முறையில் தயார் செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட எடையுள்ள வைரக் கல்லை காட்டிலும் அதே எடையுள்ள அசல் வைரம் எத்தனையோ மடங்கு விலை அதிகம். பெண்கள் கூடச் செயற்கை வைரத்தை விரும்புவதில்லை! செயற்கை வைரங்களை உற்பத்தி செய்தால் அதை வாங்க ஒருவரும் முன்வரமாட்டார்கள். அதைத் தெருவுக்குக் கப்பிக் கல்லுக்குப் பதிலாக உபயோகப் படுத்தலாம்!

வைரக்கற்கள் தொழிற்சாலைகளில் அதிகம் உபயோகிக்கப் படுகின்றன. வைரம், ரேடியோக்களில் உபயோகப்படுகிற 'வால்'வின் மெல்லிய கம்பிகள் இழுக்க உபயோகப்படுகிறது.

வைரத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய நான் முற்பட்டதற்குக் காரணம், எனக்கு இரு விதத்தில் அந்த ஆராய்ச்சி பயன்படுவதுதான். முதலாவதாக ரசாயன சாஸ்திரத்தைப் படிக்க வாய்ப்புத் தருகிறது. இரண்டாவதாக, திடப்பொருள் சாஸ்திரத்தைப் பற்றியும் நன்கு அறிய முடிகிறது. வைரத்தை உலகத்திலுள்ள திடப்பொருள்களின் பிரதிநிதி என்றே கொள்ளலாம். அதன் குணாதிசயங்களை வைத்துக்கொண்டே உலகத்தில் உள்ள திடவஸ்துக்களின் தன்மைகளை ஒருவாறு அறிய முடிகிறது.

வைரங்கள் எல்லாமே ஒரே குணமுடையவை என்று சொல்ல முடியாது. இரண்டு ஜெர்மன் விஞ்ஞானிகள், வைரங்கள் மின்சார சக்தியைக் கிரஹிக்காது என்று கண்டுபிடித்தனர். ஆனால், வைரக்கற்களில் வெளிச்சத்தைச் செலுத்தினால்—குறிப்பாக ஊதா வெளிச்சத்தைச் செலுத்தினால்—மின்சாரம் அவற்றின் மூலம் பாய்கிறது.

என்னிடத்தில் ஒரு பிரமாதமான வைரக்கல் இருக்கிறது. அதற்கு 'என் கோஹினூர்' என்று பெயர் வைத்திருக்கிறேன். அதைப் பெற நான் சுமார் 1500 ரூபாய்தான் செலவு செய்திருப்பேன். அதன் இயற்கை ஒளி ஊதா. ஆனால் ஊதாநிறக் கிரணங்களை அதன் மீது பாய்ச்சினால், அதன் நிறம் பச்சை கலந்த மஞ்சளாக மாறுகிறது.

ஒரு சிறு வைரக்கல்லை வைத்துக்கொண்டே வைரக்கற்களின் பொதுவான குணாதிசயங்களைக் கண்டு பிடிக்கலாம். என்னுடைய ஒரு மாணவன்தான் வைரங்களின் மீள் சக்தியைக் (Elastic Constant) கண்டுபிடித்தான். இம்மாதிரியான ஆராய்ச்சிகளினால் என்ன பலன் கிட்டப்போகிறது என்று கேட்கலாம். இவையெல்லாம் விஞ்ஞான முன்னேற்றத்துக்கு அவசி

யம் என்று சொல்லவும் வேண்டுமா?

வைரங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து சில உண்மைகளைக் கண்டுபிடிப்பது, மற்ற, ஸ்படிக வர்க்கங்களின் தன்மைகளைப் பற்றி அறிய உபயோகமாயிருக்கும். திடப் பொருள்களைப் (Solids) பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களுக்கு வைரம் வழிகாட்டியாக இருக்கும்.

என்னுடைய மாணவன் என்னை ஒருமுறை, "ஒரு வஸ்து எப்படி ஒரே சமயத்தில் விதிவிலக்காகவும், மற்றத் திடவஸ்துக்களின் பிரதிநிதியாகவும் இருக்க முடியும்?" என்று கேட்டான்.

"நீ ஒரு பௌதிக சாஸ்திரி அல்ல. நீ ஓர் அரசியல்வாதி. ஆகவே உனக்கு ஓர் அரசியல் உதாரணத்தின் மூலம் விளக்குகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பின்வருமாறு கூறினேன்:

"இந்தியாவில் உள்ள மனிதர்களிலேயே விதிக்கு விலக்காக நிற்கிறார் மாகாத்மா காந்தி. எப்படியென்றால், அவர் தாம் அரையில் உடுத்தியுள்ள வேட்டியுடனேயே உலகம் முழுவதும் சுற்றுவார். அம்மாதிரி நீயும் நானும் செய்யமுடியாது. அதே சமயத்தில், அவர் இந்திய மக்களின் பிரதிநிதியாக விளங்கினார். அவர் சொன்னதைப் பிரிட்டிஷ் அரசாங்கம்கூடக் கேட்டது. நீயும் நானும் சொன்னால் கேட்குமா, அந்த அரசாங்கம்?"

❊

## ஏன் ?

மேற்கத்திய நாகரிகத்துக்கு நாம் ஏன் பிளாட்டிங் பேப்பர்களாக (மை ஒத்தும் காகிதங்களாக) இருக்க வேண்டும்?

—மகாத்மா காந்தி.

## அபேதவாதம்!

உலகத்தின் பிரச்னைகளுக்கும் இந்தியாவின் தொல்லைகளுக்கும் மருந்து ஒன்றுதான். அதுதான் அபேதவாதம். ஏதோ மனித தர்ம ஹிதோபதேச ரீதியில் நான் சொல்லவில்லை. பொருளாதார ஞானத்தோடும், விஞ்ஞான அறிவோடும் கூறுகிறேன். பொருளாதாரத் தத்துவத்தைவிட உயர்ந்த ஸ்தானத்தை அபேதவாதத்துக்குத் தரவேண்டும். வாழ்க்கையின் சித்தாந்தமே அதுதான். ஆகவேதான் இது என் மனதைக் கவர்ந்தது. வறுமையின் கொடுமை, வேலையில்லாத் திண்டாட்டம், இந்திய மக்களின் வீழ்ச்சி, அடிமைத்தனம் இத்தனையையும் நிவர்த்திக்க அபேதவாதத்தினால் தான் ஆகுமென்று தோன்றுகிறது. வேறு வழி தோன்ற நமது ராஜ்யத்திலும், சமூக அமைப்பிலும், புரட்சி ஏற்பட வேண்டும். நிலம், தொழிற்சாலை, இவைகள் தனியாட்களின் உரிமைகளாக இருக்கலாகாது. சமஸ்தானங்களும் தர்பார்களும் இருக்கலாகாது. அதாவது ஒரு முறையாகப் பார்க்கப்போனால், தனிமனிதர் சொத்துரிமை போக வேண்டும். தனிமனிதர் லாபமடிக்கும் நியதிகளை ஒழித்து, உன்னதமான கூட்டுறவுச் சேவாமுறைகள் தோன்ற வேண்டும்.

—பண்டித நேரு. (1936)



# தலைச்சன்
# இடைச்சன்
# கடைச்சன்

○

சி. ந. வைத்தீஸ்வரன்

முதல் குழந்தை, நடுக் குழந்தை, கடைக்குட்டிக் குழந்தை இவர்களின் மனோதத்துவங்களில் பல சிக்கல்கள் இயல்பாகவும் தாய்தந்தையரின் அறியாமையினாலும் ஏற்பட்டு குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாழாக்கி விடுகின்றன. இந்த ஆபத்தைப் போக்க பெற்றோருக்குத் தெரிந்திருக்க வேண்டும். அந்த விபரங்களைத் தெளிவாக இந்த அற்புதமான கட்டுரையில் விளக்குகிறார் குழந்தைகளின் மனோதத்துவத்தை ஆராய்ந்த அறிஞர்.

† † † † † † † † † †

தங்கவேல் தன் பெற்றோருக்கு ஒரே குழந்தை. செல்வக் குழந்தை; தவங்கிடந்து பெற்ற குழந்தை; எல்லாச் செல்வாக்கும் நிறைந்த குழந்தை. ஆனால் அவனுடன் தோழர்களாக ஓடி விளையாட வேறு குழந்தைகள் இல்லாத வீட்டில் பிறந்த குழந்தை. அவ்வாறு தோழமை கொள்ளுவதற்குத் தாத்தாவும் பாட்டியும் உண்டு; பணி ஆட்கள் உண்டு. தங்கவேல் வைத்தது சட்டம். ஆனால் ஏதுவும் தான் செய்யவிட மாட்டார்கள் தாத்தாவும் பாட்டியும். “அடே தெருவுக்குப் போகாதே, மாடு முட்டிப்போடும். வீதிக்குப் போகாதே, கல்லுக் குத்திப் போடும். தெருப் பசங்களோட விளையாடாதே. அவர்களெல்லாம் உன் பொம்மையை உடைச்சுப் போடுவார்கள். தண்ணியைத் தொடாதே. விளக்கண்டை போகாதே” என்ற பல விதமான கட்டுப்பாடுகளுடன் வளர்ந்து வருகிறான் நாலாண்டுத் தங்கவேல். ஐயோ பாவம்! தங்கவேல் தானாகவே கைகால் அலம்பிக் கொள்ளக் கூடாது. சாப்பிட்டால் கை வாய் அலம்பிக் கொள்ளக்கூடாது. தானாக ஒரு செம்பு தண்ணீரை அவன் உடல் மேல் ஊற்றிக் கொள்ளக்கூடாது. சோப்பு தேய்த்துக்கொள்ளக் கூடாது. தலைக்கு எண்ணெய் தேய்த்து வாரிக் கொள்ளக் கூடாது. இத்தனையும் மற்றவர்கள் தான் செய்து வைக்க வேண்டும், ‘வேண்டாம் நானே செய்து கொள்ளுகிறேன்’ என்று ரகளை பண்ணினாலும் இந்தப் பந்தோபஸ்துக் காவல் கைதிக்கு விமோசனம் இல்லை. இவன் மேல் விதிக்கப்பட்ட அடக்கு முறைச் சட்டங்களை அணுவளவும் பிச

காமல் நடத்திவைக்கின்ற பொறுப்பாளிகளில் சூப்ரெண்டு தாத்தா, டெபுடி சூப்ரெண்டு பாட்டி, சர்க்கிள் தகதை, சப் இன்ஸ்பெக்டர் தாய், போலீஸ் காரர் வீட்டு ஆயா, வேலைக் காரன், வண்டிக்காரன் முதலி யோர். இந்த பிரமாண்டமான அதிகாரிகளின் வசம் அகப்பட்ட தங்கவேலின் சுதந்திரதாகம் கொஞ்சம்கொஞ்சமாக மறைந்து போகிறது. ஏகபோக சக்கர வர்த்தியாக மாறிவிடுகிறான். எதையும் பிறரிடமிருந்து எதிர் பார்க்கும் மனப்பான்மையுடன் சுய சக்தியிழந்து ஒரு கொடுங் கோல் மன்னனாகி விடுகிறான். இவன் வைத்தது சட்டம். முத லில் தங்கவேல் காரியங்களையே மற்றவர் கவனித்து வரவேண் டும். பூட்டு வண்டியை என்றால் பூட்டியாக வேண்டும். எப் பொழுது எதைக் கேட்டாலும் வாங்கித் தரவேண்டும். தன்னைப் போல்உலகில்எந்தக் குழந்தையும் இல்லை என்பதே தங்கவேல் கருத்து. வயது ஐந்தாகிறது. இந்தத் தெருவில் சர்வாதிகாரம் செய்து வந்த தங்கவேலுக்கு அக்ஷராப்பியாசம் ஆகிறது. அபாரமான செலவு. தெருவே கூடிற்று. தங்கவேல் துணையுடன் பொதுப் பள்ளிக்கூடத்துக்குப் போகிறான். மற்றக் குழந்தை களையும் காண்கிறான். தான் ஒரு தனிப் பிரகிருதி என்றல் லவோ இதுவரை எண்ணி யிருந்தான்? மற்றவரில் அநே கர் தன்னைப் போல் அழகும் அறிவும், தேக வலிமையும், பேச்சு வன்மையும் படைத்தவர் கள் என்று உணருகிறான். சிலர் இவனைவிட மேம்பட்டவர்கள் என்றும் காண்கிறான். இந்தக் கண்விழிப்பு இவனைத் தாக்கி வாரிப்போடுகிறது. இதுவரை இவன் ஆக்கிரமித்துக் கொண்டு வந்திருந்த ஏக சக்கிராதிபத்தியம் ஒழிந்து தானும் ஒரு தனிப் பொதுப் பிரஜை ஆவதை உணர்கிறான். இந்தப் புதுநிலையை இவனால் தாங்க முடிவதில்லை. பழைய சார்புக் குழந்தை யாகவே (Dependant Child) இருக்க விரும்புகிறான். ஆனால் இவனை அண்டியுள்ளவர் எவரும் இவனைக் கவனிக்கவில்லை. என்ன ஆகிறது? இவன் சோம்பேறி யாகிறான், அல்லது வெட்கப்படு கின்ற பேர்வழி யாகின்றான். சில சமயங்களில் எல்லோரும் தன்னைக் கவனிக்க வேண்டு மென்ற நோக்கத்தால் சில கோணல்தனங்களைச் செய் கிறான். பாடத்லைக் கெடுக்கி றான். கோமாளிக் கூத்துக்கள் செய்து ஆசிரியர் உட்பட எல்லோருடைய கவனத்தையும் பெற முயலுகிறான். பொதுவாக செல்வமாக வளர்ந்த தங்கவேல் துஷ்டப் பையனாக மாறுகிறான். துஷ்டத்தனத்தின் நோய் வித்தை விதைத்தவன் தங்கவேலா?

மங்களத்தின் குழந்தை தியாகு. வயது ஐந்தாயிற்று. இதுவரை தாய் தந்தையர் முழு அன்பை யும் பெற்று இளங்கன்று போல் வளர்ந்து வருகிறான். ஒரு நாள் அம்மா தனி அறைக்குள் செல் கிறாள். தியாகுக்கு அங்கு இட மில்லை. "அம்மா, அப்பா" என்று மங்களம் கதறுகிறாள். மருத்து வச்சி வருகிறாள். என்னென் னமோ பேச்சு மூச்சுக்களைத் தியாகு கேட்கிறான். கொஞ்ச நேரத்தில் "குவா குவா" என்ற அழுகுரல் கேட்கிறது. தியாகுவுக் குத் தம்பிபிறந்திருக்கிறான்என்று பிறர் குதூகலத்தோடு பேசிக் கொள்ளுகிறார்கள். தியாகு வைக் கவனிப்பாரில்லை. எல்லோ

# "இதோ இவர் தான் ஆனந்த் மிஸ்ரா...

இப்போதுதான் ஆபீசிலிருந்து வீடுதிரும்புகிருர். நல்ல டீ ஒரு கோப்பை சாப்பிட விழைகிருர். ஆனல் பாவம், அது கிடைக்காது. ஏனெனில் கெட்டிலில் காய்ந்து கொண்டிருக்கும் வென்னீர் நாள் பூராவும காய்ந்து கொண்டேயிருந்தது. நல்ல தேயிலை பானத்துக்கு புதிதாகக்கொதித்த நீரே தேவை.



கோடிக்கணக்கான மக்கள் சோர்வையகற்றி புத்துணர்ச்சிபெற தேயிலை பானம் அருந்துகின்றனர். ஆனல் தேயிலை பானம் அருந்தும் பலருக்கு நல்ல டீ எப்படி செய்வதென்பது தெரியாதது வருந்தத்தக்கது. நல்ல டீ தயாரிக்க செலவு ஏதும் அதிகமில்லை. ஐந்து சுலபமான முறைகளைக் கடைப்பிடிப்பதே போதுமானது. உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் உங்கள் டீ நறுமணம் மிகுந்ததாயிருக்கவும் இம்முறைகளை உங்கள் மனதில் பதியவைத்து வீட்டிலும் சரிவர அனுசரிப்பது நலம்.

ஐந்து
சுலபமான விதிகள்!
1. எப்போதும் புதிதாக எடுத்த நல்ஜலம் புதிதாக கொதிக்கவைத்தே உபயோகிக்கவும். 2. பாத்திரத்தை உபயோகிக்குமுன்பாக கொஞ்சம் சூடாக்கவும். 3. நல்ல தேயிலையை ஒவ்வொருவருக்கு ஒரு தேக்கரண்டி வீதமும் பாத்திரத்துக்கு ஒரு கரண்டியுமாகப் போடவும். 4. கொதி நீரில் தேயிலை சமார் 3 முதல் 5 நிமிஷங்களுக்கு ஊறட்டும். 5. கோப்பையில் கஷாயம் எடுத்துக்கொண்டு பால் சேர்த்துக் கொள்க.

"தேயிலைப்பானம் - லெ யோசனைகள்" என்னும் இலவச புத்தகம் ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி, உருது, தமிழ்பாஷைகளில் கிடைக்கும். விண்ணப்பிக்குமிடம்: கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101, நேதாஜி சுபாஷ் ரோட், த. பெ. நெ. 2172, கல்கத்தா.



நன்கு தயாரித்த

டீ

டீயைப்போன்றது வேறேதுவுமில்லை.

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.




# லிப்டன்ஸ்

## என்றல்

## முதல்தரமான டீ

LTX-152 TM.

ருடைய கவனமும் பிறந்த குழந்தையிடம்தான். இனி, "நமக்கு இதுவரை இருந்த தனி அரசைத் துறந்தோம்" என்று தியாகு மனச் சோர்வு அடைகிறான். இதன் காரணமாக எல்லா விஷயங்களிலும் வீம்பு பண்ணுகிறான். முரடனாகிறான். இதுவரை இல்லாத சில துர்ப்பழக்கங்களைத்தானே வருவித்துக் கொள்கிறான். படுக்கையில் மூத்திரம் பெய்தும் கெடுத்துக் கொள்கிறான். காரணம் என்ன? இதுவரைத் தனக்கிருந்த பாதுகாப்பை இழந்ததாக எண்ணுகிறான். தாயார் தன்னை ஏமாற்றிக் கைவிட்டுவிட்டாள் என நம்புகிறான். இவன் எண்ணுவது தவறு அன்று. ஒரு வகையில் முன் போல் மங்களம் இவனைக் கவனிக்க முடிவதில்லை என்பது உண்மை தான். ஆனால் தியாகுவை எப்படி வசப்படுத்துவது? தாயார் தியாகுவிடம் அன்போடே பேச வேண்டும். தம்பி பிறப்பதற்கு முன்பாகவே "தியாகு, உனக்கொரு தம்பி அல்லது தங்கச்சி பிறக்கப் போகிறது தெரியுமா? அப்பொழுது நீ தான் அண்ணன். உன்னுடைய உதவி வேண்டும். அவனுக்கு நீ தான் எல்லாம் சொல்லிக் கொடுக்கவேண்டும்" என்றெல்லாம் தாய் அன்புடன் கலந்து சொல்ல வேண்டும். தியாகு 'தம்பி எப்படிப் பிறப்பானம்மா?' என்று அநேகமாகக் கேட்பான். அப்பொழுது பொய்யோ போலிக்கதையோ சொல்வது நலம் அல்ல. "தவிட்டுக்கு வாங்குவேன். அல்லது காக்காய் குருவி கொண்டு வந்து கொடுக்கும்" என்பவை யெல்லாம் மனக் கோளாறுகளுக்கு இடம் கொடுக்கும் என்கின்றனர் உள இயல் ஞானிகள்.

"பிறகு சின்னஞ் சிறு சிசுவுக்கு என்ன சொல்லுகிறது, எப்படிச் சொல்லுகிறது?" என்று கேட்கலாம். ஆம். சிறு குழந்தைதான். எனினும் தாயின் உடலில் மாறுதல் ஏற்படுவதைத் தியாகு கவனித்துத்தான் வருகிறான். பல முறை அம்மா படுத்திருக்கும்போது அம்மா வயிற்றின் மேல் ஏறி நின்று பார்ப்பான். வேடிக்கையாகக் காலால் உதைப்பான், தெரியாமல். அப்பொழுது "தியாகு உதைக்காதே உள்ளே தம்பி வளர்ந்து வருகிறான்" என்று ஆரம்பித்துப் பேசினால் தியாகு புரிந்துகொள்வான். அவன் உணர்ச்சியோடும் உற்சாகத்தோடும் கேட்ட அளவுக்குப் பதில் சொன்னால் போதும். ஏதோ கொச்சையாகவும் கேவலமாகவும் பதில் சொல்ல வேண்டியிருக்குமே என்று பயப்படுவதெல்லாம் முயற்சி செய்த தாய்மார்கள் தம் அனுபவத்தில் அஸ்திவாரமற்ற பயங்கள் என்று அறிவார்கள். சமீபத்தில் ஒரு தாய் பிரசவிப்பதற்கு முன் இம்மாதிரி தன் மூவாண்டு மகளுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள். 'அதைக் கேட்ட குழந்தை "அம்மா அம்மா, பாப்பாவை உன் வயிற்றிலிருந்து எடுத்து என் மடிமேலே வையேன். கொஞ்ச நேரம் வச்சிருந்து கொடுத்துடறேன். உன் வயித்துக்குள்ளே வச்சுக்கோ" என்றாள். தாயார் உள இயல் அறிந்தவள். "பொறு பொறு. இன்னும் சில நாட்களில் குழந்தையை உன் மடிமேல் வைக்கக் கொடுக்கிறேன்" என்றாள். குழந்தைக்கு அப்பொழுதே பிறக்கப போகிற தங்கை மேல் அன்பு ஊட்டிவிட்டாள். இன்று குழந்தை பிறந்திருக்கிறது. தங்கச்சி மேல் அக்காளுக்கு இருக்

கும் ஆசையையும் பொறுமையையும் பார்த்தவர்களே உணருவார்கள். பாப்பா பிறப்பதற்கு முன் அக்காள் பிடிவாதக்காரி. தாயாரில்லாமல் ஒன்றும் நடவாது. இப்பொழுது தாயாருக்கு அவள் சிற்றாள் ஆகித் தங்கச்சிக்குச் சிறு பணிவிடை செய்து வருகிறாள். தங்கச்சியுடன் போட்டியில்லை. மற்றவர்கள் தங்கச்சிக்கு ஒரு தீங்கும் செய்யக்கூடாது. பெரிய பொறுப்பாளி ஆகிவிட்டாள் இந்தக் குட்டி அக்காக்காரி. சிறு வயதில் தாயன்புச் சிம்மாசனத்தைத் திடீரென்று இழந்த குழந்தைகளில் வளர வளர வெட்கம் அதிகரிக்கும். புது மாறுதல்களைக் கண்டு அளவுக்குமீறி அஞ்சுவார்கள். பழைய பழக்கங்களை எளிதில் விடமாட்டார்கள். இது தலைச்சன் குழந்தையின்போக்கு.

ராதாவுக்கு இரண்டு குழந்தைகள். தலைச்சன் ரங்கராஜுக்கு வயது ஏழு. இரண்டாவது மூர்த்தி. இவனுக்கு வயது நான்கு. ரங்கராஜு அம்மாவின் முழு அன்பையும் கவர்ந்திருக்கிறான். ஏனென்றால் ராதாவின் போக்கு ரங்கராஜின் குழந்தை மனதில் தந்தையைவிட அதிகமாகப் பதிந்துவிட்டது. மூர்த்திக்கு ராதாமேல் அன்பில்லாமலில்லை. எனினும் தனக்கே தனக்கென்று தனியான அன்பைப்பெற விரும்புகிறான். அம்மாவுக்குப் பதிலாக அப்பாமேல் முழு அன்பையும் காட்டுகிறான். இந்தத் தேர்ச்சி எளிதானதல்ல. ஒருபுறம் தாயின் மேல் உள்ள அன்பை மறைக்கக்கூட வேண்டியிருக்கிறது மூர்த்திக்கு. ஏன்? அண்ணன் விரும்பியதையேதம்பியும்விரும்புவதா என்ற எண்ணத்தால். ஆதலால் அண்ணன் தம்பிகள் வெவ்வேறு குணங்களை வளர்ப்பார்கள். ஒருவன் எஞ்சினீர் ஆகும் அறிகுறிகளைக் காட்டினால் மற்றவன் கலைவாணனாகும் அறிகுறிகளைக் காட்டலாம். இந்த நிலையில் ராதாவுக்கு மூன்றாம் குழந்தை பிறக்கிறது. மூர்த்திக்கு என்னவென்றே புரியவில்லை. மூர்த்தி தம்பியைக் கண்டு தயங்குகிறான், அஞ்சுகிறான். ராதாவின் அன்பைத் தம்பி பெற்றுவிடுகிறானே என்று திகைக்கிறான். இத்தகைய குழந்தையை உள இயலார், "இடைச்சன்" (Sandwiched Child) என்கின்றனர். இந்த இடைச்சன் குழந்தைக்குத் தனித் தைரியம் அளிக்கவேண்டும். அவனுடைய விசேஷ மனப் போக்குகளை உணர்ந்து கூடுமானவரை அவனுக்கு ஊக்கம் தரவேண்டும். திரஸ்கரிக்கப் பட்டவன் என்று இவன் எண்ணாதவாறு பெரியவர்கள் நடந்துகொள்ள வேண்டும். இவன் இடைச்சன் என்று சோர்வடையாமல் தானும் குடும்பத்தில் உள்ள மற்றவர்களைப்போல் சம உரிமை பெற்றுள்ளவன் என்றும் அவன் திருப்தியடையும்படி மற்றவர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

கடைச்சனிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்ற பொறுப்பு, பெற்றோர் அண்ணன்மார், அக்காமார்களுக்கும் உண்டு. ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் செய்தல் வேண்டும். சில சமயங்களில் இடைச்சனுக்கும் கடைச்சனுக்கும் இடையே பல ஆண்டுகள் கழிந்திருக்கலாம். அந்த நிலையில் கடைக் குட்டி வளர்ச்சியிலும் மனோபாவத்திலும் தங்கவேலைப் போன்ற செல்வக் குழந்தையை ஒத்திருக்கிறான். இத்தகைய

கடைக் குட்டியின் மூத்த அண்ணன்மார் மாமாவையும் சிற்றப்பனையும் போலிருக்கிறார்களே ஒழிய அண்ணன்மார்களாகத் தோன்றுவதில்லை. சில சமயங்களில் இடைவெளி வருஷங்கள் அதிகம் இராவிடில் இவன் சில தனிப்பட்ட குணாதிசயங்களைக் காட்டுகிறான். பெரிய புரட்சிக்காரனாகத் தோன்றுகிறான். வழி மாறிச் செல்பவன் போல் தோன்றுகிறான். தலைச்சன் நல்ல பாதுகாத்த பூங்கொடிபோல் வளர்ந்து வந்தான். கடைச்சனோ என்றால் இதற்கு நேர்மாறாகத் தனக்குத்தானே எஜமானாக வளர்ந்து எல்லோருடனும் சண்டை போடும் வம்பனாக மாறுவான். கோணல் குணங்களை அனுசரிக்கலாம். கோமாளித்தனம் செய்யலாம். திருட்டுப் புரட்டுகளும் செய்யலாம். குடும்பத்தில் மற்றவர்களைவிட இவன் மெலிந்தவன் என எண்ணுவதால் அதற்குப் பரிகாரம் தேடுகிறான். எப்படி? வேண்டியதை அபகரிப்பதில் இந்தக் கடைக்குட்டிக்கு விமோசனம் இல்லையா? "உண்டு" என்கின்றனர் மனோதத்துவ அறிஞர். "உண்மையான தைரியத்தைக் கொடுங்கள். எல்லோரினும்சிறிய குழந்தையாதலால் அதற்குச் சரிப்படுத்த வேண்டிய சலுகைகளைக் கொடுங்கள். தனி சுதந்திரத்தைஅவனுக்கு அளியுங்கள். பெரியவர்கள் அவனை அடக்கி ஒடுக்குவதை நிறுத்துங்கள். கடைக் குட்டி ஒரு விளையாட்டு பொம்மை என்று எல்லோரும் கொஞ்சிக் கூத்தாடிக் குட்டிச்சுவராக்காமல் குழந்தைக்குச் சுய நம்பிக்கையும் ஒத்துழைப்பும் வளரச் செய்யுங்கள்" என்கின்றனர் அறிஞர் பலர்.

"எல்லாக் குழந்தைகளும் எனக்கு ஒன்றுதான்" என்று தாய் தந்தையர் சொல்லிக்கொண்டு சரிசமமாக நடந்துகொள்ளுவது உத்தமத் தாயன்பா, தந்தையன்பா என்று நாமே சிந்தனை செய்யவேண்டியிருக்கிறது. தலைச்சன், இடைச்சன், கடைச்சன் என்று அந்தந்த ஸ்தானத்தில் உள்ள குழந்தைகளை அதததற்கு உரியவாறு தாய் தந்தையர் நடத்தை என்னவென்றும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

குழந்தை உடல் வன்மையில் குன்றியவனாயிருந்தால் இதற்குப் பரிகாரம் வேறொன்றில் தேடுவான். விசேஷ மனோசக்திகளை வளர்க்கலாம். அல்லது சித்திரக்கலையில் மேம்படலாம். குழந்தைக்குப் பூனைக்கண் இருக்கலாம். அல்லது மயிர் சுருட்டையாய் இருக்கலாம், கறுப்பாயிருக்கலாம், ஆறுவது விரலைப் பெற்றிருக்கலாம். இன்னும் இவை போல் அற்ப சொற்பமான குறைகளைப் பெற்றிருந்தாலும் குழந்தையின் முன் இவற்றை எடுத்துக் காட்டி கேவலப்படுத்தக்கூடாது. குழந்தைமை உள்ளம் மெழுகொத்தது. நம் இகழ்ச்சி மொழிகள் நன்கு பதிந்து வருங்கால மனக்கோளாறுகளுக்கு அடிகோலிகளாகின்றன. குழந்தை உள்ளொளி மங்காதிருத்தற்கு பெரியோர் அளிக்கும் ஊக்கமே நல்ல நெய்யாகும் என்கின்றனர் உள் ஒளி அறிஞர்.

*

# பெண்டாட்டி தாசர்கள்

'ஆண்மகன்'

ஆண் - பெண் சமத்துவத்தைப் பற்றிப் பிரஸ்தாபம் எழாத காலத்திலிருந்தே பெண்ணுக்கு ஆண் அடங்கி நடக்கும் விசித்திரமான ஒரு வழக்கமும் இருந்து வந்திருக்கிறது. இப்படி அடங்கி நடக்கும் பெண்டாட்டி தாசனை ஹென்பெக்டு (Henpecked) என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். 'பெண்டாட்டிக்குப் பயப்படுவது கேவலமாச்சே; இதிலிருந்து தப்பவும் வழி இல்லையே!' என்று தவிக்கும் பெண்டாட்டி தாசர்கள் ஒரு பக்கம் இருக்க, தன் காதுக்குக் கேட்கும் படியாகவே தன் மனைவி பக்கத்து வீட்டுக்காரியிடம், 'எங்காத்துக்காரர் சுத்த ஹென் பெக்டுன்னு!' என்று சொல்லுவதை மறைமுகமாக நின்று கேட்டு ரசிக்கும் ஆண்சிங்கங்களும் உண்டு. ஆனால் மனக் கவலை கொண்ட பெண்டாட்டி தாசர்களுக்கு ஆறுதல் அளிக்கும் சில விஷயங்களை டாக்டர் என். ஜே. பெரில் என்ற பிராணி சாஸ்திரப் பேராசிரியர் தெரிவிக்கிறார். அவர் கூறுவதாவது:

போபின் என்ற மீன் இனத்தில் பெண்மீன் யாதொரு கவலையும் இல்லாமல் 'ஹாய்'யாக ஊர் சுற்றப் போய்விடும். அப்போது ஆண் மீன்தான் அவற்றின் கூட்டைப் பாதுகாத்து வீட்டுக் காரியங்களை செய்ய வேண்டும். இதையும்விடக் கேவலமாக வேறொரு புதுமை இருக்கிறது. இந்து மகா சமுத்திரத்திலும் பஸிபிக் மகாசமுத்திரத்திலும் ஒரு வகைச் சிறுமீன் இருக்கிறது. அதில் பெண் மீன் ஒரு நூல் போன்ற நாரில் முட்டையிட்டு அதை ஆண்மீனுடைய முகத்தில் அருத்திக் கொண்டிருக்கும் ஒரு எலும்பில் கோத்துவிடும். குஞ்சு பொரிக்குமட்டும் ஆண் இந்த முட்டைகளைக் கோத்துக் கொண்டே அலைய வேண்டும். குஞ்சு பொரித்தபின்தான் ஆண் மீனுக்கு விமோசனமும் சுய மரியாதையும் கிட்டும். ஐரோப்பாவில் உள்ள தவளைகள் சமாச்சாரம் இன்னும் ருசிகரமானது. பெண் தவளையின் முட்டைகள் சங்கிலிமாதிரி கோக்கப் பட்டிருக்கும். அதை வாங்கி ஆண் தவளை தன்னுடைய காலிலும் தொடையிலும் சுற்றிக்கொள்ளும். பிறகு ஒரு வளைக்குள் போய் உட்கார்ந்து அடைகாக்கும். குஞ்சு வெளிப்பட்ட பிறகுதான் ஆண் தவளையின் மருத்துவச்சி உத்தியோகம் தீரும். எல்லாவற்றையும்விடப் பரிதாபகரமானது பூனைமீன் என்ற மீனின் இம்சை. பெண் மீனுடைய முட்டைகளை ஆண் மீன் வாயில் ஒதுக்கிக் கொள்ளும். முட்டை குஞ்சு ஆகமாதக் கணக்கில் செல்லும். குஞ்சு பொரிக்கு மட்டும் ஆண் மீனுக்கு உண்ணாவிரதம் தான். ஒன்றும் சாப்பிட முடியாது.

இயற்கையிலே இப்படி எல்லாம் மோசமாக இருக்கும்போது மனித வர்க்கத்தில் உள்ள பெண்டாட்டி தாசர்கள் 'சம்சாரங்களுக்கு அடிமையாகி விட்டோமே' என்று வருந்த வேண்டாம் அல்லவா? தாராளமாக நானும் ஆண் மகன் என்று நெஞ்சை நிமிர்த்தி மீசை யிருந்தால் மீசையையும் முறுக்கி நடக்கலாம்.

பெண்டாட்டிக்குப் பயப்படுவதை இனி கேவலமாக கருதவேண்டாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது கட்டுரையைப் படித்தால்!

# வருகிறார்கள் போகிறார்கள்

ல. சண்முகசுந்தரம்

வாழையடி வாழையான மனித பரம்பரையிலே, ஆற்றுச் சுழிகளைப்போலவும் வீதித் திருப்பங்களைப் போலவும், இடை இடையே அற்புத புருஷர்களும் பிறந்து விடுகிறார்கள். அவர்களும் 'மற்றவர்களைப் போலத்தான் ஆரவாரமில்லாமலும் அமைதியைக் குலைக்காமலும் பிறந்தார்கள்; வளர்ந்தார்கள். அப்படி வாழ்ந்த அவர்களுடைய வாழ்க்கைதான் அந்த நிகழ்கால சமூகத்தின் லட்சிய விளக்காகவும், எதிர்கால சமூகம் ஒவ்வொரு நாளும் திரும்பிப் பார்த்து முன்னேறி வருவதற்காக வைத்துக் கொண்ட விளக்கொளியாகவும் விளங்கிக்கொண்டிருக்கிறது.

இந்த இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய உலகத்திற்குத் தலைமை வகிக்கும் புதுமைப் பித்தன் முன்னேற்றத்துக்கு வழி காட்டும் விளக்கொளியாகப் பிரகாசிக்கிறார். இன்றைய சிறு கதை உலகத்தின் பேரரசனாகவும் நந்தா விளக்காகவும் விளங்கிவந்த அவருக்கு, மரணம் சம்பவித்துவிட்டது. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னாலேயே ஒருவாறு எதிர்பார்த்த விஷயமானாலும், அதை நினைக்க நினைக்க வருத்தமாகவும் பயமாகவும் இருக்கிறது. உலகத்திலுள்ள தலைசிறந்த இலக்கியங்களைக் கற்றறிந்ததோடு, இந்தஉலகத்திலுள்ள மக்கள் சமுதாயத்தின், ஒவ்வொரு சமூகத்தையும், ஒவ்வொரு மனித இயல்பையும் கூறு கூறாகப் பகுத்து உணர்ந்தவர் புதுமைப்பித்தன். ஏதோ ஒன்றினுடைய சுருக்கா முடிக் கண்ணியிலே தன் கழுத்தையும் கையையும் அடைக்கலமாகக் கொடுத்துவிட்டு, முன்னேற்றம், வளர்ச்சி என்கின்ற விளக்கடி நிழலிலே ஒவ்வொரு ஜீவனும் ஆடவேண்டிய வாலாயக் கும்மிக்குச் சாதனங்களாக எடுத்துக்கொண்ட வஞ்சகம், சூது, சுயநலம் முதலிய முயற்சிகள், அவற்றினடியாகப் பிறந்த ஆசை, துயரம், ஏமாற்றம், மகிழ்ச்சி முதலிய குணாகுணப் போட்டிகள் ஆகிய இப்பேர்ப்பட்ட துர்காற்றம் வீசும் சிமூடம்பிலே மடிப்புக் குலையாமல் கட்டப்பட்ட 'மடிதார் வேட்டி, முருங்கைக்காய்ப் பூச்சு, தேவார பாராயணம் போன்ற வர்ண பேத வேஷங் கொண்ட சமூகத்தை, அதனுடைய இயக்கங்களை, மாறுபாடுகளை, வளைவு நெளிவுகளை எல்லாவற்றையுமே குறைவில்லாமல் அறிந்து கொண்டவர் புதுமைப் பித்தன். தாம் அறிந்துகொண்ட ஒவ்வொரு விஷயத்தையும், அதாவது அவை எவ்வளவு தெளிவற்ற உருத்தெரியாத கடினமான விஷயங்களாயிருந்தாலும், பக்குவமாகவும் நயமாகவும் தோண்டி எடுத்துச் சிறு கதையாய், இலக்கியமாய், செய்து கொடுத்து விடுவார். அதுமாத்திரமல்ல; காலம் என்பது என்ன? கடவுளுக்கும்

உலகத்தில் மேதைகள் வருவதும் போவதும் போல புதுமைப்பித்தனும் வந்தார்; போகவும் செய்துவிட்டார். ஆனால் ஒரு வழியில் அவர் சிரஞ்சீவியாக நம்மிடையே நிலைத்து விட்டார். அதன் ரகசியம் என்ன?

இந்தப் பிரபஞ்சத்தில் வாழும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு எவ்வளவு தூரம்? அது எவ்வளவு தூரம் நிலைத்து நிற்கும்? மரணத்தின் தன்மை எப்பேர்ப் பட்டது? சத்தியத்திற்கு எவ்வளவு தூரம் இந்த உலகத்தில் பலம் இருக்கிறது? அது எதற்கெல்லாம் எந்தெந்த வகையில் பயன்படுகிறது?—என்பன போன்ற புதிர்களை எல்லாம் விளக்கிக் காட்டுவதும் அவருடைய சிறு கதைகள்தான். சமுத்திரத்தின் அடி ஆழத்திலே தன்னை மறந்து படுத்துறங்கும் சிப்பிகளினுடைய அடிவயிற்றில், ஒன்றின்மீது ஒன்ருகப் படிந்து கிடக்கும் வரிப் பின்னல்களைப் போல, மனித மனத்தின் அடித் தளத்திலே ஒன்ருேடொன்று பின்னிப்பிணைந்து படுத்துறங்கும் உணர்ச்சிப் பின்னல்களை எல்லாம், அதாவது நோயின் காரணமாகப் பலஹீனம் அடைந்து தாயின் தோள்ப் பட்டையிலே படுத்துறங்கும் சிறு குழந்தை, யாரோ வந்து தன் முதுகுப் புறத்தில் தட்டின உடனே விழித்துக்கொண்டு தலையைத் தூக்கிப் பார்த்துவிட்டு மறுபடியும் கண்ணை மூடிக்கொண்டு அதே தோள்ப் பட்டையில் படுத் துறங்குவதைப்போல, சமூக இயக்கத்தின் பல்வேறு அசைப்புக்களால், சந்தர்ப்ப வசமாக எழுந்து வந்து வெளியே தலையை நீட்டி மறுபடியும் உள்வாங்கிக் கொண்டு தன்னுடைய ஸ்தானத்திலே ஐக்கியம் ஆகிவிடுகின்ற அந்த உணர்ச்சிப் பின்னல்களை எல்லாம், வெகு லாகவமாகப் பிரித்துப் பிரித்துச் சிக்கெடுத்து, அவற்றினுடைய இயக்கங்களை எல்லாம் காட்டி விடுவார். அப்படியாக ஒரு உணர்ச்சியை வெளிப்படுத்தி விட்டுப் பிறிதோர் உணர்ச்சியை இழுத்துக் கொள்வது—அதாவது ஒன்றினுடைய ஆட்டத்தை எவ்வளவு தூரம் காட்ட வேண்டுமோ அவ்வளவு தூரம் காட்டிவிட்டு, மற்ருேர் ஆட்டத்திற்கு அப்படியே வேஷத்தை மாற்றிக் கொண்டு தாவிவிடுகின்ற இந்த அசகாய சூரத்தனங்கள் எல்லாம், கம்பனிடத்தில் உண்டு; புதுமைப்பித்தனிடத்திலும் உண்டு.

ஒரு பிரச்னையை எடுத்துக் கொண்டு அதற்கு வேண்டிய சூழ்நிலைகளை எல்லாம், தன் கற்பனு சக்தியில் பிறந்து வந்த வர்ணனை மூலமாகச் சாரங்கட்டி எந்தவிதமாகக் கம்பன் விஷயத்திற்கு இறங்கி வருவானே, அந்த விதமாகத்தான் புதுமைப்பித்தனும் முதலிலே சாரத்தைக் கட்டி விட்டு, பிறகு அந்தச் சாரம் என்கின்ற அலங்கார மேடையிலிருந்து விஷயமாகிய உள்ளோட்டத்திற்கு இறங்கி வருவார். அந்தவிதமாக அவர் இறங்கி வருகின்ற கம்பீரப் போக்கிற்குத் தற்காலத்தில் வேறு உவமையே சொல்ல முடியாது.

ராஜரத்தினம் பிள்ளையினுடைய நாத சுரத்திலே கணத்திற்குக் கணம் நிமிஷத்திற்கு நிமிஷம் மேலும் மேலும் அழுத்தம்பெற்று மேலேறும் ராக சஞ்சாரத்தைத்தான் புதுமைப்பித்தனுடைய இலக்கிய கதிக்கு உவமையாகச் சொல்ல முடியும். இப்படியாகச் சூழ்நிலையைச் சாரங்கட்டி அதன்மூலமாக எந்த விஷயத்தை, எந்த தத்துவத்தை உணர்த்தவேண்டி இருக்கிறதோ, அந்த விஷயத்தை,தத்துவத்தை இடைவெளி இல்லாத ஊடுபாய்ச்சலாக விட்டு, வருணித்துக் காட்டிய சூழ்நிலைகளை

எல்லாம் உண்மையான பண்போடும், மரபோடும் தத்ரூபமாகப் பிடித்துக் காட்டுவதை, நம் புதுமைப்பித்தன் கதைகளில்தான் பார்க்கமுடியும். புதுமைப்பித்தன் தம் அசுரசாதனைகளிலே வெற்றிபெற்றதன் காரணம் இதுதான் : ஒரு விஷயத்தை எடுத்துக் கூறும் பதம், பிரயோகங்கள் எல்லாம் உணர்ச்சி வேகத்தின், விஷயத் தத்துவத்தின் உண்மைப் பிரதிநிதிகளான அடையாள ரகசியங்கள் என்று அறிந்துகொண்ட மேதைத்தன்மைதான் அது. இந்த மேதைத்தன்மையின் பல்வேறு கிளைப்புகளிலே சென்று சென்று வெற்றி கண்டவர் நம் புதுமைப்பித்தன். உதாரணமாக, பாவநாசத்து மலைகளிலே ஓங்கி வளர்ந்துள்ள மரங்களைப் பற்றிக் கூற வேண்டுமானால், "...விக்கிரமசிங்கபுரம் தாண்டிய பிறகுதான், நாணிக் குழைந்து வளர்ந்த இந்த மரங்கள், தங்கள் குலப் பெருமைகளைக் காட்ட ஆரம்பிக்கின்றன ......" என்றுதான் அவர் கூறுவார்.

"...அஸ்தமன சூர்யன் ஒளியே எப்பொழுதும் ஒரு சோக நாடகம். கோவில் சிகரங்களிலும் மாளிகைக் கலசங்களிலும் தாக்கிக் கண்களைப் பறிப்பது மட்டுமல்லாமல், கடற்கரையில் கரும்பாறையில் நிற்கும் துவஜஸ்தம்பத்தின்மீது; கீழ்த்திசை நோக்கிப் பாயும் பாவனையில் அமைக்கப்பட்ட பொன் மூலாம் பூசிய வெண்கலப் புலியின் முதுகிலும் வாலிலும் பிரதிபலிப்பது அவ்விடத்திற்கே ஒரு மயக்கத்தைக் கொடுத்தது......"

இந்த வர்ணனைப் பகுதி, இதனை உள்ளடக்கி உள்ள "சிற்பியின் நரகம்" என்னும் கதைக்கு எத்தனை வகைகளில் உதவி செய்கிறது, எத்தனை கோணங்களிலிருந்து அந்தரங்கத் துடிப்புகளைப் பிரதிபலிக்கிறது என்பதைப் படித்துப் பார்த்தால் தெரியவரும்.

இப்படி அடக்கி அமைக்கப்பட்ட ஒவ்வொரு வார்த்தைகளும், ஆயிரக்கணக்கான பிரதேச வேறுபாடுகளையும், பலவகைப்பட்ட மனித இயல்புகளையும் சுருட்டி மடக்கித் தன் கக்கத்திலே வைத்துக்கொண்டு, பிரசவ வேதனையின் துடி துடிப்போடு வாக்கியக் கோவையிலே நெளிந்து நெளிந்து சுழித்து விளையாடும்.

இப்படி எல்லாம் நாலைந்து வரிகளுக்குள் அகண்டாகாரமான தத்துவங்களை எல்லாம் புதுமைப்பித்தன் ஒருவரால்தான் வெளிக்காட்ட முடியும். அதன் முக்கியமான திருமூல ரகசியம், புதுமைப்பித்தன் தமிழ் நாட்டின் பண்புகளை, மரபுகளை, சரிவரக் குறைபாடில்லாமல் தெரிந்திருந்ததுதான். அப்படித் தெரிந்திருந்த காரணத்தினால்தான் தமிழ் நாட்டில் எந்த மூலையிலுள்ள பாத்திரத்தை எடுத்துக்கொண்டாலும், அந்தப் பாத்திரம் எந்தக் காலத்திற்கு உரியதாக இருந்தாலும், அவருடைய கதைகளிலே வரும்பொழுது தன் வேரோடும் வேரடி மண்ணோடும் கிளம்பி தன் சொந்த மரபை, தமிழ்ப் பண்பின் ரகசியமான உண்மைகளை இணைத்துக் கொண்டு வெளியே வருகின்றது. கம்பனுடைய சிறப்புக்களில் பலவற்றைப் புதுமைப்பித்தனிடத்தில் காண்பதனால்தானோ என்னவோ இரண்டு வருடங்களுக்குமுன் என் இலக்கிய நண்பர் ஒருவரைச்

சந்தித்து நான் பேசிக்கொண்டிருக்கும்பொழுது "புதுமைப் பித்தன் எண்ணூறு வருடங்களுக்குமுன் பிறந்திருந்தால் ராமாயணத்தைப் பாடி இருப்பார். கம்பர் இப்பொழுது பிறந்திருந்தால் புதுமைப் பித்தனைப் போலப் பல சிறுகதைகளை எழுதி இருப்பார்" என்றுகூடக் கூறினார்.

அவர் எழுதிய சுமார் நூறு கதைகளும் உலகத்தில் இலக்கியத்திற்கு மதிப்பு இருக்கிறவரையிலும் நிலைத்து நிற்கும் என்பதிலோ, இலக்கிய வரிசையின் நடுநாயகமாய் திசைகாட்டி வழிகாட்டிக்கொண்டிருக்கும் என்பதிலோ, சந்தேகமே கிடையாது. அவர் இலக்கியங்களைப் பற்றியும் ஒரு சிறு விமரிசன நூல் எழுதியிருக்கிறார். அதிலே இலக்கியத்தின், கலையின், உண்மையான இயல்புகளையெல்லாம் விளக்கிக் காட்டிவிட்டு தமிழ் இலக்கியத்தின் தாதரங்களையெல்லாம் விளக்கிக் காட்டுகிறார். பல நாட்டு இலக்கியங்களிலிருந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்து தம் சொந்த சிருஷ்டியாக ஒரு கோவைப்படுத்திக் காட்டுபவர்களின் ஆசாரக் களவுகளை எல்லாம் ஊரம்பலத்திலே நிறுத்தி விசாரணை செய்துள்ளார். இப்படியாக இவர் எழுதியுள்ள எல்லா எழுத்துக்களையும் ஒன்று சேர்த்து ஒரு புத்தகமாக வெளியிட வேண்டும். அது அவருடைய இலக்கியத் தொண்டின் பெருமையையும் பரிசுத்தத்தன்மையையும் எல்லோரும் அறிந்துகொள்ள வழி செய்யும். ஏதாவது ஒரு இடத்தில் பல ஆண்டுகட்கு ஒருமுறையாக இப்பேர்ப்பட்ட மகா புருஷர்களும் வருகிறார்கள்; போகிறார்கள். ஆனால் அவர்களுடைய சாதனைகளும் சிருஷ்டிகளும் சிரஞ்சிவிகளாக இருந்து உதவுகின்றன. புதுமைப் பித்தனுடைய சிருஷ்டிகள்தான் இன்று அவருடைய மரணத்தை நினைத்து வருந்தும் நமக்கு ஆறுதல் அளிக்கின்றன.

*

## கம்யூனிசம்

கம்யூனிஸத்தின் உள்ளே அடங்கியுள்ள நம்பிக்கை நன்று; அது மலைகளைப்போல புராதனகாலத்திலிருந்து இருந்து வரும் நம்பிக்கையாகும்.

லெனினைப்போன்ற மகாத்மாக்களின் தியாகங்களால் புனிதமடைந்த ஒரு கொள்கை வீணாகப் போய்விடாது.

—மகாத்மா காந்தி

## மெஜாரிடி

எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறோம் என்பதை நினைத்துச் சந்தோஷப்படுகிறவர்கள் பயந்தாங்கொள்ளிகள் தான்.

மெஜாரிடியினரின் செயல் மைனாரிடிகளைக் கட்டுப்படுத்தும் என நம்புவது மூட நம்பிக்கையும், யோக்கியமற்றதுமாகும்.

—மகாத்மா காந்தி



# மசாலா தோசை சாப்பிட்டிருக்கிறீர்களா—

# டால்டாவினுல் தயாரித்தது?

6 மணிநேரம் தண்ணீரில் ஊற வைத்து $1\frac{1}{2}$ கரண்டி அரிசியும் $\frac{1}{2}$ கரண்டி உளுத்தம்பருப்பும் வெவ்வேருக நன்ருக அரைத்துக்கொள்ளவும். இரண்டு மாவுகளையும் சேர்த்து ருசிக்குத்தகுந்தபடி உப்பை போட்டு 12 மணி நேரம்வைத்திருக்கவும். பிறகு ஜலம் ஊற்றி 10 நிமிடங்கள் நன்ருய் கலந்து சுமாருக கெட்டியாகவும் ஒரே மாதிரி இறுக்கமுள்ளதாயும் செய்துகொள்ளவும்.

சூடான தோசைக்கல்லில் டால்டாவைப்பூசி, ஒரு கரண்டி கலந்த மாவை ஊற்றி, கரண்டியின் பின்புறத்தால் வட்டமாக பரத்தவும். சிறிது டால்டாவை தோசையின் விளிம்பைசுற்றி விடவும். பக்குவமானதும், மறுபக்கம்திருப்பி வேகவைக்கவும். பிறகு மசாலா சேர்த்த உருளைக்கிழங்கு பொடியை மத்தியில்போட்டு தோசையை மடிக்கவும். தோசையை சூடாக சாப்பிடுங்கள்!

பச்சை உணவுகள் சமைத்த உணவுகளைவிட மேலானவையா?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே — அல்லது என்று வேண்டுமானுலும் — எழுதுங்கள்!

**தி டால்டா அட்வைஸரி சர்வீஸ்**

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1




HVM. 78-50 TM

# உங்கள் ஊரில்

'சக்தி' தவருது கிடைக்கிறதா? அப்படிக் கிடைக்கவில்லையானுல் தயவு செய்து கீழ்க் கண்ட மனுவைப் பூர்த்தி செய்தனுப்புங்கள். 'சக்தி' தவருது கிடைக்கும்.

ஊர்..................................

தேதி..................................

சக்தி காரியாலயம்
சென்னை—14.

சக்தி மாத வெளியீட்டிற்கு என்னை சந்தாதாரராகச் சேர்த்துக்கொள்ள வேண்டியது ஒரு வருஷத்திற்குரிய / இரண்டு வருஷத்திற்குரிய சந்தாத்தொகை ரூ. ஆறு / பதினென்று மணியார்டரில் / போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பியிருக்கிறேன்.

தங்கள்,

பெயர் (தெளிவாக)..................................

தெரு..................................

ஊர்ப்பெயர்..................................

ஜில்லா..................................

மண் வெட்டியைத் தோளில் போட்டுக்கொண்டு போய், நாகமுத்து செத்துக்கிடந்த தன் மாட்டைப் பார்த்தான். அவன் கண்களில் நீர் கலங்கிற்று. அவன் தனக்கு உதயமான ஞானத்தையும் மெதுவாக மெல்லிய குரலில் வெளியிட்டான்....

# தண்ணீர் பாம்பு 



# நல்லபாம்பாயிற்று

"நவநக்கீரன்"

வயலிலிருந்து வியர்க்க விறுவிறுக்க வேகமாக ஓடி வந்தான் நாகமுத்து. "ஐயோ! என் உழவு மாட்டை நல்லபாம்பு கடித்து சாகடித்து விட்டது!" என்று அவன் என்னைக் கண்டவுடன் அலறினான். அவனுக்கு மூச்சுவிட முடியவில்லை. பேச முடியவில்லை. சிறிது நேரம் திணறினான்.

"எங்கே? எப்போது?" என்று நான் திடுக்கிட்டுக் கேட்டேன்.

"இப்போதுதான்! என் வயல் வரப்புலே!" என்று அவன் திணறினான்.

இன்னும் பொழுது போக வெகு நேரம் இருந்தது. தெருவில் அப்போதுதான் வெய்யில் தாழ்ந்திருந்தது. வெளியே போகப் புறப்பட்டவர்கள் வீட்டிலிருந்து கிளம்பிக்கொண்டிருந்தனர். கிழவில் சிறுவர்கள் கோலி ஆடிக்கொண்டிருந்தனர். அவனுடைய அலறலைக் கேட்டவுடன் அண்டை அயல் வீடுகளிலிருந்தவர்கள் என் வீட்டின் முன்னே கூடிவிட்டனர்.

நாகமுத்து ஒரு விவசாயி. அவனுடைய பாட்டன் விட்டுச் சென்ற நிலத்தில், லேவாதேவிக்காரர்களின் கையில் மாறாமல் மிச்சப்பட்டது அவனுக்கு ஒரு சிறிய வயலேயாகும். அதை விட்டால் அவனுக்கு வேறு பிழைப்பு கிடையாது. சில காலமாக அந்தச் சின்னஞ்சிறிய வயலைக்கூட அவனுக்கு எரு தழையடித்து செழிப்பாகச் சாகுபடி செய்ய முடியவில்லை. கையிலே காசு இல்லை. உரமில்லாததால் மகசூல் குறைந்ததும், நெல் விலை படுத்ததும், மற்றச் சரக்குகளின் விலைகள் கொம்பில் ஏறிக்குந்திக்கொண்டதும் தான் அவன் கையில் காசு இல்லாமல் போனதற்குக் காரணம். குறிப்பாக யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து அவனுக்குச் சனியன் பிடித்துவிட்டான் என்றே சொல்லலாம். ஜோசியர் கூட அப்படித்தான் சொன்னார்.

எதுவும் எல்லையை மீறிவிட்டால் ஓர் அலாதியான துணிச்சல் மனிதனிடம் பிறக்கிறது அல்

லவா? 'தலைக்கு மேல் தண்ணீர் சாண் போனாலென்ன, முழம் போனாலென்ன?' அவனுக்கும் அத்தகைய துணிச்சல் பிறந்தது. வளமை குன்றிய அந்தத் துண்டு நிலத்தில் கடன் வாங்கியாவது எரு தழையடித்து, உற்பத்தியைப் பெருக்குவது என்று அவன் உறுதி கொண்டான். "வந்தால் வரட்டும்; போனால் போகட்டும்; ஆறிலும் சாவு; நூறிலும் சாவு!" என்று சொல்லிக் கொண்டே வேட்டியை வரிந்து கட்டினான். லேவாதேவிக் காரனிடம் கடன் வாங்கினான். அந்தத் துண்டு நிலமும் தூண்டில் முள்ளில் மாட்டிக் கொண்டுவிட்டது.

கடன் வாங்கிய பணத்துக்கு ஒரு சோடி உழவு மாடுகளும், எரு தழைகளும் வாங்கினான். வயல் நிறைய உரம்போட்டான். ஆட்டுக் கிடை கட்டினான். ஆழமாக உழுதான். மழைக்கோ ஆற்று நீருக்கோ குறைவில்லை. குறுவை நாற்றுப் பறித்து நட்டான். அதுவும் வளர்ந்துகொண்டிருந்தது. குறுவை அறுவடையிலேயே கடனில் பேர் பாதியை அடைத்துவிடலாம் என்று அவன் ரொம்ப நம்பிக்கையுடன் நெல் தாள்களைக் கண்காணித்து வந்தான். அந்தச் சமயத்தில் ஒரு எதிர்பாராத சம்பவம் நடந்தது.

அது யுத்த காலமல்லவா? பட்டணங்களில் வெள்ளைக்கார சோல்ஜர்கள் ஏராளமாக வந்திருந்தனர். அவர்களிடம் நூதனப் பொருள்களை விற்றுக் காசு சம்பாதிக்கச் சிலர் கிளம்பினர். உயிருள்ள பாம்புபோல் படமெடுத்தவாறு கட்டையில் பொருத்தப்பட்ட, பதம் பண்ணப்பட்ட, செத்த பாம்பு அவ்வித நூதனப் பொருள்களில் ஒன்று. பாம்புத் தோலால் இடுப்பில் கட்டிக் கொள்ளக்கூடிய 'வார்'களையும் சிலர் ஏராளமாகச் செய்தனர். பட்டண சோல்ஜர்கள் மார்க்கெட்டில் அவற்றிற்கு ரொம்ப கிராக்கி. ஆகவே, அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் பாம்புத் தோலுக்குக் கிராமங்களில் ஆட்களை அனுப்பித் தேடினர். தோலுக்குச் சேதம் ஏற்படாமல் பாம்பை சாகடித்துக் கொண்டுவருபவர்களுக்கு அவர்கள் நிறையக் காசு தருவதாகச் சொன்னார்கள். அவ்வளவுதான். அநேக கிராமங்களில் பாம்பு பிடிப்பதே சிலருக்கு வேலையாகி விட்டது.

எங்கள் கிராமங்களிலிருந்து நூற்றுக் கணக்கான பாம்புகளை அடித்துக் கொன்று கொண்டு சென்றார்கள். அவை பெரும்பாலும் நீர்க் கொரத்தை எனப்படும் நீர்ச் சாரைகள். அதாவது தண்ணீர்ப் பாம்புகள். சில நாட்களில் எல்லா நீர்ச் சாரைகளும் மறைந்துவிட்டன. ஆரம்பத்தில்



அந்த நீர்ச் சாரைகளுக்கு ஏற்பட்ட கிராக்கியையும், அவை சாவதையும் பார்த்தபோது, எங்கள் எல்லோருக்கும் வேடிக்கையாகவே இருந்தது. யுத்தகால வினோதங்களில், கள்ள மார்க்கெட் வினோதம்போல, அதுவும் ஒன்று என்று நினைத்தோம். ஆனால், கள்ள மார்க்கெட்டை ஆரம்பத்தில் சகித்துக்கொண்டது எவ்வளவு ஆபத்தாயிற்றே, அதைவிட நீர்ச்சாரைகள் செத்ததைச் சகித்துக்கொண்டது பேராபத்தாயிற்று. ஏனெனில், அவை மறைந்தவுடன் வயல் எலிகள் ஆயிரம் பதினாயிரக் கணக்கில் பெருகிவிட்டன. குறுவை சாகுபடிக்குப் பிடித்தது சனியன்!

நாக மூத்துவின் வயல் நாசமாயிற்று. அவனுடைய நம்பிக்கைகளையெல்லாம் அந்தச் சிறு எலிகள் சிதற அடித்தன. தாள்களை அழித்து அவை கொழுத்தன. கள்ள மார்க்கெட் பெருச்சாளிகள் அறுவடை முடியும் வரையாவது பொறுத்திருந்தன; அந்த எலிகள் விளைவதற்கு முன்பே வளையில் பதுக்கின!

அப்போதுதான் விவசாயிகள் நீர்ச் சாரைகளின் சமூக சேவையை உணர்ந்தார்கள். நீர்ச் சாரைகள் பாம்புகளின் இனத்தைச் சேர்ந்திருந்த போதிலும், மனிதர்களில் பல்வேறுவிதமான பேர்வழிகள் இருப்பதுபோல அது ஒரு விசேஷமான ரகத்தைச் சேர்ந்தது. அவை சாதாரணமாக விவசாயிகளுக்குத் தொந்தரவு எதுவும் செய்யாது. மிகுந்த பய பக்தியுடன் விவசாயிகளைக் கண்டால் அவை ஓடி மறைந்துவிடும். விவசாயிகளாகச் சென்று திமிருடன் மிதித்துத் துன்புறுத்தினால்தான், அவை தற்பாதுகாப்புக்காக-காலைக் கடிக்கும்; ஆனால் அவற்றின் பல்லில் விஷம் கிடையாது. பல் பட்ட இடத்தில் கசியும் இரத்தமும், சிறிது சுண்ணாம்பு தடவினால் நின்றுவிடும்., விவசாயிகளிடத்தில் இவ்விதம் பூரண அஹிம்சையைக் கடைப்பிடிக்கும் அவை, விவசாயிகளின் உழைப்பைத் திருட்டுத்தனமாகக் கொள்ளையடித்துப் பாழாக்கும் வயல் எலிகளை இலேசில் விட்டுவிடுவதில்லை. அவற்றை கண்டால எலிகள் நடுங்கி ஓட்டம் பிடிக்கும்.

அவற்றின் அந்தச் சமூகத் தொண்டு, அவையில்லாமல் ஒழிக்கப்பட்டபோதே விவசாயிகளுக்குத் தெரிந்தது. எலி உபத்திரவம் தாங்க முடியாமல் போனபோது, அவர்களுக்கு அவற்றின் பேரில் அபார பிரேமை ஏற்பட்டது.

அந்நிய நாட்டினரைத் திருப்திப் படுத்தும் பொருட்டு, அந்தச் சமூகத் தொண்டர்களைக்



காசுக்கு ஆசைப்பட்டுச் சில புல்லுருவிகள் அடித்துக் கொன்றதை விவசாயிகள் ஆத்திரத்துடன் எதிர்க்க முற்பட்டனர். உடனடியாக அந்தச் சமூகத் தொண்டர்கள் பெருகினால்தான், எலிகளின் கொட்டம் அடங்கும் என்று நினைத்துக் கொலைகாரர்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர், கொலைகாரர்களை ஆங்காங்கே கண்ட கண்ட இடங்களிலெல்லாம் அடித்து விரட்டினர். நாகமுத்து அந்த நீர்ச்சாரைகளைப் பிடித்த இரண்டு சிறுவர்களை ஒரு தடவை தடியால் ஓங்கி மண்டையில் அடித்தான். அவனுக்கல்லவா தெரியும் குறுவை சாகுபடி பாழாய்ப் போனதன் வருத்தம்!

குறுவைக்குப் பிறகு தாளடி சாகுபடி ஆரம்பமாயிற்று. விலைவாசி உயர்வு, யுத்தம், பஞ்சம் முதலியவற்றை சபித்தது போலவே, எலிகளையும் சபித்துக் கொண்டே நாகமுத்து தன்வேலையைப் புதிதாகத் தொடங்கினான். புகை போட்டும், வளைகளை வெட்டியும் எலிகளைக் கொல்ல முயன்றான். ஆனால் அவை வெளியே தலை நீட்டினால்தானே? அடி பாதாளத்தில்போய் பதுங்கி விட்டன. வளையில் நுழையும் பாம்பினால் மட்டுமே அவற்றை அடியோடு ஒழிக்க முடியும்.

தன்னால் முடிந்த அளவு பாதுகாப்புகளைச் செய்தபிறகு, நாகமுத்து இரண்டாவது போகத்துக்கு நாற்றை நட்டான். தாள்களும் வளர்ந்தன. குறுவையில் ஏற்பட்ட நஷ்டத்தையும் இந்தச் சாகுபடி ஈடு செய்ய வேண்டுமென்று அவன் கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தான்.

அந்த நிலைமையில்தான் அன்றைக்கு அவன் தன் மாட்டைப் பாம்பு கடித்துவிட்டதாக அலறிக்கொண்டு ஓடி வந்தான். சாதாரணமாக தண்ணீரில் தலையை அமிழ்த்தாமல் நீந்தும் நல்லபாம்பு, நீர் மலிந்த வயல் புறங்களில் அதிகமாக நடமாடாது. மூங்கில் புதர்களிலோ கரையான் புற்றுகளிலோ, தோட்டங்களிலோதான் அது அதிகமாகக் காணப்படும். ஆகவே, அவன் அலறியபோது. "நீர்ச்சாரை கடித்து மாடு சாவதாவது?" என்றுதான் முதலில் நினைத்து நான் ஆச்சரியப்பட்டேன். ஆனால் அவன் மூச்சை அடக்கி சாவதானமாக விளக்கிய பிறகு விபரம் தெரிந்தது.

"தண்ணீர் நிறைந்துள்ள வயற்புறத்தில் இப்போது எப்படி நல்லபாம்பு வந்தது?" என்று நான் ஆவலுடன் கேட்டேன். பெரிய பொக்கிஷத்தைப் பறிகொடுத்தவன்போல் தலையில் அடித்துக்கொண்டு அவன் அழாத குறையாகப் பேசினான்:

"அதை என் கேட்கிறீர்கள்? வயலில் இருக்கிற தண்ணீர்ப் பாம்புகளைக் கொல்லக் கூடாது என்று கூலிக்குக் குடியைக் கெடுக்கிற அந்தப் பயல்களை கண்டித்து விரட்டினோமல்லவா? நம்மிடம் உதைபட்டு ஓடிய அவர்கள், தோப்பிலும், தோட்டத்திலும், புத்திலும் புதரிலும் இருந்த நல்ல பாம்புகளை யெல்லாம் கிளப்பி விட்டு விட்டார்கள்! அவை நீர்ச் சாரைகள் வாழும் வயல்களில் குடியேறி விட்டன! ஆபத்துக்கு அஞ்சும் அவை, தண்ணீரிலும் கிடக்கத் தயங்கவில்லை! எப்படியாவது உயிர் பிழைத்தால் போதுமென்றும்,

நம்மைப் பழி தீர்ப்பதென்றும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றன!

"எலியைப் பிடித்து நமக்கு உதவி செய்கிற நீர்ச் சாரைதான் வரப்பிலே குறுக்கே கிடக்கிறது என்றும், அது ஒன்றும் தீங்கு செய்யாது என்றும் நான் நினைத்தேன். ஆனால் அது ஆபத்தாகி விட்டது! ஏமாந்து விட்டேன்!

"மூந்தாநாளே அதை நான் வரப்பிலே பார்த்தேன், அப்போது எனக்குப் புரியவில்லை. வீணாக என் நீர்ச்சாரையைத் தொந்தரவு செய்ய வேண்டுமென்று நினைத்து வேறு வரப்பு வழியாக ஒதுங்கி வந்து விட்டேன்.

"நேற்று திரும்பவும் கண்டேன். அப்போது வயல்களில் எலிகளின் உபத்திரவமும் இருந்தது. பூமிக்கு அடியிலே ஓடி ஒளிந்த எலிகளெல்லாம் குஷியாக கும்மாள மடிக்கும்போது, அந்தப் பாம்பு அந்த எலிகளை ஒன்றும் செய்யாமல், நமக்கு ஒரு தீங்கையும் விளைவிக்காத தவளையை விழுங்கிக் கொண்டிருந்தது. தவளையைத் தின்று பசியைத் தீர்த்துக்கொண்டால், அது எப்படி எலியை விரட்டிப் பிடிக்கும் என்று நினைத்தேன்.

"சரி. இந்தப் பாம்புகளை இனி நம்பாமல் நாமே எலிகளை ஒழிக்க ஏதாவது செய்ய வேண்டுமென்று தீர்மானித்து வீட்டுக்கு வந்தேன். அந்தத் தீர்மானம் அந்தப் பாம்புக்கு தெரிந்துவிட்டது போலும்!

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால் வயல் தண்ணீரை வடித்து எலிகளுக்குப் பொறி வைக்கலாம் என்று நினைத்து மண்வெட்டியையும் மூங்கில் சிம்புகளையும் எடுத்துக் கொண்டு கிளம்பினேன். அப்படி பக்கத்து வரப்பு மேட்டிலே மூலை யடித்து கட்டிப் போடலாம் என்று மாட்டையும் ஓட்டிச் சென்றேன். அந்தப் பனை மரத்தினருகே சென்றேனோ இல்லியோ, மாடு முன்னே போகாமல் சட்டென்று நின்றது. எதையோ வெறிக்கப் பார்த்தது. நீர்ச் சாரையைப் பார்த்து அது பயப்படுவதாக நான் நினைத்தேன். "சே! அது நமக்கு உதவி செய்கிற பாம்பு அல்லவா? அதைப் பார்த்து பயப்படலாமா?" என்று சொல்லிக் கொண்டே மாட்டை அடித்து ஓட்டினேன். மாடு போக மறுத்து வந்த வழியே திரும்ப முயன்றது. நான் கயிற்றை இழுத்துப் பிடித்து, வயலில் இறங்காமல் தடுத்து, குச்சியால் முதுகில் அடித்து விரட்டினேன்.

"அந்தச் சமயத்தில் நீர்ச்சாரை என்று நினைத்திருந்த அந்தப்பாம்பு கொடிய நாகமாக மாறிவிட்டது! ஐயோ! 'உஸ்' என்று ஒரு வளையிலிருந்து தலையைத் தூக்கி படமெடுத்தது! மாடு என்னையும் மீறி ஒரே பாய்ச்சலாக பாய்ந்து வயலில் குதித்தது. அது பாயும் போதே அந்தப் பாம்பும் இமை கொட்டும் நேரத்துக்குள் பாய்ந்து மாட்டின் பின் வலது காலைக் கடித்தது! வயலை மிதித்து ஓடிய மாடு, 'டொப்'பென்று நடு வயலில் விழுந்துவிட்டது!

"எனக்கு அந்நேரம் என்ன செய்வதென்றே புரியவில்லை. பயத்தில் நடுங்கி, வந்த வரப்பிலேயே திரும்பி ஓட்டம் பிடித்தேன். சிறிது தூரம் என் பின்னே ஓடி வந்தது பாம்பு. பிறகு அப்படியே வயலில் இறங்கி மறைந்துவிட்டது!"

நாகமுத்துவின் பேச்சு நின்றது. கண்களில் நீர் கலங்கிற்று.

சுற்றி நின்ற ஜனங்களுடைய முகமும் வாட்டமுற்றது. எல்லோரும் பரிதாபப்பட்டனர்.

"நீ அதை சும்மா விட்டுவிட்டாயே!" என்று நான் மெதுவாகக் கூறினேன்.

அவன் ஆவேசம் வந்தவன் போல் நிமிர்ந்து நின்றான். கண்களில் கலங்கிய நீர் தானாகவே நொடியில் மறைந்தது. அந்தக் கண்களில் கோபத் தீ மூண்டது.

"சும்மா விட்டுவிட்டேனா? ஆமாம், தற்சமயம் அப்படித்தான். ஆனால் அதை கண்ட துண்டமாக வெட்டாத வரையில் என் மனம் நிம்மதியடையாது!

"அது இன்னும் அந்த வயலில்தான் இருக்கிறது. ஒருவேளை அடுத்த வயலுக்கோ அல்லது ஏதாவது ஒரு வளையிலோ சென்றிருக்கலாம். ஆனால் அது ஒன்று தானா அங்கிருக்கும் நல்ல பாம்பு? இன்னும் பல அதைப்போல் நீர்ச்சாரையாக வேஷம் போட்டுக் கொண்டிருக்கலாம் அல்லவா? நான் ஒரு ஆள் தனியாகச் சென்றால், ஒருவேளை என்னால் அதை அடிக்க முடியாமல் போகலாம். அல்லது அதுவே எங்கேயாவது மறைந்திருந்து மாட்டைக் கடித்ததுபோல் என்னையும் கடித்துவிடலாம். அதனால்தான் நான் இவ்வளவு அவசரமாக ஓடிவந்தேன். நீங்கள் எல்லோரும் என்னோடு வந்தால், அந்த இடங்களையெல்லாம் நன்றாகத் தேடி எல்லாப் பாம்புகளையும் கொன்று விடலாம்."

புல்லும் புதர்களும் வளைகளும் நிறைந்த அந்த இடத்தில், வெறி கொண்டு அலையும் நல்ல பாம்பை தேடிப் பிடித்து அடிப்பது என்றால், சுலபமான காரியமா? "ஐயோ! ஆபத்தாயிற்றே!" என்று அடுத்த வீட்டுப் பொன்னுசாமி பயந்தான்.

"நீங்கள் இன்று என்னுடன் வரவில்லையென்றால், நாளைக்கு உங்களுடைய வயல்களுக்கே உங்களால் போக முடியாது! என் மாட்டுக்கு நேர்ந்த அதே கதி, எனக்கு நேரவிருந்த அதே கதி, உங்கள் ஒவ்வொருவருக்கும் நேரும்! தவளையைத் தின்று எலியைப் பிடிக்காமல் விட்டுவிடுகிற அந்தப் பாம்புகள் நமக்கு விரோதிகளேயொழிய, நண்பர்கள் அல்ல!" என்று நாகமுத்து உணர்ச்சியுடன் பேசினான்.

"அட தம்பி! வீட்டுக் கொல்லையில் சுளுக்கி இருக்கிறது எடுத்து வா!" என்று பையனைப் பார்த்து சொல்லிவிட்டு, "நான் உன்னோடு வருகிறேன்!" என்று நாகமுத்துவிடம் சொல்லி நான் எழுந்தேன். கூட்டத்தில் நான் ஒருவன் கிளம்பியதைப் பார்த்தவுடன், குப்பு, வீரப்பன், முருகன், நாகப்பன், வேலு, கருப்பன் முதலியவர்களும் புறப்பட்டார்கள். நாகமுத்துவின் வயலுக்கு இரண்டு வயல்கள் தள்ளி பயிர் பண்ணியிருக்கும் அல்லாபிச்சை ராவுத்தரும் ஒரு நீளமான சுளுக்கியை எடுத்துக்கொண்டு வந்துவிட்டார். சிறுவர்கள் எல்லோரும் 'ஓ!' என்று கூச்சல் போட்டு எங்களைப் பின்தொடர்ந்தனர். கடைசியாக தெருவைத் தாண்டி வரப்பிலே ஏறியபோது, எங்களுடைய அந்தக்கூட்டம்ஒரு படைபோல் இருந்தது! அதில் நிலமிருப்பவனும், இல்லாத கூலியும், படையாச்சியும், முஸ்லிமும், கள்ளரும், தேவரும்,— இவ்விதம் பலவிதமானவர்கள் ஒன்று சேர்ந்த ஓர் ஐக்கிய முன்னணியாக அது விளங்கிற்று!

எங்களுடைய படை நாக முத்து வயலின் வரப்புகளையெல்லாம் கிடு கிடுவென்று வெட்டிற்று. அவற்றிலிருந்து நண்டுகள் வந்தன; எலிகள் ஓடின. பாம்பைக் காணவில்லை. வயலைப் பாழ்படுத்திய எலிகள் துண்டாக்கப்பட்டன.

நடுவயலில் இறங்கித்தான் இனி பாம்பைத் தேடவேண்டும். நம் படை வயலில் இறங்கினால், நட்டு ஒருவாரம்கூட ஆகாத அந்த வயல் பாழாகிவிடுமே என்று யோசித்து நான் நாகமுத்துவின் முகத்தைப் பார்த்தேன். அவன் முகத்தில் ஆத்திரமும் வஞ்சம் தீர்க்கும் வெறியுமே தாண்டவமாடின! "வயல் போனாலும் போகுது! இறங்கிப் பார்க்கலாம்!" என்றான் அவன். அவ்வளவுதான். உடனே படை இறங்கிவிட்டது.

எல்லோரும் இறங்கவில்லை. மூன்று புறங்களில் மூன்று கோஷ்டிகள் இறங்கின. ஒரு கோஷ்டி நான்காவது பக்கத்து வரப்பிலே சுளுக்கிகளுடனும் தடிகளுடன் ஆயத்தமாக நின்றது. நாகமுத்து அந்தக் கோஷ்டியில் இருந்தான். ஏனெனில், தன் கையாலேயே அந்தப் பாம்பை அவன் வெட்ட எண்ணினான்!

பாவம்! அவன் ஏமாந்தான்! ஏனெனில், மாடு செத்துக் கிடந்த அந்த வயலில் பாம்பு இல்லை! அது வேறு எங்கோ சென்றுவிட்டது! அந்த வயலில் இருந்ததெல்லாம் இரண்டு நீர்ச்சாரைகளே!

ஏற்கனவே பாம்பை அடித்து தோலை விற்ற வேலு, நல்ல பாம்பென்று கூச்சல் போட்டு, இரண்டு பாம்புகளை அடித்துக் கொன்றுவிட்டான். எல்லோரும் ஓடிப்போய்ப் பார்த்தோம். அவை நீர்ச்சாரைகள்! "ஏண்டா இந்தப் பாம்புகளைக் கொன்றாய்?" என்று அவனைக் கேட்டதற்கு, "பாம்பு என்றால் எல்லாம் பாம்புதான்!" என்றான். மேலும், "இந்தப்பாம்புஒன்றுஇருப்பதால்தானே, இதைப் போல நல்ல பாம்பு வேஷம் போட்டு நம்மை ஏமாற்றுகிறது?" என்றான்! "அட முட்டாள்! நல்லது எது, கெட்டது எது என்று கண்டுபிடிக்கத் தெரியாத முட்டாள்கள்தான் ஏமாறுவார்களேயொழிய, புத்தியுள்ளவன் ஏமாறுவானா? இந்தப்பாம்புகளைக் கொன்றதால்தானே எலிகள் பெருத்தன? அப்போது காசுக்கு ஆசைப்பட்டு இதைக் கொன்று நீ எலிகளை வளர்த்தாய். இப்போது கூட்டத்தோடு 'கோவிந்தா' போட்டு, நல்ல பாம்பை அடிப்பது போல் பாசாங்கு செய்து, மீண்டும் தீங்கு விளைவிக்காமல் உதவி செய்யும் அதே சாரைகளை அடிக்கிறாய்! உனக்கு இது கெட்ட பாம்பு அல்ல என்பது நன்றாகத் தெரியும். இருந்தாலும் இதை அடித்திருக்கிறாய். எலிகளைப் பெருக்கவிட்டு எங்கள் சாகுபடியைப் பாழாக்கி, வயிற்றில் மண்ணைப் போடுவதுதான் உன் நோக்கமா?" என்று தங்கசாமி ஆத்திரத்துடன் அவனைக் கண்டித்தான். "விஷப் பாம்பை அடிப்பது போல் பாசாங்கு செய்து எங்கள் வயிற்றில் நீ மண்ணைப் போட்டதுபோதும்; கரையேறிவிடு!" என்று நான் அவனை எங்களுடைய படையிலிருந்து விரட்டினேன்.

உழவு மாட்டைக் கொன்றும், உழவனை விரட்டியும் உபத்திரவம் செய்த அந்தக் கொடிய விஷப் பாம்பைத் தேடிப் பிடிக்க

வேண்டுமென்ருல், அடுத்த வயலில் எங்களுடைய படை இறங்க வேண்டும். அடுத்த வயலின் சொந்தக்காரனை குப்புசாமி என்ன சொல்லுவானே என்று நினைத்து நாங்கள் சிறிது தயங்கினேம். எங்களுடன் சேர்ந்து அந்தபோராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்ட குப்புசாமிக்கு, எங்கள் தயக்கம் புரியாமலிருக்குமா? அவன் ஆவேசத்துடன், "பரவாயில்லை! இறங்குங்கள்!" என்று சொன்னதைப் பார்த்த எங்களுக்கு ஆச்சரியம் எல்லைமீறிவிட்டது. அவனுடைய உணர்ச்சியையும் தியாகத்தையும் கண்ட எங்களுடைய அந்தப் படை, கரகோஷம் செய்து வானத்தைப் பிளக்கக்கூடியவாறு ஆரவாரம் செய்தது.

என்ன ஆச்சரியம்! அந்த ஆரவார ஒலி அடங்குவதற்குள்ளேயே, "அதோ!" என்று ஆங்காரத்துடன் கோஷித்துக்கொண்டே குப்புசாமியின் வரப்பை நோக்கி மண் வெட்டியும் கையுமாக ஓடினன் நாகமுத்து. ஆரவாரம், கூச்சல் முதலியவற்றில்மனத்தைச்செலுத்தாமல், மூலை முடுக்குகளிளெல்லாம் கண்ணையும் மூளையையும் செலுத்திக்கொண்டிருந்த அவன் பேரிரைச்சலைக் கேட்டு அச்சம் கொண்டு ஓட்டம் பிடித்த விஷப் பாம்பைப் பார்த்துவிட்டான்.

அவன் இரண்டு பாய்ச்சலில் அந்த விஷப் பாம்பருகே சென்றுவிட்டான். அது உடனே பக்கத்தி லிருந்த ஒரு நண்டு வளையில் நுழைந்தது. மண் வெட்டியால் வெகு வேகமாக வளையை வெட்டினன். அதன் உடல் துண்டாயிற்று. அதற்குள் நாங்கள் அவனுடன் சேர்ந்துகொண்டோம்.

துண்டான பிறகாவது அந்தப் பாம்பு செத்ததா? அதுதான் இல்லை. அப்போதுதான் அதற்கு அதிக ஆத்திரம் வந்ததுபோலும். அறுந்த வால் பக்கத்தில் துடித்துக்கொண்டு கிடக்கும்போது, அது 'உஸ்' என்று படமெடுத்தது! சீறிக் கடிக்க வந்தது!

"தலையையா தூக்குகிருய்?" என்று நாகமுத்து பல்லை நற நற வென்று கடித்து மண் வெட்டியால் தன் முழு பலம்கொண்டு ஓங்கி ஒரு வெட்டு வெட்டினன். பாம்பு செத்தது. நாகமுத்துவின் ஆத்திரம் இன்னும் சாகவில்லை. "இந்தப் பல்லுதானே என் மாட்டைக் கடித்தது! என் குடியைக் கெடுத்தது!" என்று இன்ஞெரு வெட்டு வெட்டினன். "இந்தத் தோலுதான் நீர்ச்சாரை போலிருந்து என்னை ஏமாற்றிற்று!" என்று சொல்லி இன்னெரு போடு போட்டான். அது உருவம் தெரியாதபடி சிதைந்தது. விவசாயிகளின் கூட்டம் வெற்றி கோஷமிட்டது. தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்த பெண்டு பிள்ளைகளெல்லோரும் எதிரொலி செய்தனர்.

மண்வெட்டியைத் தோளில் போட்டுக்கொண்டு, செத்துக் கிடந்த தன் மாட்டின் அருகே நாகமுத்து சென்ருன். அதையே சிறிது நேரம் பார்த்தான். அவனுடைய கண்களில் நீர் கலங்கிற்று. "நல்லது எது, கெட்டது எது என்று தெரிந்துகொள்ளாமல் இனி ஒன்றையும் செய்யமாட்டேன்!" என்று மெதுவாகச் சொன்ஞன்.

எங்கள் கூட்டம் அவனையே பார்த்துக்கொண் டிருந்தது.

✲



சி. ராஜகோபாலாச்சாரியார்

இந்திய கவர்னர் - ஜெனரல்



பாபு ராஜேந்திரப் பிரசாத்

அ. இ. கா. தலைவர்

சரித்திரத்திலே ஒரு பகுதியைப் பொன்னெழுத்துக்களில் எழுதிய அசோகசக்ராதிபதியின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு இது. இதில் அவன் காலத்திய பொதுச் சரித்திரமும் அரசியல் சரித்திரமும் கூட கூறப்பட்டிருக்கின்றன. இந்தியாவின் மேம்பட்ட புராதன கலாசாரத்தின் ஏகப்பிரதிநிதியாகிய அசோகனின் வரலாறு இன்று எல்லோரும் படித்தறிய வேண்டிய ஒன்றாகும்.

# அசோகன்

கு. அழகிரிசாமி

சாம்ராட் அசோகன் காலமாகி இன்று 2180 வருஷங்களாகின்றன. ஏறக்குறைய 22 நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவனுடைய ஆக்ஞாசக்கரம், அவன் பிறந்து வளர்ந்த இந்த இந்திய நாட்டின் தேசியக் கொடியில் பொறிக்கப் பட்டுள்ளது; அவனுடைய அருளுக்கும் புகழுக்கும் புத்துயிர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பிறகு அன்பென்ற சாம்ராஜ்யத்தின் அத்தாணி மண்டபத்திலே கொலுவீற்றுக் கோலோச்சும் அந்த மன்னர் மன்னனின் பெருமையை உலகின் மேதாவிகள் எல்லாம் வியந்து வியந்து பாராட்டுகிறார்கள். சமீபத்தில் காலம் சென்ற ஆங்கிலத் தத்துவப் பேராசிரியர் எச். ஜி. வெல்ஸ் சொல்லுகிறார்:

“ஆயிரக்கணக்கான முடிமன்னர்கள் குழுமியுள்ள சரித்திரத்தின் ஏடுகளிலே, அசோகனின் நாமம்தான் ஒளிவீசிப் பிரகாசிக்கிறது; ஒரு நட்சத்திரமாகத் தன்னந்தனியாக நின்று பிரகாசிக்கிறது. வால்கா(நதி)ப் பிரதேசத்திலிருந்து ஜப்பான் வரையிலும் அவன் பெயருக்கு இன்னும் மதிப்பும் மரியாதையும் இருந்து வருகின்றன. சீனாவும் திபேத்தும், அவனுடைய கொள்கையை மறந்துவிட்ட இந்தியாவும் கூட அவன் பெருமையைப் போற்றிப் பேணி வைத்திருக்கின்றன.”

இப்படிப்பட்ட பெருமைக்கெல்லாம் அசோகன் ஒருவனே பாத்திரனாக நிற்பதன் ரகசியம் என்ன? எச். ஜி. வெல்ஸ் சொல்லுவது போல, ரணகளத்திலே கடுமையான போர்செய்து, கடைசியில் வெற்றி கிட்டியும் கூட, போர் செய்வதையே உதறித் தள்ளிவிட்ட ஒரே மன்னன் அசோகன்தான். இந்தச் சரித்திரப் பிரசித்தி பெற்ற செயலை உலகத்திலே எந்த மன்னனும் செய்தது கிடையாது. வாள் வலிமையைக் களைந்து எறிந்துவிட்டு அன்பினால் உலகைத் தன்வயப் படுத்தவும், அன்பின் வயப் படுத்தவும் முயன்ற பேரரசனும் அசோகன் ஒருவனே.

அசோகனுடைய சரித்திரம், இந்தியன் பெருமைப் படத்தக்க ஒரு சரித்திரம். இந்திய நாட்டுச் சரித்திரத்தில் பெருமையோடு புரட்டிப் பார்க்கக்கூடிய பக்

கங்களில் அசோகனுடைய செய்திதான் காணப்படுகிறது.

அசோகனைப் பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கு முன், அவனுடைய பாட்டனும் அசோகன் ஆண்ட சாம்ராஜ்யத்தின் ஸ்தாபகனும் ஆகிய சந்திரகுப்தனைப் பற்றிச் சில சொல்லியாக வேண்டும். அரசியல் ரீதியில் அசோகனுடைய வரலாறு சந்திரகுப்தனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது.

வட இந்தியாவில் பாடலிபுரத்தைத் தலைநகராகக்கொண்ட மகத ராஜ்யத்தை ஆட்சி செய்து வந்த நந்த வம்சத்து மன்னன் ஒருவனுக்கும் 'மூரா' என்ற ஒரு தாழ்ந்த ஜாதிப் பெண்ணுக்கும் சந்திரகுப்தன் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது. மூரா என்பவள் வயிற்றில் பிறந்ததனால்தான் சந்திரகுப்தன் தன்னை மௌரியவம்சத்தவன் என்றும், தன் சாம்ராஜ்யத்தை மௌரிய சாம்ராஜ்யம் என்றும் சொல்லிக் கொண்டானம். ஆனால் சந்திரகுப்தனுடைய பிறப்பைப் பற்றி பலதிறப்பட்ட அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. அது போகட்டும். அப்போது ஆட்சி செய்துவந்த நந்த வம்ச மன்னன் மிகவும் பலவீனமானவன். அவனையோ அவன் வம்சத்தவர்களையோ வெறுத்த கௌடில்யன் என்ற பிராமணன் எப்படியும் நந்த வம்சத்தை ஒழித்து விட வேண்டுமென்று விரதம் பூண்டிருந்தான். அவனுக்கும் சந்திரகுப்தனுக்கும் நட்பு ஏற்பட்டது. இருவர் மீதும் அரசனுக்குக் கோபம் இருந்ததின் காரணமாக இருவரும் நந்தரின் ஆட்சிப் பிரதேசத்தைவிட்டு தக்ஷசிலம் என்னும் இடத்துக்குப் போனர்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியாவின்மீது படையெடுத்துவந்து, பிறகு வெற்றியும் பெருமல் தோல்வியும் பெருமல் தன் பிரதிநிதிகளை வைத்துவிட்டுச் சொந்த நாடு திரும்பிய கிரேக்க மன்னன் மகா அலெக்ஸாண்டரை, சந்திரகுப்தன் சந்தித்தான். அலெக்ஸாண்டரின் வீர பராக்கிரமங்கள் சந்திரகுப்தனைக் கவர்ந்தன. அலெக்ஸாண்டரைப் போலவே தானும்ஒரு வீர புருஷனுக விளங்க விரும்பினுன் சந்திரகுப்தன்.

திரும்பிப்போன அலெக்ஸாண்டர் கி. மு. 323-ல் பாபிலோனில் மரணமடைந்தான் என்ற செய்தியைக் கேட்டதும், இந்தியாவிலிருந்த கிரேக்கப் படைகளை விரட்டியடிக்க வேண்டுமென்ற தேசிய உணர்ச்சி தலை எடுத்தது. இந்தக் காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்த சந்திரகுப்தன் வாகை சூடிக்கொண்டு, மகத நாட்டின் தலை நகராகிய பாடலிபுரத்தில் நுழைந்து மகத நாட்டின் பேரரசனுகத் தன்னை முடிசூட்டிக் கொண்டான். நந்தர்களை ஒழிக்கவும், சந்திரகுப்தன் அரியாசனம் ஏறவும் உதவி செய்தவன் கௌடில்யன்.

அதன் பின் அலெக்ஸாண்டரின் தளகர்த்தனுகிய ஸெல்யூகஸ் நிகடார் என்பவன், கி. மு. 305-ல் தன் அதிகாரத்தை இந்தியாவில் ஸ்தாபிக்க விரும்பி, படையெடுத்து வந்தான். அவன் சந்திரகுப்தனல் தோற்கடிக்கப்பட்டான். அதனல் சந்திரகுப்தனுடைய ஆட்சியின் கீழ் ஆப்கானிஸ்தானத்தின் ஒரு பகுதியும் வந்து சேர்ந்தது. ஸெல்யூகஸ் சந்திரகுப்தனுடன் சிநேக உடன்படிக்கை செய்து கொண்டதுடன் தன் மகளையும் சந்திரகுப்தனுக்கு மணம் செய்து கொடுத்து

500 யானைகளையும் கொடுத்தான். தன் தூதனாக மெகஸ்தனிஸ் என்பவனைப் பாடலிபுரத்தில் நிய மித்திருந்தான்.

சந்திரகுப்தனுடைய ராஜ்யம் தெற்கே நருமதை நதி வரை யிலும் வியாபித்திருந்தது. அவ னுடைய தலைநகராகிய பாடலி புரத்தில் மட்டும் 4 லட்சம் படை வீரர்களும், கிரந்தர சேனையில் 6 லட்சம் காலாட் படையினரும், 3 லட்சம் குதிரைப் படைகளும், 9 ஆயிரம் யானைகளும் இருந் ததை இன்று நினைத்தால் ஆச்சரிய மாக இருக்கிறது.

விஷ்ணுகுப்தன் என்றும் சாணக்கியன் என்றும் பெயர் கள் கொண்ட 'கௌடில்யன்' என்பவனே சந்திரகுப்தனின் மதி மந்திரியாக இருந்தவன். அவன் எழுதிய "அர்த்த சாஸ்தி ரம்" என்னும் அரசியல் நூலும், மெகஸ்தனீஸ் என்ற கிரேக்க தூதன் எழுதிய குறிப்புகளும் இன்று குறிப்பிடத்தக்க சரித் திர ஆதாரங்களாக விளங்குகின் றன. சந்திரகுப்தனும் சாணக் கியனும் மௌரிய சாம்ராஜ்யம் என்ற ராஜ கோபுரத்துக்கு அஸ்திவாரம் போட்டு, கலசமும் வைத்துப் பார்த்தவர்கள். அவர் களுடைய ராஜ்ய விஸ்தாரமும், ராஜீய அமைப்பும் அசோகனு டைய சரித்திரத்தில் முக்கிய சக்திகளாக இலங்குவதால்தான் மேற் கண்டவாறு சந்திரகுப்த னுடைய வாழ்க்கையை விபர மாக இங்கே குறிப்பிட நேர்ந் தது.

சந்திரகுப்தன் 23 வருஷங்கள் அரசாட்சி செய்து விட்டு கி. மு. 298-ல் காலமானான். அவனுக் குப் பிறகு அவன் மகன் பிந்து சாரன் பட்டத்துக்கு வந்தான். அவன் காலத்தில் குறிப்பிடத் தக்க விஷயம், அவன் தக்கா ணத்தை ஜெயித்துத் தன் நாட்டு டன் சேர்த்துக் கொண்டதும், மௌரிய சாம்ராஜ்யத்தைக் கட் டுக் குலையாமல் பேணிக் காப் பாற்றியதும்தான். அவன் கி. மு. 273-ல் காலமானான். அவனுக் குப் பிறகு பட்டத்துக்கு வந்த வன் அவனுடைய மகன் அசோ கன். அதற்கு முன் அசோகன் வடமேற்கு மாகாணப் பிராந்திய மாகிய தக்ஷசீலத்திலும், பிறகு உஜ்ஜயினியிலும் ராஜப் பிரதிநிதி யாக இருந்திருக்கிறான். தக்ஷ சீலத்தில் இருக்கும்போது அவன் காஷ்மீரத்தையும் மௌரிய சாம் ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டானாம்.

மௌரிய சாம்ராஜ்யத்தின் சிம் மாசனத்தைப் பெறும் விஷயத் தில் அசோகனுக்கும் அவன் சகோதரனுக்கும் சண்டை ஏற் பட்டு, கடைசியில் அசோகனே சகோதரனைக் கொன்றுவிட்டு சிம்மாசனம் ஏறியதாகவும் அத் துடன் அசோகன் தன் உடன் பிறந்த சகோதரர்களை எல்லாம் கொன்றதாகவும் கதைகள்தான் வழங்குகின்றனவே ஒழிய சரித் திரச் சான்று எதுவும் இல்லை. அத்துடன் அசோகனுடைய கல் வெட்டுக்களைப்பார்த்தால் அவனு டைய சகோதர சகோதரிகள் சுகமாக இருந்ததாகவே காணப் படுகிறது. அசோகன் சிறு வயதில் மிகவும் குரூர புத்தியுடையவ னாகவும், கொலைகாரனைப் போல வும் நடந்து கொண்டதாகவும், தோற்றத்தில் அழகில்லாதவனாக வும், முன் கோபியாக இருந் ததாகவும் கதைகள் கட்டியிருக் கிறார்கள். அசோகன் பிற்காலத் தில் நல்லவனாக மாறியிருப்பதைத் தெளிவாகவும் அழுத்தமாகவும் எடுத்துக் காட்டுவதற்கென்றே

இப்படிக் கதைகள் கட்டியிருக் ரூர்கள் போலும்! இப்படிக் கதைகள் கட்டுவது சகஜமாக நடக்கும் காரியமே!

அசோகன் பௌத்தமதத்தைத் தழுவுவதற்கு முன் ஜைன மதத்த வனுக இருந்ததாகச் சிலரும் இந்து மதத்தவனுக இருந்ததாகச் சிலரும் கூறுகிருர்கள். ஜைன மதஸ்தன் என்பதை விட இந்து மதஸ்தன் என்று சொல்லுவதில் சிலபொருத் தங்கள் உண்டு. ஏனென்ருல் அஹிம்சா விரதத்துக்கென்றே மதம மாறி பௌத்த மதத்தில் சேர்ந்தவன் அசோகன். அஹிம்சா விரதம் சம்பந்தப் பட்ட மட்டில் ஜைனமதத்துக்கும் பௌத்த மதத்துக்கும் அதிகவித்தி யாசமில்லை. ஆனல், அதே சமயத் தில் இந்து மதத்தில் உயிர்ப்பலி, யாகம் முதலிய மூடப் பழக்கங் கள் இருந்து வந்தன. ஆகவே இந்து மதத்தைவிட்டுப்பௌத்தப் மதத்தைத்தழுவினுல்தான் அவன் அஹிம்சைக் கொள்கையை விரும்பியதற்குப் பொருத்த மாகத் தோன்றும். ஆனுலும் சரித்திர ஆசிரியர்களே சந்தேகப் பட்டுக்கொண் டிருக்கும் இந்தப் பிரச்னையை - உண்மை எதுவாஞ லும் - அப்படியே விட்டு விடு வோம்.

அசோகனுக்கு எத்தனை மனைவியர் என்பது தெளிவாக வில்லை என்ருலும் குறைந்தபக்ஷம் இரண்டு மனைவியர் உண்டு என்ப தற்குச் சான்று உள்ளது. அவ னுடைய இரண்டாவது மனைவி யின் பெயர் கருவாகி. அவ ளுடைய வயிற்றில் பிறந்தவன் திவாரா என்பவன். அசோக னுடைய அரண்மனையில் அழ கான அந்தப்புரம்உண்டு;விருந்து மண்டபமும் உண்டு. குதிரைச் சவாரி செய்வதும், உத்தியான வனங்களில் உலாவுவதும், வேட்டையாடுவதும் அவனுக் குப் பிடித்தமான விஷயங்கள். அதிலும் வேட்டையாடுவதில் அவனுக்கு மிகுந்த ஆசை. மயில் மாமிசத்தில் பிரியம் கொண்டவன். உல்லாசப் பிர யாணங்களிலும், குஸ்தி, நாட்டி யம், சங்கீதம் முதலியவற்றைக் கண்டு, கேட்டு அனுபவிப்பதி லும் பொழுது போக்குவான். இதெல்லாம் அவன் பௌத்த மதத்தில் சேருவதற்கு முன் பாகத்தான். சேர்ந்த பிறகு அவன் வேட்டை யாடுவதை யும், ஆடம்பரமான களியாட் டங்களையும் அறவே நிறுத்தி விட்டான்.

அசோகன் சிம்மாசனம் ஏறிய எட்டாவது வருஷத்தில் கலிங்க நாட்டின் மீது படை யெடுத் தான். கலிங்கம் வங்காள குடாக் கடலை ஒட்டி, வங்க மாகாணத்தி லிருந்து கோதாவரி வரையிலும் உள்ள பிரதேசம். இந்தப் படை யெடுப்பும் யுத்தமும் மகா பயங் கரமானது. அசோகன் முடி சூடியபிறகு செய்த யுத்தமும் இந்த ஒன்றுதான். முடிவில் அசோகனுக்குத்தான் வெற்றி கிடைத்தது; இந்தப் போரில் லட்சம் பேர் கொல்லப்பட்ட னர்; ஒன்றரை லட்சம் பேர் சிறைப்பட்டனர். செத்த வர்களோ பல லட்சம் பேர். இதை அசோகனே தன் கல் வெட்டு ஒன்றில் தெரிவித் திருக்கிருன். இந்த மிகப் பெரிய நாசத்தைக் கண்ட அசோக னுடைய மனம் மாறியது. இனி வாழ்க்கையில் யுத்தம் செய்வதே இல்லை என்று தீர்மானித்தான். மனித இதயத்தை அன்பினுல் வெற்றி கொள்ளத்தக்க மார்க்

கத்தைக் கடைப் பிடித்தான். அஹிம்சையை உத்தாரணம்செய்யும் பௌத்த மதத்தில் சேர்ந்து விட்டான். கலிங்கத்தில் இழைத்த நாசத்திற்காகத் தான் மிகவும் வருந்துவதாக அசோகன் தன் கல் வெட்டிலும் தெரிவித்திருக்கிறான். மேலும் அவன் தன் கல்வெட்டில் உருக்கமாகவும் பவ்வியமாகவும் தெரிவித்திருப்பதாவது:

"தமக்கு யாராவது தீமை செய்தாலும் புனிதமுள்ள அரசர் அதையும் தம்மால் எவ்வளவு தூரம் பொறுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் பொறுத்துக் கொள்ளுவார். புனிதமுள்ள அரசர் தம் ராஜ்யத்திலுள்ள காட்டுப் பிரதேச மக்களையும் அன்பாக நடத்தி, அவர்களுக்குச் சரியான சிந்தனா சக்தியை அளிக்க விரும்புகிறார். இதைச் செய்யாவிட்டால் புனிதமுள்ள அரசர் தம் மனதில் பக்ஷாதாபப்படுவார். ஏனென்றால் புனிதமுள்ள அரசர் எல்லா உயிர்களும் பாதுகாப்பும், சுய கட்டுப்பாடும், மன நிம்மதியும், சந்தோஷமும் பெறவேண்டுமென்று விரும்புகிறார்."

கலிங்கத்தை வெற்றிகொண்ட பிறகு அசோகன் பரிபூரணமாக பௌத்த மதத்தைத் தழுவினான். ஆனால் அசோகன் காலமாகி 900 வருஷங்களுக்குப் பின் இந்தியாவைச் சுற்றிப் பார்க்கவந்த ஹியூவன்ஸாங் என்ற சீன தேசத்து யாத்திரிகன், உபகுப்தன் என்னும் பௌத்த பிக்ஷுவின் உபதேசத்தினால்தான் அசோகன் பௌத்த மதத்தைத் தழுவியதாகச் சொல்லுகிறான். எனினும் கலிங்கத்துப் போர் தான் அசோகனுடைய மதமாற்றத்துக்குக் காரணம் என்று சரித்திர ஆசிரியர்கள் ஊகிக்கிறார்கள். இவற்றைத் தவிர, பௌத்த கிரந்தங்களில் உள்ள கதைகள், வேறு சில புத்த சந்நியாசிகள் அசோகனை மதம் மாற்றியதாகவும் கூறுகின்றது.

அசோகன் பௌத்தன் ஆன பிறகு, இந்தியாவின் நாலாபக்கங்களுக்கும் பௌத்த மதப் பிரசாரம் செய்ய தூதர்களை அனுப்பினான். தர்ம ஒழுக்கத்தையும், நல்லெண்ணத்தையும், பொதுநல சேவையையும் மக்களுக்குப் புகட்ட ஏற்பாடு செய்தான். அத்துடன் சிரியா, எகிப்து, மாஸிடோனியா, ஸைரன், எபிரஸ், மத்திய ஆசியா, பர்மா, ஸயாம், இலங்கை முதலிய வெளியிடங்களுக்கும் தன் அன்புச் செய்தியைப் பரப்பத் தன் பிரதிநிதிகளை அனுப்பினான். இலங்கைக்குப் போனவர்கள் அசோகனுடைய 20 வயது மகன் மகேந்திரனும் 19 வயது நிரம்பிய மகள் சங்கமித்திரையும்தான். அப்போது இலங்கைத் தீவை ஆண்டுவந்த திஸ்ஸா என்ற அரசன் அசோகனுடைய பெருமையைக் கேள்விப்பட்டு அவனிடத்தில் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தான். அவன், இந்த இரண்டு வாலிபத் தூதுவர்களையும் அன்புடன் வரவேற்றான். சங்கமித்திரை புத்தர்பிரான் எந்த போதி விருட்சத்தின் அடியில் ஞானோதயம் பெற்றாரோ, அந்தப் போதி விருட்சத்தின் கிளை ஒன்றைக் கொண்டு போய் இலங்கையில் அனுராதபுரத்தில் நட்டு வைத்தாள். அந்த மரம் நின்ற இடத்தில் இப்போதும் ஒரு பழைய போதி விருட்சம் (அரச மரம்) இருந்து வருகிறது. சங்கமித்திரை நட்ட அரசமரம்தானா இது, என்பதில் ஒரு பக்கத்தில் உடன்பாடும் மற்றொரு பக்கத்

தில் முரண்பாடுமாக சந்தேகமில்லை தற்சமயம் நிலவி வருகிறது.

திஸ்ஸாவும் பௌத்த மதத்தைத் தழுவினன். அவன் அந்தப் புரத்திலும் பௌத்தமதம் பிரவேசித்து விட்டது. அவனுடைய ஆதரவினாலும், அசோகனுடைய மக்களின் முயற்சியினாலும் இலங்கையில் பல பௌத்த மடங்கள் ஏற்பட்டன. பௌத்த மதமும் பரவியது. மகேந்திரனோ சங்கமித்திரையோ கல்யாணமே செய்து கொள்ளாமல் சந்நியாச வாழ்க்கை வாழ்ந்ததாகவே சொலலப்படுகிறது.

அசோகன், தான் பட்டத்துக்கு வந்த 10-ம் ஆண்டில், புத்தர் ஞானோதயம் அடைந்த இடமாகிய காயாவுக்கு யாத்திரை செய்தான். அதற்கும் 14 வருஷங்கள் கழித்து புத்தர் பிறந்த இடமாகிய லும்பினித் தோட்டத்துக்குச் சென்ருன். இது நேபாளத்தில் உள்ளது. இப்படியே புத்தர் எங்கெங்கு சென்ருரோ அங்கெல்லாம் அசோகன் சென்றிருக்கிருன். புத்தரின் ஞாபகார்த்தமாகப் பல பௌத்த விஹாரங்களையும், பௌத்தமடங்களையும் கட்டினன். கடைசியில் $2\frac{1}{2}$ வருஷகாலம் பௌத்தமடத்தில் சீடனாக இருந்து அவன் சந்நியாசத்தை மேற் கொண்டதாகச் சொல்லுகிருர்கள். சந்நியாசத்தை மேற் கொண்டாலும் அவன் தன் அரச பதவியைத் துறந்து விடவில்லை.

புத்தருடைய பொன் மொழிகளுடன், மக்கள் ஜீவஹிம்சை செய்யாமல் சகல பிராணிகளிடத்தும் அன்பு பாராட்டி ஒழுக வேண்டும் என்றும், ஆசையைத் துறந்து மக்கள் யாவரும் பரோபகாரிகளாக இருக்க வேண்டுமென்றும், தர்மவழியையாவரும் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், சகல மதத்தினரும் தத்தம் மதத்தின் நெறி முறைப்படி ஒழுகுவதற்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்றும் தேசமெங்கும் உள்ள பாறைகளிலும், கல் தூண்களிலும், குகைளிலும் செதுக்கி வைத்தான் அசோகன். மேற்கண்ட வாறெல்லாம் தானும் ஒழுகுவதாக அசோகன் குறிப்பிடுவதிலிருந்து, அவன் எப்படி ஒரு உதாரண புருஷனகவும், ராஜரிஷியாகவும் வாழ்ந்திருக்கிருன் என்பதை அறிகிருேம்.

அசோகன் பாடலிபுரத்திலிருந்து சிந்து நதிக்கரைவரையில் ஒரு பெரிய சாலை போட்டான். அதன் இருபுறமும் மரங்கள் வைத்து வளர்க்கப்பட்டிருந்தன. பிரயாணிகள் தங்குவதற்கு நடு நடுவே சத்திரங்களும், தாக சாந்திக்குத் தண்ணீர்ப் பந்தல்களும் ஏற்படுத்திபிருந்தான். பல வாசனைச் சரக்குகள் கலந்த மணமுள்ள குளிர்ந்த ஜலம் பிரயாணிகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. மேலும், கிடைத்தற்கரிய பச்சிலைகளையும், மருந்துக்குப் பயன்படும் பூண்டுகளையும் மலைகளிலிருந்து கொண்டு வந்து, உள் நாட்டில் பயிர்செய்ய ஏற்பாடு செய்தான். மிருகங்களுக்கும் வைத்திய உதவி அளிக்கப் பட்டு வந்தது.

ஓர் அரசன் அளவுக்குமீறி தர்ம கைங்கரியத்தில் இறங்கி விட்டால் ராஜ்யம் கலகலத்து விடக்கூடும். இந்தக் குறையை நிவர்த்திப்பதற்காக, "எந்த நேரத்திலும்; எந்த இடத்திலும், நான் அந்தப் புரத்தில் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் என் சயன அறையிலோ, அந்தரங்க கிருகத்திலோ இருந்தாலும்,

ரதத்திலே இருந்தாலும், அரண்மனையின் உத்தியான வனத்திலே இருந்தாலும்— அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பொதுமக்களைப் பற்றிய செய்திகளை எனக்குத் தெரிவித்துக் கொண்டே இருக்க வேண்டும் .... எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நான் பொது சேவைக்கு ஆயத்தமாக இருக்கிறேன்'' என்று அசோகன் கூறியிருக்கிறான்.

மௌரிய சாம்ராஜ்யத்தின் தலைநகராகிய பாடலிபுரம் கங்கையும் சோணை நதியும் கலக்கும் இடத்தில்இருந்தது. ஏறக்குறைய இன்றுள்ள பாட்னா நகரப் பகுதியிலேயேபாடலிபுரமும் இருந்தது. அந்த நகரம் 9 மைல் நீளமும் $1\frac{1}{2}$ மைல் அகலமும் உடையது. அதைச் சுற்றிலும் ஒரு கோட்டையும் கோட்டைக்கு வெளியே ஒரு ஆழமான அகழியும் உண்டு. கோட்டையில் 64 வாயில்களும், 574 கோபுரங்களும் உண்டு. இந்த நகரத்தை ஒரு நகர சபை பரிபாலித்து வந்தது.

அசோகனின் ராஜ்யத்தில் அஸ்ஸாம், தமிழகம் ஆகிய நாடுகளைத் தவிர இந்தியா முழுவதும் அடங்கியிருந்தது. அசோக ராஜ்யத்தின் தெற்கு எல்லை வட பெண்ணை நதி. அசோகனுடைய கல்வெட்டுக்களும் தெற்கே, மைசூரில், சித்தல்துர்க்கம் ஜில்லாவில்தான் இருக்கின்றன.

கிராம ராஜ்யமே அக்காலத்தில் அமலில் இருந்து வந்தது. கிராமப் பஞ்சாயத்துக்கள் சகல நிர்வாகப் பொறுப்பையும் ஏற்று நடத்திவந்தன. தற்காலத்தைப் போன்று போக்குவரத்து சாதனங்களில்லாத ஒரு மிகப் பெரிய சாம்ராஜ்யத்தில் எல்லாவிடங்களிலும் உள்ள விவகாரங்களை அரசன் நேரில் கவனித்துக்கொண்டிருக்கமுடியாது. ஆகவே கிராமப் பஞ்சாயத்து முறையே அக்காலத்துக்கு ஏற்ற அரசியலாகவும், நடக்கக்கூடிய காரியமாகவும் இருந்தது. நதி, கால்வாய், கடல், தரை முதலிய சகல மார்க்கங்களின் மூலமும் வியாபாரம் நடைபெற்றது. அந்நிய நாடுகளுடனும் வியாபாரம் நடந்து வந்தது. கடல் படுதிரவியங்கள், மலை படுதிரவியங்கள் முதலியவற்றைச் சேகரித்ததுடன், சுரங்கத் தொழிலும் நடைபெற்று வந்தது. நாடெங்கும் நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. பஞ்சம்,நீர், நெருப்பு முதலிய அபாயங்கள் ஏற்பட்டால் அவற்றைச் சமாளிக்க போதிய உணவுப் பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. நாலில் ஒரு பங்கு வரியாக வசூல் செய்யப்பட்டது. மற்றும் பல வரிகள் உண்டு.

அசோகனுடைய ராஜ்யத்தில் ரத, கஜ, துரக, பதாதி என்ற நால்வகைச் சேனைகளும் உண்டு. ராணுவத்துக்கு என்று ஒரு தனி இலாகாவும் இருந்தது. இப்படிப் பல இலாகாக்களின் மூலமாகவே அரசாங்கம் நடைபெற்றுவந்தது. ராஜ்யம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றில் நான்கு மாகாணங்களை அசோகனுடைய நான்கு குமாரர்களே ராஜப் பிரதிநிதிகளாக இருந்து பரிபாலித்து வந்தனர். அவர்களுடன் இராஜிகாஸ், யுக்தர்கள், உபயுக்தர்கள் போன்ற அதிகாரிகளும் ஜில்லாவாரியாகவும், தாலுகா வாரியாகவும் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தனர்.

அசோகன் காலத்தில் தண்டனைகளின் கடுமை தளர்த்தப்பட்டது. வருஷம் ஒன்றுக்கு

100-க்கு 15-க்கு மேல் வட்டி வாங்குவது மௌரிய சாம்ராஜ்தில் அனுமதிக்கப் படவில்லை. படிப்பாளிகளும், நோயாளிகளும், இளம் சிறார்களும், தரித்திரர்களும் வட்டி கொடுக்கத் தேவை இல்லை என்று சட்டம் இருந்தது. மனித வைத்தியசாலைகளும் மிருக வைத்தியசாலைகளும் ஏற்படுத்தப் பட்டன. மொத்தத்தில் அன்றைய சமூகத்தில் ஒரு உயர்ந்த அரசாட்சியை எப்படியெல்லாம் அமைக்க முடியுமோ அப்படியெல்லாம் அமைத்திருந்தனர்.

மேற்கண்ட ஆட்சி முறை சந்திரகுப்தனது ஆட்சி முறையை அனுசரித்ததுதான். ஏதோ ஒரு சில மாறுதல்களே அசோகன் காலத்தில் செய்யப் பட்டன. சந்திரகுப்தனுக்கு அரசியல் முறையைத் தயாரித்துக் கொடுத்தவன் கௌடில்யன். இவன் தன் அர்த்த சாஸ்திரத்தில், எலியையும் புலியையும் கொல்லுவது எப்படி என்றுகூடக் கூறி அதற்குச் சில சட்டங்களும் செய்திருக்கிறான்., வண்ணான் குறிப்பிட்ட காலத்தில் துணி வெளுத்துக்கொடுக்கத் தவறினால் அவனுக்கு என்ன தண்டனை அளிக்கவேண்டுமென்பதற்குக் கூடச் சட்டம் உண்டுபண்ணினான். இப்படி ஒவ்வொரு நுட்பமான விஷயத்தையும் கவனித்த அரசியல் முறை மௌரிய சாம்ராஜ்யத்தின் அரசியல் முறை. கிரேக்க மன்னன் அலெக்ஸாண்டரின் படையெடுப்பால், துண்டு பட்டுக் கிடந்த பல சிற்றரசுகள் தகர்ந்து ஒரு பெரிய அரசு தோன்றுவதற்குரிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் மௌரிய சாம்ராஜ்யம் தோன்றியது. இந்தியாவின் பல பகுதிகளையும் ஒன்று படுத்திய முதல் சாம்ராஜ்யம் மௌரிய சாம்ராஜ்யமே.

அசோகன் 41 வருஷம் ராஜ்யபாரம் தாங்கிவிட்டு கி. மு. 232-ல் காலமானான். அவனுடைய ஆயுளில் மௌரிய சாம்ராஜ்யத்திலும், மௌரிய சாம்ராஜ்யத்துக்கும், யாதொரு குறைவும் ஏற்படவில்லை. அவனுக்குப் பின் அவன் இரண்டாம் பட்டமகிஷி கருவாகியின் மகன் திவாரா என்பவன் பட்டத்துக்கு வந்தான். மௌரிய சாம்ராஜ்யத்தின் கடைசி மன்னன் பிரகத்ரதன். அவனுக்குக் கீழே தலைமைப் பதவி ஒன்றை வகித்திருந்த புஷ்யமித்திரன் என்ற சுங்க வம்சத்துப் பிராமணன், அவனைச் சிம்மாசனத்தைவிட்டுத் துரத்திவிட்டு, கி. மு. 185-ல் மகத நாட்டின் சிம்மாசனம் ஏறினான். அன்றோடு மௌரிய சாம்ராஜ்யம் முடிவு பெற்றது.

இன்று அசோகனுடைய தரும சக்கரம் நம் நாட்டுக் கொடியில் வீற்றிருக்கிறது. அசோகனுடைய தரும குணங்களும் நம் நாட்டில் வீற்றிருக்கப்பாடுபடுவது நம் கடமை.

❋

ஏமாற்றுதல்

சிலரை எல்லாக் காலமும் ஏமாற்றலாம். எல்லோரையும் சில காலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது.

—ஆப்ரஹாம் லிங்கன்

Edited, Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.
Associate Editor: G. Alagiriswami.



## தற்கால கட்டிட நிர்மாணம்

### கிராமச் சாலைகள்.

**கிராமப் புனருத்தாரணத்தில் உபயோககரமான சாலை ஓர் முக்கிய அம்சம்.**

இரண்டு பத்தியான காண்கிரீட் பாதைகள் கிராமவாசிக்கு, சமீபத்துப் பட்டணம் அல்லது வியாபாரஸ்தலம் இவற்றுடன் மிகவும் சிக்கனமுறையில், காற்று, மழையினல் பாதிக்கப்படாத சம்பந்த சாதனமாகின்றன. காண்கிரீட் சாலைகள் சரக்குகளின் போக்குவரத்தை துரிதப்படுத்துகின்றன. ஆனல், அச்சாலைகளின் நிர்வாகமோ மிகவும் குறைந்த செலவில் முடிகிறது.

மேலும், காண்கிரீட் பாதைகள் சைகிள் பிரயாணத்திற்கு வசதியாயிருப்பதன் மூலம் அவசரவைத்திய உதவி, பாங்கி, தபால் நடவடிக்கைகளுக்கு உதவியாய் இருக்கின்றன. சிறுவர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதும் கஷ்டமில்லாமல் இருக்கிறது.

மற்ற விவரங்களுக்கு:— தி காண்கிரீட அஸோஸியேஷன் ஆப் இந்தியா 9, மவுண்ட் ரோட், தபால் பெட்டி 312 மதராஸ். என்கிற விலாசத்துக்கு எழுதுங்கள்.

## தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்




## இச்சுலபமான முறையில் பார்லிக்கஞ்சி தயாரியுங்கள்

வெகு சீக்கிரமாக பார்லிக்கஞ்சி தயாரிக்க இரண்டு டீஸ்பூன் நிறைய பியூரிடி பார்லி எடுத்து சிறிது ஜலத்தில் பசைபோல் கரைத்துக்கொண்டு இரண்டு டம்ளர் ஜலம் விட்டு ஐந்து நிமிஷம் கொதிக்கவையுங்கள். பின்னர் ருசிக்குத் தகுந்தபடி எலுமிச்சைரஸம், உப்பு அல்லது சர்க்கரை சேர்த்துப்பருகவும். சௌகரியமாகப் பொடிசெய்யப்பட்ட பார்லியை உபயோகித்து, நேரமும், சிரமமும் குறையச்செய்யுங்கள். அரிசி பார்லியைப்போல எட்டு மடங்கு அதிக புஷ்டியுள்ளது.

**பியூரிடி**
**இந்தியன் பார்லி**

APEX 3 TM.

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், 20/1, சிட்லா ரோடு, கல்கத்தா
தென்னிந்தியாவிற்கு ஏஜெண்டுகள் :
**பாரி அண்ட் கோ., லிமிடெட், தபால் பெட்டி நம்பர் 12, சென்னை.**


---

# சக்தி ○ மாதப் பத்திரிகை

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி 'தபால்' | 0 8 | ஒரு வருஷம் | 6 0 |
| ஆறு மாதம் | 3 8 | 2 வருஷம் | 11 0 |

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு
0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

**பர்மா**

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி | 0 9 | ஆறு மாதம் | 4 0 |
| ஒரு வருஷம் | 7 0 | 2 வருஷம் | 13 0 |

**மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு**

| | | | |
|---|---|---|---|
| தனிப் பிரதி | 0 10 | ஆறு மாதம் | 4 8 |
| ஒரு வருஷம் | 8 0 | 2 வருஷம் | 15 0 |

## சக்தி காரியாலயம்
**சென்னை 14.**

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

# சக்தி வாய்ந்த நூல்கள்

**அபேதவாதம்** ரூ. 1 0

ராஜாஜி எழுதியது—பொது உடைமை என்றல் என்ன? பொது உடைமையால் என்ன நன்மை ஏற்படும் என்ற விவரங்களைத் தெளிவாக விளக்கும் அரிய புத்தகம். தி. ஜ. ர. தமிழாக்கியது.

**ஏசுநாதர் போதனை** 1 8

ஜே. ஸி. குமரப்பா எழுதியது. மகாத்மா காந்தி முகவுரையுடன். ஏசுநாதர் இந்த உலகத்தில் அவதரித்ததின் தத்துவம் யாது? அவருடைய போதனைகளால் மக்கள் அடையக்கூடிய பயன்கள் பற்றி இந்த நூலில் ஆசிரியர் விளக்கி யிருக்கிறார்.

**முத்ரா ராக்ஷஸம்** 1 8

ஆசிரியர்: விசாகதத்தர். தமிழாக்கியவர்கள்: வே. ஸ்ரீநிவாச சாஸ்திரி சிரோமணி, தே. ஸ்ரீநிவாசாச்சாரியார் சிரோமணி—'சாணக்கிய சந்திரகுப்தரைப் பற்றிய பிரபலமான கதையான விசாகதத்தரின் அரசியல் நாடகம் சமஸ்கிருத இலக்கியத்திலேயே இணையற்ற தன்மை வாய்ந்தது. எளிய தமிழில் மொழி பெயர்ப்பது சிரமமான காரியமே ஆனலும் மொழி பெயர்ப்பாளர் இருவரும் தெளிவாக மொழி பெயர்த்திருக்கின்றனர். ஹிந்து 8-8-1948

**சக்தி பிறக்குது** 0 6

'சுரபி' பாடியது. 1947 ஆகஸ்டு 15உ சுதந்திரத் திருநாளில் பாடப் பெற்ற கவிதைத் தொகுதி.

**உலோகங்களும் நாமும்** 5 0

மு. அருணசலம் எழுதியது. உலோகமும் நாமும், உலோக உலகம், உலோகத் தாது, உலோகங்கள் கிடைக்கும் விதம், இரும்பு, மற்ற முக்கிய உலோகங்கள், உலோகத் தொழில் பற்றிய அரிய விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன.

**லெனின் பிறந்தார்** 3 8

ஆர். ராமநாதன் எழுதியது. ருஷ்யாவின் தந்தை லெனின் வரலாறுதான் இந்த நூல். இந்த நூலைப் படித்தால் ருஷ்யப் புரட்சிச் சரித்திரத்தையும் கூடவே படிப்பதுபோல இருக்கும்.

**இனி நாம் செய்யவேண்டுவது யாது?** 3 0

டால்ஸ்டாய் எழுதியது. உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்னும் அரிய சித்தாந்தம்.

**சக்தி காரியாலயம் சென்னை - 14**

## இப்பொழுது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது

பெங்களூர் —ஸைபர் & ஸ்ரீ
சேலம் —ஷண்முகா
பாண்டிச்சேரி —கமர்ஷியல்
வேலூர் —கிரௌன்
காஞ்சீவரம் —கண்ணன்
பாலக்காடு —கௌடர்

**ஆகஸ்டு 17உ முதல்**

எர்ணாகுளம் —மேனகா
செங்கோட்டை —ஜெயலக்ஷ்மி
நாகர்கோவில் —கிருஷ்ணா



# பக்த ஜனா

(தமிழ்)

ஹொன்னப்ப பாகவதர், சாந்தகுமாரி, நாகையா
K. R. செல்லம், சாரங்கபாணி, பந்துலு, பட்,
T. N. மீனாக்ஷி, லலிதா, பத்மினி முதலியோர் நடித்த

டைரக்ஷன்: P. புல்லையா, B.A., ஸ்டுடியோ ப்ர.

## ராகினி பிலிம்ஸ்

125. ராயப்பேட்டை ஹைரோட்
மைலாப்பூர் :: மதராஸ்

# உங்கள் வியாபாரம்

★

உங்கள் வியாபாரம் செழிக்க வேண்டுமானால் காகிதம், கவர், ரசீதுப் புத்தகம், விசிடிங் கார்டு எல்லாம் அழகாக இருக்க வேண்டும். அவைகளை அழகுடன் செய்து தருவதற்கு சென்னையில் பெயர் பெற்ற அச்சுக்கூடம் நடைபெறுகிறது. அதன் பெயர்.



## சக்தி பிரஸ் லிமிடெட்

115-E மோபரீஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை 14.

டெலிபோன் : 8135





எங்கள் சுதந்திர தின
வாழ்த்துக்கள்

No. 1506 அசோகா ASOKA முத்திரை நெ. 1506

எம். கே. கிருஷ்ண செட்

'அசோகா பாக்டரி' :: கோயமுத்